R & C PROPERTY LAWYERS LLP
& NOTARY PUBLIC
10a Upper Tooting Road, London SW17 7PG
Telephone: 02087724920
Conveyancing Services:
Residential, Commercial Conveyancing,
Notarial Services:
Notarisation & Legalisation of Documents
Power of Attorneys,
SENTHURAN THAVARAJA LLB (Hons) Solicitor & Notary Public
Consultant : RAJA THAVARAJA LLB Solicitor

A Freely Circulated Monthly
# புதினம்
PUTHINAM
SEPTEMBER 2017
மலர் 21
இதழ் 7

LINGA & CO
LEGAL ADVISORS AND IMMIGRATION SPECIALISTS
V.P.Lingajothy
LLB (Hons), MSc, Dip Fms, Acilex
Principal, Immigration Specialist
46 HIGH STREET COLLIERS WOOD
LONDON SW19 2BY
TEL: (020) 8544 9285 FAX: (020) 8542 9530
EMAIL : LJLEGALADVISORS@YAHOO.CO.UK
OISC

லண்டனில் முதலாவது தமிழர் நகை மாளிகை
WESTERN Jewellers
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
Tooting Branch:
230 Upper Tooting Road, London Sw17 7EW
Tel : 02087673445
Wembley Branch:
5, Plaza Parade, 29-33 Ealing Road, Wembley, MiddX HAO 4YA
Tel : 02089030909

THARANI JEWELLERY
அதி குறைந்த வட்டி வீதத்தில்
அடைவு பிடிக்கும் நகை மாளிகை
54 Ealing Road, Wembley, Middlesex HA0 4TQ.
Tel: 020 8902 7111, 020 8902 6777

# தமிழக அரசியல் ஆட்டம்!

அம்மாவின் ஆன்மா பேரினால் தமிழகத்தில் நடக்கும் சதிராட்டங்கள் நாளாந்த காட்சிகளாக அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

ஒரு கட்சி உடைவதும், அந்த அணிகள் இணைவதும், மூன்றாவது அணி பிரிந்து, சசிகலாவின் 'கூவத்தூர்' பாணியில் பாண்டிச்சேரியில், சொகுசு விடுதியில், தினகரன் தலைமையில், பணப் பலத்தைக் கொண்டு 'கோமாளிக் கூத்து' ஆடுவதும் இப்போதைய உச்சம்.

ஜெயலலிதா முன் வாய் பொத்தி, கைகட்டி, கால் தடவி மரியாதைக்குரிய 'படிதாண்டா' பக்தன் பன்னீர், 'ஊழல் ஆட்சி' எனப் பிரகடனப்படுத்திய முதல்வர் எடப்பாடிக்கு துணை முதல்வராகி விட்டார்!

நாட்களை வீணாகக் கழித்து, ஆட்சியில் இல்லாமல், திட்டித் தீர்ப்பதால், நாளாந்த கோடி வரவுகளை இழந்து கொண்டிருக்கிறோம் என்பது பன்னீரின் அனுபவம். அம்மா ஆட்சியில் ருசிகண்ட பூனை!

'இரட்டை இலை'யை மீட்பதற்காக இணைந்ததாக சொன்னாலும், எல்லாமே மோடியின் 'திருவிளையாடல்'! 136 எம்.எல்.ஏக்களுடன் தனிப் பெரும் கட்சியாக அ.தி. மு.க ஆட்சியை விட்டுச் சென்ற ஜெக்கு எடப்பாடியும், பன்னீரும் என்ன செய்கிறார்கள்? மோடி முன் 'இரும்பு மனுஷியாக'ச் சவால்விட்டு, அசைக்க முடியாதவராக தலை நிமிர்ந்து தமிழகத்தை ஆண்டவர் ஜெயலலிதா! ஆனால் எடப்பாடியும், பன்னீரும் மோடிக்கு அடிமைசாசனம் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்!

கோடி கோடியாக வைத்திருக்கும் பணத்தைக் கொண்டு தினகரன் இருபது எம்.எல்.ஏக்களை விலைக்கு வாங்கி விடுதியில் வைத்திருக்கிறார். இவர்கள் மூலம் திமுகவுடன் சேர்ந்து ஆட்சிக் கவிழ்ப்பு செய்ய முடியாதபடி இந்த எம்.எல்.ஏக்களின் பதவிப் பறிப்பு சபாநாயகர் மூலம் நடக்கலாம். அந்த எம். எல்.ஏக்கல் கோர்ட்டுக்கும் போகலாம்.

ஜெ மரணத்தை வைத்து தண்டனையில் இருந்து தப்ப நினைத்த வி.கே. சசிகலாவுக்கு சுப்ரீம் கோர்ட் சம்மட்டி அடி கொடுத்தது. பணத்தைக் கோடி கோடியாக அள்ளிக் கொடுத்து சிறைக்குள் சொகுசு வாழ்க்கையை அனுபவித்த சசிகலாவின் பொதுச் செயலாளர் பதவியும் விரைவில் பறிபோகிறது.

தினகரனின் கட்டுப்பாட்டிலுள்ள நமது எம்.ஜி.ஆரும், ஜெயா டிவியும் விரைவில் பன்னீர் - எடப்பாடி கைக்கு மாறப்போகிறது. அதிமுக கட்சி அலுவலகத்தில் துணைப் பொதுச் செயலாளராக தினகரன் எந்த அறையில் செயல்பட்டாரோ அந்த அறையில்தான் பன்னீர் செயல்படுகிறார். எடப்பாடியும் பன்னீரும் டில்லி சென்றிருக்கின்றனர். 'இரட்டை இலை' கைக்கு மாறிவிடும். இப்படிக் குழப்பங்களோடு தமிழக அரசியல் ஆட்டம் நான்கு வருடங்களுக்கு தொடருமா?

SkyWings Travel
Your Travel Is Our Passion...
23 YEARS
FLIGHT SALE NOW ON!
COLOMBO £390.00
CHENNAI £389.00
TORONTO £302.00
23 ஆண்டுகள்
லண்டனில் தமிழர் விமான பயண நிறுவனம்
மலிவு விலையில் நிறைவான சேவை
HURRY BOOK NOW! LIMITED OFFER!!
119, Tooting High Street, London, SW17 OSY
T: 020 8672 9111
* Above fares are subject to availability. T&Cs Apply.
IATA

செல்வராஜா கோல்டு ஹவுஸ்
Tooting Broadway
நகைகள் அனைத்தும் நம்ப முடியாத விலைக் கழிவில்!
162 B, MITCHAM ROAD, LONDON SW17 9NJ
TEL: 020 87673795

LycaFly
call us 24X7
0207 132 32 32
Colombo பயணமா?
எங்குமில்லாத சிறப்பு சலுகை.
PLUS
FREE LYCAMOBILE TOP-UP
*T&Cs Apply - Top-up offer excludes on selected airlines

தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS JEWELLERS
276, High Street North, London E12 6SA,
Tel: 020 8470 5600 FAX: 020 8470 3448


Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
9th Sep 2017
MUSIC BOSS D IMMAN
LIVE IN LONDON
THE SSE ARENA, WEMBLEY
ஒருவருட
இணைப்புச் சந்தா
£99
மட்டுமே
SET TOP BOX
INCLUDED
GET 2 FREE TICKETS
WHEN YOU BUY A NEW SET TOP BOX
விஜய்
தமிழ்
KTV
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
UNITED KINGDOM
0207 132 2727
Go Online
www.lycatv.tv
www.lycatv.tv

# வடக்கிலும் தெற்கிலும் குரங்குவாலாக நீளும் பதவி பறிப்புகளும் பதவி விலகல்களும்!

சிங்கள அரச மையத்தில் கடந்த மாதம் இரண்டு பிரதான அமைச்சர்கள் தங்கள் பதவிகளை இழந்துள்ளனர்.

அதற்கு நிகராக வடமாகாண அரசியல் அரங்கிலும் இதே மாதம் இரண்டு அமைச்சர்கள் பதவிகளை இழந்துள்ளனர்.

என்ன ஒற்றுமை இது! எவ்வாறு இதனை வர்ணிப்பது!

மழை விட்டும் தூவானம் போகாத கதையாக ஓடிக் கொண்டிருக்கும் வடமாகாண அரசியலில் அடுத்து என்ன நடக்குமென்று அதன் பங்குதாரர்களாலேயே ஆருடம் கூற முடியாதவாறு நாளுக்குநாள் அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கப்படுகிறது.

தமக்கிருந்த ஆதரவை முதலமைச்சர் விக்கினேஸ்வரன் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருவதாக ஒரு பகுதியினர் சொல்கின்றனர்.

இவரது ஆதரவுத் தளம் இவரது செயற்பாடுகளினால் கூடிக்கொண்டு போவதாக இன்னொரு பகுதியினர் கூறுகின்றனர்.

வடமாகாண சபை உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து அமைச்சர்களாகவிருந்த நால்வரில் ஐங்கரநேசன், குருகுலராஜா ஆகிய இருவரும் ஏற்கனவே பதவி விலகி விட்டனர்.

தமிழரசுக் கட்சி எடுத்த தனியான முடிவுக்கிணங்க சத்தியலிங்கம் இந்த மாத ஆரம்பத்தில் தமது அமைச்சர் பதவியிலிருந்து விலகினார்.

எஞ்சியிருந்த டெனீஸ்வரன் மட்டுமே சிக்கலுக்குள்ளாகியிருந்தார். இரண்டு வார இழுபறிக்குப் பின்னர் இவரது ரெலோ கட்சி இவரை ஆறு மாதங்களுக்கு இடைநிறுத்த முடிவெடுத்தது.

அதேசமயம் இவரை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, அந்தப் பதவியை ரெலோவின் மற்றொரு உறுப்பினரான விந்தன் கனகரத்தினத்துக்கு வழங்குமாறு முதலமைச்சருக்கு கடிதம் மூலம் ரெலோ அறிவித்தது.

முன்னுக்குப்பின் முரணான அறிக்கைகளை விட்டு பிரபல்யமான டெனீஸ்வரன், தாம் ரெலோவின் உறுப்பினர் அல்லவென்றும், அதனால் தம்மை பதவி நீக்க ரெலோவுக்கு அதிகாரமில்லையென்றும் விளையாட்டுத்தனமாக அறிக்கைவிட்டு பலரதும் சிரிப்புக்கு இடமானார்.

அத்துடன் நிற்காது, அமைச்சுக் கடிதத் தலைப்பை பயன்படுத்தி ஆளுனரையும் முதலமைச்சரையும் எச்சரிக்கும் வகையில் தம்மைப் பதவி நீக்கினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் கடிதங்களை அனுப்பி ஊடகங்க;டாக பரபரப்பை ஏற்படுத்தினார்.

இது எதற்கும் மசியாத முதலமைச்சர் தமக்கிருக்கும் தற்துணிவு அதிகாரங்களைப் பயன்படுத்தி இவரை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கியதோடு இவரின் இடத்துக்கும் சத்தியலிங்கத்தின் இடத்துக்கும் புதிய அமைச்சர்களையும் நியமித்தார்.

புதிய அமைச்சர்கள் அனைவரும் ஆளுனரின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் எடுத்தனர். ஆனால் ரெலோ தரப்பிலிருந்து புதிய பிரச்சனை கிளம்பியுள்ளது.

ரெலோவின் தெரிவான விந்தன் கனகரத்தினத்துக்கு அமைச்சர் பதவி கொடுக்காது ரெலோவின் இன்னொரு உறுப்பினரான மருத்துவர் குணசீலனை புதிய சுகாதார அமைச்சராக முதலமைச்சர் நியமித்ததை ரெலோ ஏற்றுக் கொள்ளவில்லை.

முதலமைச்சரைக் கண்டித்துள்ளதுடன் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி அமைச்சர் பதவியை ஏற்ற குணசீலன் மீதும் நடவடிக்கை எடுத்துள்ளது.

"கட்சி நலம் கருதி சிபாரிசு செய்வது உங்கள் பொறுப்பு. ஆட்சி நலம் சார்ந்து நடவடிக்கை எடுப்பது முதலமைச்சர் பொறுப்பு' என்று முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தெரிவித்திருப்பது மாகாண சபையிலுள்ள சகல கட்சியினரையும் கண் விழிக்கச் செய்திருக்கும் வாசகம்.

முதலமைச்சர் விக்கினேஸ்வரன் சாணக்கிய அரசியல் செய்கிறாரா அல்லது சாதுரிய அரசியல் செய்கிறாரா அல்லது சட்டரீதியான அரசியல் செய்கிறாரா என்பது பலருக்கும் புரியாத புதிராகவுள்ளது.

சிங்கள அரசியல் போக்கு வடக்கின் அரசியல் போக்குக்கு பெரிதளவில் வேறுபட்டதாகக் காணப்படவில்லை.

ஐக்கிய தேசிய கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் சேர்ந்தே 2015ல் உருவானது தற்போதைய நல்லாட்சி அரசு.

சுதந்திரக் கட்சி இரண்டாகப் பிளவுபட்டிருப்பது ஐக்கிய தேசிய கட்சியைப் பொறுத்தளவில் தனது நிலைப்பாட்டை அது பலப்படுத்த ஏற்படுத்திக் கொள்ளும் அரசியல் வாய்ப்பு.

மகிந்த தலைமையிலான கூட்டு எதிரணி சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்தி வைத்திருப்பது நல்லாட்சிக்குள் மைத்திரி அணியை பலவீனப்படுத்துவது.

ஆனால் இப்பொழுது நடைபெறும் சம்பவங்கள் ஏதோவொரு வகையில் ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சியை பலவீனப்படுத்துகிறது.


நிதி அமைச்சராகவிருந்த ஐக்கிய தேசிய கட்சியின் உபதலைவர் ரவி கருணநாயக்க இரு மாதங்களுக்கு முன்னர் வெளிவிவகார அமைச்சராக மாற்றப்பட்டார்.







**காணாமல் போனோருக்கான அலுவலகம் அமைத்தல், புதிய பயங்கரவாத சட்டத்தை அமுலாக்கல் போன்றவை ஜெனிவாத் தீர்மானத்துடன் சம்பந்தப்பட்டவை என்ற வகையில், அதற்கான உயர்மட்டக் குழுவில் இடம்பெற்ற இரு அமைச்சர்கள் இல்லாமற் போனதால் உருவாகியிருக்கும் தேக்க நிலையை தமிழர் தலைமை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.**







இந்த மாதம் 10ம் திகதி அவர் அப்பதவியிலிருந்து விலக நேர்ந்தது. மத்திய வங்கியின் பிணைமுறிப்பு ஊழலில் இவர் சம்பந்தப்பட்டது ஓரளவுக்கு உறுதியானதே இதன் காரணம்.

அமைச்சர் பதவியை இழந்தபோதிலும் அப்பதவிக்குரிய சகல சௌகரியங்களையும் அவர் தொடர்ந்து அனுபவித்து வருவதாக மகிந்தவின் கூட்டு எதிரணி குற்றஞ்சாட்டி வருகின்றது.

ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த மற்றொருவரான நீதி மற்றும் பௌத்த சாசன அமைச்சர் விஜேதாச ராஜபக்ச இந்த வாரம் பதவி இழந்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைவரின் கோரிக்கையை ஏற்று ஜனாதிபதி விடுத்த உத்தரவின்பேரில் இவர் பதவி இழந்ததாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் பதவி இல்லாதபோதிலும் ஐக்கிய தேசிய கட்சியிலேயே தாம் தொடர்ந்து இருக்கப் போவதாக தெரிவித்துள்ள விஜயதாச ராஜபக்ச, சிங்கள தேசத்துக்கு மாற்றுத் தலைமை இப்போது தேவைப்படுவதாக தெரிவித்திருப்பது நல்லாட்சிக்கு விடுக்கப்பட்டிருக்கும் ஒருவகைச் சவால்.

(தமிழர்களுக்கும் ஒரு மாற்றுத் தலைமை வேண்டுமென்று கோரிக்கை கடந்த சில மாதங்களாக மேலெழுந்து வருவதை இங்கு கவனிக்கலாம். இரு சமூகங்களுக்கிடையிலும் உருவாகியிருக்கும் ஒரேயொரு ஒற்றுமை இதுமட்டுமே).

இரண்டு சிங்கள அமைச்சர்கள் பதவியிலிருந்து போயினர் என்பதை தமிழர் தரப்பு சாதாரண செய்தியாகப் பார்க்க முடியாது.

இதற்குக் காரணம் 2015ம் ஆண்டு இலங்கை அரசின் அனுசரணையுடன் அமெரிக்கா ஜெனிவாவில் முன்னெடுத்து நிறைவேற்றிய இலங்கை தொடர்பான தீர்மானம்.

இந்தத் தீர்மானம் இதுவரை செல்லாக்காசாகவே இருந்து வருகின்ற போதிலும், இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும் செயற்பாடுகளை கண்காணித்து இணைத்து அமுலாக்கவென ஏழு அமைச்சர்களைக் கொண்ட உயர்மட்டக் குழுவொன்று அண்மையில் அமைக்கப்பட்டது.

பிரதமர் ரணில் தலைமையிலான இக்குழுவில் அமைச்சர்களான ரவி கருணநாயக்க, விஜேதாச ராஜபக்ச, மகிந்த சமரசிங்க, திலக் மாரப்பன, ருவான் விஜேவர்த்தன, ஹர்சா டி சில்வா ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இவர்களுள் ரவி கருணநாயக்கவும் விஜேதாச ராஜபக்சவும் அமைச்சர் பதவிகளை இழந்துள்ளதால் தொடர்ந்து இக்குழுவில் இருக்க முடியாது.

2017 மார்ச் மாதத்திலிருந்து 2019 மார்ச் மாதம்வரை ஜெனிவா தீர்மானத்தை செயற்படுத்தும் வழிவகைகளை கண்காணிக்கவென இக்குழு இரண்டு மாதங்களுக்கு முன்னரே நியமிக்கப்பட்டது.

ஆனால் இந்தக் காலப்பகுதியில் ஒரு தடவைதானும் இக்குழு கூடவில்லை.

சில வாரங்களுக்கு முன்னர் இலங்கைக்கு விஜயம் செய்த ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் பென் எமர்சனுடன் விஜேதாச ராஜபக்ச நேரடியாக வாய்த்தர்க்கம் புரிந்து அரசை நெருக்கடிக்குள் தள்ளியதும் இங்கு மறக்க முடியாதது.

காணாமல் போனோருக்கான அலுவலகம் அமைத்தல், புதிய பயங்கரவாத சட்டத்தை அமுலாக்கல் போன்றவை ஜெனிவாத் தீர்மானத்துடன் சம்பந்தப்பட்டவை என்ற வகையில், அதற்கான உயர்மட்டக் குழுவில் இடம்பெற்ற இரு அமைச்சர்கள் இல்லாமற் போனதால் உருவாகியிருக்கும் தேக்க நிலையை தமிழர் தலைமை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்தவரான சுகாதார அமைச்சர் ராஜித சேனரத்ன மீதும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர மகிந்தவின் கூட்டு எதிரணி கையெழுத்து சேகரித்து வருகிறது.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பது இப்படியாக குரங்கு வால்போல் நீளுமானால், நல்லாட்சி அரசு தொடர்ந்து ஆட்சி புரிய முடியாத நிலைமை ஏற்படக்கூடும்.●

# புதினம்
PUTHINAM


லண்டன் தமிழர்களின்
அபிமான இலவச இதழ்

ஆசிரியர்:
ஈ.கே.ராஜகோபால்
E.K.Rajagopal

வடிவமைப்பு
சத்யன் லே–அவுட்
9551395516

அலுவலக முகவரி:
PUTHINAM
38 MOFFAT ROAD
LONDON SW 17 7EZ
TEL: 020 8767 8004
MOB: 077 353 46890
EMAIL:
editor@londonputhinam.co.uk

'ஈழகேசரி' வெளியீட்டு நிறுவனத்துக்காக 20 ஆண்டுகளாக வெளிவரும் இலவச இதழ். தபாலில் பெற விரும்புவோர் முத்திரைச் செலவான 25 பவுண்களை மட்டும் Puthinam என்ற பெயருக்கு காசோலையாக அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.



## நீங்களும் படித்து பட்டம் பெறலாம்

தமிழ் மொழியில் படித்து,
B.A. (Tamil), B.A (Applied Tamil)
M.A. (Tamil), B.Lit. (Tamil pulavar)
MBA (General– பொது முகாமைத்துவம்)
பட்டம் பெற வேண்டுமானால் இன்றே
இப்போதே தொடர்பு கொள்ளுங்கள்.

**WESTERN TAMIL SCHOOLS FEDERATION**
07958408280/07946937000/02085400705
WWW.Wtsf.org.uk.
Web: WWW.b–u.ac.in WWW.Wtsf.org.uk.
email: joseph.vilvaraj@gmail.com/
kanmanohar@gmail.com

## யாழ் மாவட்டத்தில் தோட்டக் காணி தேவை

யாழ்ப்பாண மாவட்டத்தில், எங்களுக்கு
தோட்டக் காணி தேவை,
தொடர்பு கொள்ளவும்
07960761606

## பெண் உதவியாளர் தேவை

Croydon பகுதியில் தமிழ் வீட்டில் குழந்தையைப் பார்ப்பதற்கு பெண் உதவியாளர் தேவை. வீட்டிலும் உதவியாக இருக்க வேண்டும். திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை வேலை நாட்கள் தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள்.
07958408280

Looking for an
## ACCOUNTANT ?
We are next to you!
We provide solutions for your Accountancy needs



உங்கள் தனிப்பட்ட மற்றும் வியாபார
ACCOUNTANCY
தேவைகளுக்கு
LONDON இல்
இயங்கும் தனித்துவமான ஸ்தாபனம்

Initial consultation is free
No fee for first three months

P & K ASSOCIATES
CIMA
PRACTISING CERTIFICATE HOLDER
183. Burnt Oak Broadway,
Edgware. Middlesex.
HA8 5EH

020 8958 8883
079 1613 4976
(Mr.P. Navendran)
www.pandkgroup.co.uk
pandkassociates@aol.com



LOTUS TODAY
LIFE COACHING
THERAPY
MEDITATION
வாழ்வியல் சாதனை பயிற்சி
தியானம்
உள வள ஆலோசனை

மாற்றம் ஒன்றே மாறாதது... நீங்கள் விரும்பும் மாற்றம் உங்கள் வாழ்விலும்

தன்னம்பிக்கை மேம்பாடு | விரும்பும் உடல் எடை
உள - உடல்- ஆரோக்கியம் | தொழில்-கல்வி முன்னேற்றம்
குறிக்கோள்-இலக்கு நிர்ணயித்தல் | அச்சத்தில் இருந்து ஆற்றலுக்கு..
குடும்ப-நட்பு- தொழில் உறவுகள் சீராக்கம் | அமைதி- மனவளம் -ஆளுமை விருத்தி
இன்னும் வாழ்வின் அத்தனை அம்சங்களிலும் நிறைவு நோக்கிய பயணம்

பிரத்தியேக சந்திப்பு | குழு வகுப்புகள் | இணைய நிகழ்வுகள் | இணைய வழி துணை படைப்புக்கள்
உங்கள் தனித்தன்மைக்கும் தேவைக்கும் உரியவாறான சிறப்பு பயிற்சி திட்டங்கள்
இரகசியம் முழுமையாக பாதுகாக்கப்படும்

Special mindfulness for DIABETES

WWW.LOTUSTODAY.COM
சாம்.தினேஷ் குமார் M.A in Philosophy
NLP Practitioner,
Dip. in Hypnotherapy
Reiki healing master practitioner
07889665195

Confidence and Focus Booster for 11+ STUDENTS

02081337020 lotustoday hello@lotustoday.com


## உயர்வாசற்குன்று முருகன் கோவில்
## HIGHGATEHILL MURUGAN TEMPLE
200A, Archway Road, London N6 5BA Tel: 020 8348 9835 Fax: 020 8482 6508

### திருவிழாக்களும் விசேட பூசைகளும்
### Aupicious Days, Special Poojahs & Festivals - 2017

### செப்டம்பர் –2017 நடைபெறும் நிகழ்வுகள்

| | | | |
|---|---|---|---|
| 01 | Friday | Ekathasi Viratham | ஏகாதசி விரதம் |
| 03 | Sunday | Aavani Onam, Pirathosa Viratham | ஆவணி ஓணம். பிரதோச விரதம் |
| 04 | Monday | Nadaser Abishrgam -4 | நடேசர் அபிசேகம் – 4 |
| 05 | Tuesday | Full Moon | பூரணை |
| 06 | Wednesday | Malaya Padsam Starts | மாளய பட்சம் ஆரம்பம் |
| 09 | Saturday | Sankadakara Chathurthi* | சங்கடகர சதுர்த்தி* |
| 10 | Sunday | Maha Parani | மகா பரணி |
| 11 | Monday | Karthigai Viratham* | கார்த்திகை விதைம்* |
| 12 | Tuesday | Sri Krishana Jejanthi | ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி |
| 16 | Saturday | Ekathasi Viratham | ஏகாதசி விரதம் |
| 17 | Sunday | Pirathosha Viratham | பிரதோச விரதம் |
| 19 | Tuesday | Malaya Ammavasai | மாளய அமாவாசை |
| 20 | Wednesday | Navarathiri Pooja Starts | நவராத்திரி பூசை ஆரம்பம் |
| 23 | Saturday | Chathurthi Viratham,* Luxmy pooja starts, Puradasi Sani | சதுர்த்தி விரதம்*, புரட்டாதிச்சனி |
| 25 | Monday | Sasti Viratham | சஷ்டி விரதம் |
| 27 | Wednesday | Saraswathy Pooja Starts | சரஸ்வதி பூசை ஆரம்பம் |
| 29 | Friday | Maha Navami, Saraswathy Pooja | மகா நவமி, சரஸ்வதி பூசை |
| 30 | Saturday | Vijaya Thasamy,* Puradasi Sani 2 | விஜயதசமி, * புரட்டாதிச்சனி2 |
| | | Ketharagowri Viratham Starts | கேதாரகௌரி விரதம் தொடக்கம் |



# விமலின் பக்கம்

ஒரு நாட்டில் பொதுமக்களில் ஒரு சாராருக்கும் அரசுக்கும் இடையில் மோதல் ஏற்படும்போது அரசு அந்த மக்களைக் “கிளர்ச்சிக்காரர்கள் பயங்கரவாதிகள்” என்று உடனடியாகவே நாமம் சூட்டிவிடுகிறது. ஆனால், தமக்காகப் போராடும் குழுவினரை பொதுமக்கள் “போராளிகள்› விடுதலை வீரர்கள்” என்று வாயார வாழ்த்துகிறார்கள். இந்தியாவில் சுபாஷ் சந்திரபோஸ் பகத்சிங் தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலா தென் அமெரிக்காவில் கியூபாவின் சேகுவேரா - இப்படியாக வரலாற்று நூல்களில் இந்த காவிய நாயகர்கள் மறைந்து விட்ட மலர்களாக மணம் வீசிக் கொண்டிருக்கிறார்கள்.

எங்கள் தாய் மண்ணில்› விடுதலை கேட்டு வீர மைந்தன் புறப்பட்டபோது, அப்போதைய அரசின் ஆக்கிரமிப்புப் படைகள் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியபோது “அமைதி காக்கிறோம்” என்று வடக்கில் இருந்து வந்திறங்கியது அமைதி காக்கும் இந்தியப் படை(*IPKF*).

அந்தப் படைகள் அமைதி காத்ததா - இல்லை அமைதியை மேலும் குலைத்து விட்டதா என்பதை எதிர்கால வரலாற்று ஆசிரியர்கள் நிச்சயமாக தெளிவாக ஆராய்வார்கள்.

யூகோஸ்லாவியா என்ற நாட்டையும் அதன் தலைவர் மார்ஷல் ரிற்றோ அவர்களையும் 1960-களுக்கு முன் பிறந்த இலங்கையர்கள் மறந்திருக்க மாட்டார்கள். அமெரிக்க அணி› ரஷ்ய கொம்யூனிச அணி என்ற அணிகள் எதிலும் சேராமல் மூன்றாவது புதிய அணியாக “அணி சாரா நாடுகள் அமைப்பு” *NON ALIGNED NATIONS* என்ற அமைப்பை உருவாக்கிய பிதாமகர் ரிற்றோ.

யூகோஸ்லாவியாவில் 1956 ஜூலையில் உருவாக்கப்பட்ட இதற்கான உடன்படிக்கையில் யூகோஸ்லாவியா அதிபர் ரிற்றோ› இந்தியப் பிரதமர் நேரு, எகிப்திய அதிபர் நாசர் ஆகியோர் கைச்சாத்திட்டார்கள். ஐ.நா. மன்ற உறுப்பு நாடுகளில் மூன்றில் இரண்டு பங்கு நாடுகள் இந்த அமைப்பில் இணைந்தன.

நல்ல மனிதன் ரிற்றோ நினைத்தது ஒரு கணக்கு - விதி போட்டது ஒரு தப்புக் கணக்கு! மதத்தால் - இனத்தால் வேறுபட்ட 7 குட்டிக் குடியரசுகளை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட மாபெரும் யூகோஸ்லாவிய சாம்ராஜ்யத்தில் மத வெறி› அரசியல் அதிர்வெடிகள் 1980-ல் உருவாகி 1990-ல் உச்சக் கட்டத்தை அடைந்தன.

*BOSNIA, HERZEGOVINA*, சேர்பியா, மொன்ரிநிக்ரோ மசடோனா கொர்சேவோ ஆகிய 7 குட்டிக் குடியரசுகளுக்கு இடையில் புகைந்து கொண்டிருந்த இனவெறி யூகோஸ்லாவியா என்ற பெருவிருட்சத்தின் கிளைகளுக்கு இடையில் காட்டுத் தீயாகப் பரவி, யூகோஸ்லாவியா என்ற பெருவிருட்சத்தையே எரித்துச் சாம்பலாக்கி அதன் பெயரே இல்லாமல் செய்தது. 1980-ல் பிதாமகர் ரிற்றோவின் மரணத்துடன் தந்தை இல்லாத தறுதலைப் பிள்ளைகள் போல அல்பேனியர்கள் கொசோவோக்காரர்கள் பல் இன மக்கள் வாழும் பொஸ்னியா ஆகியன சண்டையிட்டு சண்டைகளினால் அரசியல் நஷ்டமும் பொருளாதாரச் சிதைவும் ஏற்பட்டது.

மிலசோவிச் என்ற சேர்பிய இராணுவ மிலேச்சனின் கையில் பொஸ்னிய முஸ்லிம் மக்கள் இன அழிப்புச் செய்யப்பட்டார்கள். 1992 முதல் 1995 வரையிலான காலப் பகுதியில் ஒரு லட்சம் பேர் கொல்லப்பட்டார்கள், 20 முதல் 50 ஆயிரம் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டார்கள்.



**குடும்பங்களையும் தம் உடலையும் பலி கொடுத்த பொஸ்னிய பெண்கள்**




**அமைதி காக்க சென்ற ஐநா காவல் படை பொஸ்னியாவில் பாலியல் அட்டகாசம்செய்தமை பற்றிய திரைப்படம்**




**கதாநாயகி கத்தரீனாக நடிகை ரேச்சல்**

ஒரு நாட்டில் அமைதியின்மை மற்றும் போர் ஆரம்பமாகும்போது முதலில் பாதிக்கப்படுவோர் பெண்களும் குழந்தைகளும்தான்.

இதில் விசித்திரம் என்னவென்றால் போரினால் பாதிக்கப்படும் ஒரு நாட்டில் பெண்களையும் சிறுமிகளையும் பாலியல் கொடுமைக்கு உள்ளாக்குவோரில் அமைதி காக்க அங்கு அனுப்பப்பட்ட இராணுவத்தினரும் அடங்குவர் என்று அரசல் புரசலாக - காதும் காதும் வைத்தாற் போல ரகசியமாகக் கசிந்து வந்தது. ஆனால், யாரிடம் இருந்தும் சான்றுகள் கிடைக்கவில்லை.

ஆனால், ஐ.நா. அமைதி காக்கும் படையின் ஓர் அம்சமாக பொஸ்னியாவுக்கு அனுப்பப்பட்ட அமெரிக்கப் பொலிஸ் அதிகாரி கத்தரீன். பொஸ்னியாவில் அவர் கண்ட காட்சிகள் அவரையே திடுக்கிட வைத்தன.

வேலியே பயிரை மேய்வது போல ஐ.நா. அமைதி காக்கும் படையினரே பாலியல் வன்முறைகளில் ஈடுபடுவதை கத்தரீன் கண்டார். இந்தத் தவறுகளை அலட்சியம் செய்ய மறுத்தார். அதிகாரிகளிடம் முறையிட்டார். அவர்களும் அதை மூடி மறைக்கவே விரும்பினார்கள்.



**செர்பிய ஜெனரல் மிலேச்ச கொலைஞன் மிலசௌஹிச்**



கத்தரீன் என்ற இந்த அமெரிக்க பொலிஸ் அதிகாரியை பொஸ்னியாவில் ஐ.நா. கடமைக்கு அனுப்பியது “டைன்கோப்” (*DYNCORPE*) என்ற பிரிட்டிஷ் நிறுவனம்.


எனவே ஐ.நா. பதவியிலிருந்து வெளியேற்றப்பட்ட கத்தரீன் நேராக லண்டனுக்கு வந்தார். லண்டன் தொழிலாளர் பிணக்குகளுக்கான தொழில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

ரகசியங்களை அம்பலப்படுத்தியமைக்காக நியாயமற்ற முறையில் தாம் பதவி நீக்கம் செய்யப்பட்டதாக வாதாடினார். லண்டன் பி.பி.சி.யும் பிரிட்டிஷ் ஊடகங்களும் கத்தரீனுக்கு ஆதரவு தெரிவித்து பக்கம் பக்கமாக எழுதின.

ஈற்றில் பிரிட்டிஷ் தொழில் நீதிமன்றம்› “டைன்கோப்” நிறுவனமே தப்புச் செய்தது என்று தீர்ப்பளித்து கத்தரீனுக்கு நஷ்டஈடு வழங்குமாறு உத்தரவிட்டது. கத்தரீன் இப்போது ஒல்லாந்து நாட்டில் வாழ்ந்து வருகிறார்.

அவரது கதை “திவிஸ்டில் புளோவர்” (*THE WHISTLE BLOWER*) என்ற பெயரில் திரைப்படமாக வந்தது. 16 வயதுக்குக் குறைந்த சிறுமிகளை பாலியல் தொழிலாளிகளாக வாங்கி விற்று பணம் சேர்த்து வந்த ஐ.நா. அமைதி காக்கும் படையினரின் முகமூடிகளை இந்தப் படத்தில் கத்தரீன் கிழித்து எறிந்திருக்கிறார். பிரபல ஹொலிவூட் நடிகை ரேச்சல் வெயிஸ், கத்தரீனாக நடித்து விமர்சகர்களின் பாராட்டுக்களைப் பெற்றிருக்கிறார்.

நாட்டில் ஊரடங்குச் சட்டம் இருக்கும் வேளையில் இளம் பெண்களைக் கடத்திக் கொண்டு வருதல், வாடகைக்கு விடுதல், விற்றல், சித்திரவதை செய்தல் போன்ற காட்சிகள் பார்ப்போரை நடுநடுங்க வைக்கும்.




**யூகோஸ்லாவியா தலைவர் டிட்டோ**

கனடா - ஜேர்மன் கூட்டுத் தயாரிப்பான இந்தப் படம் ஆங்கிலம், ரஷ்ய மொழி, ருமேனிய மொழி, சேர்பிய மொழி ஆகியவற்றில் எடுக்கப்பட்டது.

“அமைதி காக்கும் படை” என்பது உண்மையில் அமைதி காக்கிறதா என்று ஐயப்படுவோர் இந்தப் படத்தைக் கட்டாயம் பார்க்க வேண்டும்.

உலக நாடுகளில் கலவரங்கள் நடக்கும்போதெல்லாம் ஏதோ உலகப் பொலிஸ்காரர்கள் போல குரல் எழுப்பும் ஐ.நா. மன்றம் தனது படைகளின் காடைத்தனங்களை நிறுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கத் தயங்குவது ஏன்? பொஸ்னியாவில் மட்டுமல்ல உலகின் பல நாடுகளில் போரினால் நொந்து சிதைந்து போயிருக்கும் பெண்கள் மீது அமைதிப் படைகள் அருவருப்பான செயல்களைப் புரியும்போது சக படையினர் மௌனம் காப்பது ஏன்?

ஒருவேளை தமது பதவி பறிபோய்விடுமோ என்ற அச்சமோ? இவற்றையெல்லாம் அம்பலப்படுத்த இன்னும் எத்தனை கத்தரீன்கள் தேவைப்படுவார்களோ? ●


Nandika's Sarees
நந்திகாஸ் சாரீஸ்
Free UK Delivery
வீட்டில் இருந்தபடியே உங்கள் மனதுக்குப் பிடித்தமான அனைத்து
வகையான புடவைகள், பிளவுஸ்கள் மற்றும் ஃபான்ஸி அணிகலன்கள்
வாங்குவதற்கு நாட வேண்டிய ஒரேயொரு இணையதளம்
www.nandikasarees.co.uk
www.nandikasarees.co.uk
www.nandikasarees.co.uk
'Discover the latest collection of
Sarees
Salwars
Lehengas
Fashionable Stitched Blouses
Fancy Jewellery
Accessories
and Many more at our online only store.
Contact
Email: info@nandikasarees.co.uk Phone: 07944094691
Visit our online store
www.nandikasarees.co.uk
we provide worldwide shipping





அவமானம் பற்றி கவலையே படவில்லை. ஒருவரை ஒருவர் திட்டியது அனைத்தையும் துடைத்துப் போட்டுவிட்டு தோள் சேர்ந்துவிட்டார்கள். அல்லது திட்டுவது மனசுக்குள் இறங்காத அளவுக்குத் தடித்துவிட்டது தோல்!

# வெட்கக்கேடு!

## ஜெயலலிதா ஆன்மா இவர்களை எப்படி மன்னிக்கும்?

“மானமுள்ள ஆயிரம் பேருடன் சண்டை போடலாம். மானத்தைப் பற்றி கவலைப்படாத ஒரே ஒருவனுடன் சண்டை போட முடியாது” எனச் சொன்னார் தந்தை பெரியார். தமிழ்நாட்டில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி பற்றியும், முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பற்றியும் யோசிக்கும்போது இதுதான் நினைவுக்கு வருகிறது. இவர்களுக்கெல்லாம் அந்த மாதிரியான அருங்குணங்கள் உண்டா எனத் தெரியவில்லை.

நாய் கதை, நரிக் கதை சொல்லி ஓ. பன்னீர்செல்வத்தைக் கிண்டல் அடித்தார் எடப்பாடி “இந்த ஆட்சி ஊழல்மயமாகிவிட்டது” என்று சொல்லி ஆர்ப்பாட்டத்துக்குத் தேதி குறித்தார் பன்னீர். இன்று ஊழல் ஆட்சியின் துணை முதல்வர் ஆகிவிட்டார் பன்னீர். ஊழல் பட்டம் கொடுத்த பன்னீரைப் பக்கத்தில் சேர்த்துக் கொண்டார் எடப்பாடி. இவை அனைத்தும் நான்கைந்து மாதங்களுக்குள் நடந்து முடிந்துவிட்டன. இரண்டு பேருக்கும் முகத்தில் கூச்சமோ. வெட்கமோ இல்லை.

“பன்னீர்செல்வம் வந்தால் நான் வகிக்கும் நிதி அமைச்சர் பதவியை விட்டுத்தரத் தயார்” என்று அமைச்சர் ஜெயக்குமார் சொன்னதும் வந்தது பார் கோபம் பன்னீருக்கு. “இவர் யார் எனக்கு நிதி அமைச்சர் பதவியை விட்டுத் தருவதற்கு? அம்மாவால் இரண்டு முறை முதல்வர் ஆக்கப்பட்டவன் நான்” என்று திண்டுக்கல் பொதுக்கூட்டத்தில் பொங்கிய பன்னீர்செல்வம்தான். ராஜ்பவனில் பதுங்கி நின்றபடி நிதி அமைச்சராகப் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்கிறார்.

கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து சசிகலாவை எடப்பாடி அணி மெல்ல மெல்ல ஒதுக்கி வைக்க ஆரம்பித்தது. “நான் வைத்த கோரிக்கையால்தான் ஒதுக்கி வைத்துள்ளார்கள்” என்று பன்னீர் மகிழ்ந்தார். அப்போது அமைச்சர் ஜெயக்குமார், “போகிற போக்கைப் பார்த்தால் அமெரிக்காவில் ட்ரம்ப் ஜெயித்ததற்கும் தான்தான் காரணம் என்று பன்னீர் சொன்னாலும் சொல்வார்” என்று கிண்டல் அடித்தார். இதோ இப்போது ட்ரம்ப் காமெடியை விட இந்த டமாரங்களின் காமெடி அதிகம் ஆகிவிட்டது!

“அம்மாவின் ஆன்மாதான் எங்களை இணைத்துள்ளது” என்று பன்னீர், கண்ணீர் விட்டுள்ளார். அம்மா கொடுத்துவிட்டுப் போன அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரையும், இரட்டை இலைச் சின்னத்தையும் டெல்லி தேர்தல் ஆணையத்தின் ட்ரங்க் பெட்டியில் முடக்கிய மனிதர்கள்தான் பன்னீரும் எடப்பாடியும். இவர்களை ஜெயலலிதாவின் ஆன்மா எப்படி மன்னிக்கும்?

136 சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரவு கொண்ட பெரும்பான்மை அரசைக் கொடுத்துச் சென்றார் ஜெயலலிதா. லட்டு போல அதைவைத்துக் காப்பாற்றத் தெரியாமல், பூந்தியாக உடைத்த பொறுப்பற்ற மனிதர்கள் ஜெயலலிதாவின் ஆன்மாவைப் பற்றிப் பேசலாமா?

ஜெயலலிதா இருக்கும்வரை பி.ஜே.பி-யினரின் வால் ஆடியது உண்டா? அவர் முதலமைச்சராக இருந்த காலத்தில் பிரதமர் மோடியை எத்தனை முறைபோய் பார்த்தார்? ‘மோடியா, லேடியா?’ என்று அகில இந்திய அளவில் தனிமனுஷியாக இருந்து சேலஞ்ச் செய்தவர் ஜெயலலிதா. அவரிடம் நான்கு நாடாளுமன்றத் தொகுதியை வாங்கி விடலாமா என்று போயஸ் கார்டன் வந்த மோடியை, அந்தத் தலைப்பையே தொடவிடாமல் திருப்பி அனுப்பியவர் ஜெயலலிதா. அவர் இறந்ததும் மொத்தக் கட்சியையும் ஆட்சியையும் மோடி, அமித்ஷா காலடியில் கொண்டுப் போய் வைத்த எடப்பாடியும் பன்னீரும் ஜெயலலிதாவின் ஆன்மாவைப் பற்றிப் பேசலாமா? ‘இவர்கள் இதுவரை செய்துள்ள தகிடுதத்தங்களைச் சொல்லி டெல்லி மிரட்டியது’ என்று காரணம் சொல்லலாம்.

ஜெயலலிதாவின் தலைக்கு மேல் சொத்துக்குவிப்பு என்ற கத்தி தொங்கிக் கொண்டுதான் இருந்தது. அதைப்பற்றி அவர் கவலைப்படவில்லை. பயப்படவில்லை. யாரையும் எதிர்கொள்ளும் ஆளுமைத்திறன் ஜெயலலிதாவுக்கு இருந்தது. இவர்களோ, எல்லா நிழலையும் பார்த்து நடுங்குபவர்களாக இருந்தார்கள். அதனால்தான் ‘ஒரு காலத்தில் சேர்ந்து செய்த காரியங்கள் வெளிச்சத்துக்கு வந்துவிடக் கூடாது’ என்பதற்காகச் சேர்கிறார்கள். ‘மீண்டும் சேர்ந்தால் பழைய காரியங்களைப் பார்க்கலாம்’ என்று உள்ளங்கை அரிக்கிறது.

அதனால் சேர்கிறார்கள். மான, அவமானம் பற்றி கவலையே படவில்லை. ஒருவரை ஒருவர் திட்டியது அனைத்தையும் துடைத்துப் போட்டுவிட்டு தோள் சேர்ந்துவிட்டார்கள். அல்லது திட்டுவது மனசுக்குள் இறங்காத அளவுக்குத் தடித்துவிட்டது தோல்!

“இந்த ஆட்சி குறித்த எங்களின் விமர்சனங்களுக்கெல்லாம் கடந்த சில நாள்களாக நடந்த பேச்சுவார்த்தையில் பரிகாரம் செய்யப்பட்டுவிட்டது” என்கிறார் பொன்னையன். என்ன பரிகாரம்? வேண்டுதல் வைத்து, பரிகாரமாக சிலர் முடியைக் கொடுப்பார்கள். இவர்கள் எதைக் கொடுத்தார்கள்?

இவை அனைத்தையும் விட புதிய இந்தியாவைப் படைக்க புறப்பட்டு உள்ள பிதாமகர் பிரதமர் மோடி, ‘முதல்வர் எடப்பாடி பழனிசாமி, துணை முதல்வர் பன்னீர் இருவருக்கும் வாழ்த்துகள். உங்களது இணைப்பால் புதிய உயரங்களைத் தமிழ்நாடு தொடும் என நம்புகிறேன்’ என்று சொல்லி இருக்கிறார். இவர்கள் இன்னும் தமிழ்நாட்டைப் பள்ளத்தில் இறக்காமல் இருந்தால் போதாதா?’

**வெட்கம்! மகா வெட்கம்**

### 26 ஆண்டுகளுக்கு பின் 46 வயதில் வீடு திரும்பிய பேரறிவாளன்!

20 வயதில் 91ம் ஆண்டு, ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று வேலூர் சிறையில் உள்ள பேரறிவாளனுக்கு தமிழக அரசு ஒரு மாத நிபந்தனையுடன் கூடிய விடுமுறை என்ற பரோல் அளித்துள்ளது. 26 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த 24ம் திகதி வியாழக்கிழமை இரவு முதல் தனது வீட்டில் பெற்றோருடன் உறங்கினார் பேரறிவாளன்.

தாயார் அற்புதம்மாள் நீண்டகாலம் இதற்காகப் பெரும் போராட்டம் நடாத்தினார். பலத்த போலீஸ் பாதுகாப்புடன் அவர் ஜோலார்பேட்டைக்கு அழைத்து செல்லப்பட்டார். சென்னை ஜோலார்பேட்டையில் உள்ள பேரறிவாளன் வீட்டுக்கு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

தந்தை குயில்தாசன் உடல்நலம் கவனித்துக் கொள்ள பேரறிவாளனுக்கு பல்வேறு நிபந்தனைகளுடன் ஒரு மாத காலம் பரோல் அளிக்கப்பட்டுள்ளது.

ஜோலார்பேட்டையில் உள்ள காவல்




நிலையத்தில் பேரறிவாளன் தினசரியும் கையெழுத்து போட வேண்டும்.

வேலூர் சிறையில் அளித்துள்ள முகவரியில்தான் பேரறிவாளன் தங்கவேண்டும். மேலும் வீட்டை விட்டு வெளியே செல்ல தடை உள்ளது.

இந்த 30 நாட்களில் பொதுக்கூட்டங்களில் பங்கேற்கக்கூடாது. மேலும் பத்திரிகை, தொலைக்காட்சிகளுக்கு பேட்டி தரக்கூடாது எனவும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1991-ஆம் ஆண்டு ஸ்ரீபெரும்புதூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்த ராஜீவ் காந்தி குண்டுவெடிப்பில் படுகொலை செய்யப்பட்டார். இந்த கொலை வழக்கில் சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி, ராபர்ட் பயாஸ், ஜெயகுமார், ரவிசந்திரன் ஆகிய 7 பேருக்கும் முதலில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் கருணை அடிப்படையில் அது ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது.

இந்நிலையில் இவர்கள் 7 பேரும் தண்டனை காலம் முடிந்தும் 26 ஆண்டுகளாக சிறையிலேயே விடுவிக்கப்படாமல் உள்ளனர். அவர்களை விடுவிக்க தமிழக சட்டமன்றத்தில் ஜெயலலிதா தீர்மானம் நிறைவேற்றினார் அப்போது ஆட்சி புரிந்த காங்கிரஸ் கட்சி எதிர்ப்பு தெரிவித்ததால் அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. இந்நிலையில் பேரறிவாளனின் தந்தை குயில்தாசன் உடல் நலக்குறைபாட்டினால் விடுப்பு கேட்டு மறுக்கப்பட்டது. இப்போது தமிழக அரசு விடுப்பு பரோல் அளிக்கப்பட்டுள்ளது.

# பக்திப் பரவசத்தில் ஆழ்த்திய ஈலிங் கனகதுர்க்கை அம்மன்!

## காரூரும் தெருக்களில் தேர் ஊர்ந்த கண்கொள்ளா காட்சி









வெள்ளிவிழா ஆண்டு முடிந்து, அடுத்தாண்டாக இந்த ஆண்டு 26வது ஆண்டாக, 13.08.2017 ஞாயிறு அன்று லண்டன் ஈலிங் கனகதுர்க்கை அம்மனின் திருக்கோலத்தைக் கண்டுகளிக்கத் திரண்டிருந்த பக்தர்கள் சமுத்திரத்தில் திணறியவர்களில் அடியேனும் ஒருவன்.

ஆயிரம் ஆயிரமென பல்லாயிரக்கணக்கான பக்தர்களையும், அடியார்களையும் பக்திப் பரவசத்தில் ஆழ்த்தி, மகிழ்வித்த இந்தத் தேர்த்திருவிழா இங்கிலாந்து வாழ் சைவத் தமிழர்களை மட்டுமல்ல, ஐரோப்பா நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களை ஒன்றிணைத்த பொன்னாள்.

'நாம் பெற்ற இன்பம் நீங்களும் பெறவேண்டும் என்றால் கட்டாயம் கனகதுர்க்கா தேர்த்திருவிழாவுக்கு வாருங்கள் அடுத்தாண்டு!' என்று கடந்தாண்டு தேர்த்திருவிழாவைப் பற்றி எழுதிய 'புதினம்' கட்டுரையில் குறிப்பிட்டிருந்தோம். இந்தாண்டு தேர்த்திருவிழாவுக்கு வந்த பக்தர்கள் கூட்டம் கடந்த வெள்ளிவிழா ஆண்டை மிஞ்சிவிட்டது. இவ்வாண்டு சுமார் 25 ஆயிரம் பக்தர்கள் கலந்து கொண்டு துர்க்கையின் ஆசி பெற்றார்கள்.

மூலாதார மூர்த்தியான கனக துர்க்கை அம்மன் தேருடன், முருகன் தேரும், விநாயகப் பெருமான் தேரும் பவனி வந்தது அருங்காட்சியாகும். இத்தேர்த் திருவிழாவைப் பார்த்தவர்கள், ஒரு வருடப் பலனைப் பெறுவார்கள் என்று ஆகமங்கள் சொல்கின்றன.

கண்ணைக் கவரும் கரகாட்டங்கள், பக்திப் பாடல்களுடன் அடியார்களின் காவடிகள் - வாகனங்கள் செல்லும் வீதிகளில் அம்மனுக்குத் தம்மை அர்ப்பணித்து, 'அங்கப்பிரதிட்சை, - எப்படித்தான் இது முடிகிறதோ என்று நெஞ்சை நோக வைக்கிற அந்தக் காட்சி எல்லாமே அம்மனின் அருளாசி பெறுவதற்காக என ஆறுதல் படுத்தியது.

பாற்குடம் தலையில் சுமந்த பெண்கள் கூட்டம் நூறு நூறு என வீதியெல்லாம் தமதாக்கி பக்தைகளாக நடந்து சென்ற காட்சி கண்கொள்ளாக் காட்சி!

காரூரும் வீதியெங்கும் துர்க்கை அம்மன் தேர் ஊர்ந்து, அசைந்து அசைந்து பக்தர்கள் வெள்ளத்தில் வந்தபோது, அருகே உள்ள பூங்காவில் இத்தனை ஆயிரம் பக்தர்கள் பசியாறுவதற்கு மதிய உணவும், கடலை பொங்கல், சிற்றுண்டிகள், பரிமாறப்பட்டுக் கொண்டிருந்தன. காலை 10 மணிக்கு ஆரம்பமான அம்மனைச் சுமந்து வந்த தேரும், முருகன், விநாயகர் தேர்களும் பிற்பகல் ஆலயத்தை வந்தடைந்தன.

இவ்வாண்டு தேர்த்திருவிழாவில் அர்ச்சனைத் தட்டு மூலம் பக்தர்களிடமிருந்து கிடைத்த தொகை பதினெட்டாயிரம் பவுண்கள். இத்தொகை தாயகத்துக்கு நன்கொடை உதவியாக அனுப்பி வைக்கப்படுகிறது.

துர்க்கை அம்மன் இளைஞர் அணியினர் தேர்த்திருவிழாவின் ஒழுங்கமைப்புக்கு முக்கியமானவர்களாக நின்று கடமையாற்றினார்கள். பக்தர்கள் அமைதியாகச் சென்று வழிபாடு செய்யவும் அர்ச்சனை செய்யவும் ஏற்ற ஒழுங்குகளை செய்தார்கள்.



கச்சான் விற்பனை போன்றவற்றையும் இளைஞர் அணியே மேற்கொண்டது.

ஈலிங் கனகதுர்க்கை ஆலய புதிய தலைவர் தாமோதரம் பிள்ளை யோகநாதன், ஆலய நிர்வாக சபை, அறங்காவல் சபை ஆகியவற்றோடு இணைந்து இவ்வாண்டு அனைத்து ஏற்பாடுகளையும் மிகத் திறம்பட மேற்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. மனதுக்கு நிறைவும், ஆன்மாவுக்கு






ஈடேற்றமும் தந்த தேர்த் திருவிழாவைப் பற்றி விபரித்து அடங்காது; பார்த்தாலன்றி சொல்லில் முழுமையாக விபரிக்க முடியாது! யாம் பெற்ற இன்பமும் நீங்களும் பெற வேண்டும் என்றால் அடுத்தாண்டு கட்டாயம் வாருங்கள்!

**படங்கள்: ஜெனோ வீடியோ & போட்டோஸ்**

# HolidayAir

A Travel Experience to Remember
Since 2006

## Colombo fr£400

| | |
|---|---|
| Air India | fr £400 |
| Gulf Air | fr £415 |
| Jet Airways | fr £420 |
| Turkish Airlines | fr £425 |
| Kuwait Airways | fr £425 |
| Oman Air | fr £430 |
| KLM | fr £465 |
| Qatar Airways | fr £475 |
| Etihad Airways | fr £480 |
| Emirates | fr £480 |
| Srilankan | fr £495 |

## Sri Lanka Holiday Offers

**Cinnamon Grand**
Colombo

**Goldi Sands Hotel**
Negombo

**Taj Samudra**
Colombo

£50pp

**Earls Regency**
Kandy

**Ramada Colombo**
Colombo

**Bentota Beach by Cinnamon**
Bentota

**Why book with Holiday Air?**
Price Match Guarantee*
Exclusive deals for hundreds of destinations
No hidden Fees
Popular Holiday Deals
Best Exchange rates for Holiday Money

**0208 4400770**

Hotline
**07534 433111**

www.holidayair.com
130 High Street, Barnet EN5 5XQ

*All advertised fares are of real time itineraries during the issue of publication.
Fares include taxes & are subjected to availability and change without any prior notice.
T/ C conditions apply.



# FAST CASH

SEND TODAY - COLLECT TODAY
Since 1999

**020 8886 4488**

## Swift Money Transfers to Sri Lanka

### Same day banks credits*

- Official receipt for each transaction
- Safe and secure
- Your money sent from the UK and not credited locally
- Market beating exchange rates

இலங்கைக்கான பணமாற்று சேவை நம்பிகை
நாணயமிக்க மிக துரிதமான சேவை
குறிப்பிட்ட அதே நாளில் பணத்தை அங்குள்ள
உங்களது எந்த வங்கிக் கணக்கிலும்
வைப்பு செய்ய கூடியதான வசதிகள்.

Credit our account online & call us!

BARCLAYS
A/C Name : C.E.C. LTD / A/C No : 70713945
Sort Code : 20-36-47

*Coming Soon..!*
**Online Money Transfers to Sri Lanka**
**24/7 – 365**
from the convenience of your arm chair!

**Our Local Branch**
**48 Mitcham Road**
**Tooting SW17 9NA**
2 minutes from Tooting Broadway, close to McDonald and next to Gala Bingo

FCA Authorised

* T/C Apply

FASTCASH IS A FCA & HM CUSTOMS AND EXCISE / REGISTERED BUSINESS. MSB 12112819 / FCA -PI 540536

www.efastcash.co.uk | 125-127 Bramley Rd, Oakwood N14 4UT | Open 7 Days

HNB · BOC · People's Bank · NSB · Sampath Bank · Seylan · NDB bank · Nations Trust Bank · HSBC · Pan Asia · Standard Chartered · Vardhana Bank · Amãna Bank



# MODERN FAMILY APARTMENTS IN MT. LAVINIA, SRI LANKA

- DOUBLE ROOMS & 1,2,3 BED APARTMENTS
- FULLY FURNISHED WITH AIR CON, LIFT & PARKING

UK BOOKINGS MIKE ON 07733 261 999
VISIT OUR WEBSITE www.stayatmount.com

FROM **£25** PER DAY*



# பூதத்தம்பி கோட்டை

அத்தியாயம் 14

## சிறையில் ஜோதிநாதன்

தாயாரின் தகனக் கிரியைகளை முடித்துவிட்டு மாளிகைக்கு மீண்ட ஜோதிநாதன் மாளிகையில் பணிபுரிந்த வேலையாட்களை அழைத்து தனது தந்தையார் காலமாகிவிட்டபடியினால் நல்லூர் மாளிகையில் தாங்கள் இனிமேல் தங்கியிருப்பதற்கு டச்சுக்கார அரசு அனுமதிக்காது என்றும், அதனால் தான் இனிமேல் பனங்காமம் சென்று மாமனார் குமார வன்னியனோடு தங்கியிருக்க முடிவு செய்திருப்பதாகவும் தெரிவித்தான்.

மாளிகையில் பணியாற்றிய வேலையாட்களுக்கு நன்றி கூறி அவர்களுக்கு அடுத்த ஓராண்டுச் சேவைக்குரிய ஊதியங்களைக் கொடுத்து அவரவர் வீடுகளுக்கு அனுப்பி வைத்தான். தீக்கிரையினால் வீடுகளை இழந்தவர்களுக்கு திரும்பவும் வீடுகள் கட்டுவதற்குரிய பணத்தை வழங்கினான். அவர்கள் கண்ணீரும் கம்பலையுமாக அவனை வாயார வாழ்த்தி விடைபெற்றுச் சென்றார்கள்.

ஜோதிநாதன் மாமன் குமாரவன்னியனோடு பனங்காமம் புறப்பட ஆயத்தம் செய்து கொண்டிருந்த நேரத்தில்தான் டச்சுக்காரப் படையினர் நல்லூர் மாளிகையைச் சூழ்ந்து கொண்டார்கள். அந்த டச்சுப் படைப்பிரிவுக்குத் தலைமை தாங்கி வந்த ரொட்றிகோ நல்லூர் மாளிகையில் டச்சு வீரர்களை காவலுக்கு வைத்து விட்டு ஜோதிநாதனைக் கைது செய்து வரும்படி தேசாதிபதி ரூதியாஸ் ஆணை பிறப்பித்திருப்பதாகத் தெரிவித்தான். அதைத் தவிர அங்கிருந்த பனங்காம வீரர்களுக்கும் தனக்கும் பிரச்சினை ஏதுமில்லை என்றும் தெரிவித்தான்.

என்ன குற்றத்திற்காக ஜோதிநாதனைக் கைது செய்கிறீர்கள் என குமார வன்னியன் வினவிய போது அதுபற்றித் தனக்கு ஒன்றும் தெரியாது என்றும், தனக்கிட்ட பணியைத் தான் செய்வதாகவும் ரொட்றிகோ கூறினான்.


ஜோதிநாதனைப் பனங்காம வீரர்கள் சூழ்ந்த போது, 'இது தனக்கும் டச்சு அரசுக்குமிடையே உள்ள தகராறு' என்றும், தான் 'குற்றம் ஏதும் இழைக்காத படியினால் விசாரணையின் போது சில நாட்களில் தான் வெளியே வந்துவிடுவேன்' என்றும் கூறி பனங்காம வீரர்களை அமைதியாக இருக்கும்படி வேண்டினான். குமார வன்னியனும் வாளும் வேலும் தாங்கிய ஒரு சிறு காவற்படையுடனே வந்திருந்த படியால், துப்பாக்கிகளோடு வந்த டச்சுப்படையை அந்நேரம் ஆளுக்கு ஆள் எதிர்ப்பதில் பலனேதும் கிடைக்காது என எண்ணி, அவர்களைப் பொறுத்திருக்கும்படி பணித்தான்.

ஜோதிநாதனைக் கைது செய்த டச்சுப் படையினர் வழக்கத்திற்கு மாறாக அவனது கண்களைக் கட்டி, கைகளைப் பின்புறம் கட்டி, குதிரை வண்டியில் அவனை அழைத்துப் போனார்கள். டச்சுப் படை வீரர்கள் போன பின் குமாரவன்னியன் தனது குதிரை வீரர்களோடு வன்னிக்குப் புறப்பட்டான்.

குமார வன்னியன் தன்னோடு வந்திருந்த உளவுத் தொழிலில் வல்லவனான ஒற்றன் அரசகேசரியை அழைத்து டச்சு வீரர்கள் ஜோதிநாதனை எங்கே அழைத்துப் போகிறார்கள் என்பதை அறிந்து வரும்படி அனுப்பிவைத்தான். மாறுவேடக் கலையில் வல்லவனான அரசகேசரியே அப்பணிக்குப் பொருத்தமானவன் என எண்ணினான்.

ஒரு வாரம் கழித்து பனங்காமம் மீண்ட அரசகேசரி ஜோதிநாதனை முதலில் யாழ்நகர் கோட்டையில் அடைத்து வைத்திருந்ததாகவும், பின்னர் ஒரு வாரம் கழித்து அவனை இரவோடு இரவாகப் பூநகரிக்கு படகில் கொண்டு போய் பூநகரிக் கோட்டையில் சிறை வைத்திருப்பதாகவும் தெரிவித்தான்.

ஜோதிநாதனைக் கைது செய்து மூன்று மாத காலம் ஆன பின்பும் அவனுக்கெதிராக எதுவிதமான குற்றச்சாட்டையோ அல்லது விசாரணையையோ டச்சு அரசு முன்னெடுக்கவில்லை. யாழ் டச்சு அரச தளபதி ரொபேர்ட்டோ மென்ஸிஸ்ஸாக்கு அனுப்பி வைத்த விண்ணப்பங்களுக்கு பதில் ஏதும் கிடைக்காமையால் பூநகரிக் கோட்டையைத் தாக்கி ஜோதிநாதனை விடுவிப்பதுதான் ஒரே வழி என்ற முடிவிற்கு குமார வன்னியன் வந்திருந்தான்.



*1665*ம் ஆண்டு பிப்ரவரி மாதம் தனது யாழ்நகர் விஜயத்தை முடித்துக் கொண்ட டச்சு தேசாதிபதி ஏட்றியன் ரூதியாஸ் யாழ் கொழும்புத் துறையிலிருந்து புறப்பட்ட 'பிரின்ஸெஸ் மரியா' கப்பல் ஏறி தலைநகர் கொழும்புக்குப் பயணமானார். அவரை வழியனுப்ப யாழ் கோட்டைத் தளபதி ரொபேர்ட்டோ மென்ஸிஸ்ஸும் உள்ளூர் நிர்வாக அமைச்சர் அந்திராசியும் வந்திருந்தார்கள். அவரது யாழ் நகர சேவையைப் பாராட்டிய அந்திராசி தன்னோடு கொண்டு வந்த இருபது 'பொல்ஸ்'ஜின் போத்தல்கள் அடங்கிய பெட்டியை அவருக்குப் பரிசாக அளித்திருந்தான்.

இதற்கிடையில் பூதத்தம்பி முதலியார் சதி செய்து தூக்கிலிடப்பட்டார் என்றும், ரூதியாஸ் தீர விசாரணை செய்யாமல் அவசரப்பட்டு தூக்குத் தண்டனை வழங்கிவிட்டார் என்றும் அந்தோனியோ மென்ஸிஸ் டச்சு இராணுவ உயர் மட்ட அதிகாரி வான் கோயன்ஸ்க்குப் புகார் செய்திருந்தான்.

கப்பல் புறப்பட்ட நாள் முதலாக இரவும் பகலும் 'பொல்ஸ்' ஜின் போதையிலிருந்த ரூதியாஸால் கப்பல் கொழும்புத் துறைமுகத்தை அடைந்த போது இறங்கி நடந்து செல்ல இயலவில்லை. அவரை சட்டப்படுக்கையில் ஏற்றியே எடுத்துச் சென்றார்கள்.

ஏப்ரல் மாத முடிவில் ஏட்றியன் ரூதியாஸ் பதவி நீக்கம் செய்யப்பட்டு, வான் கோயன்ஸ் மீண்டும் டச்சு அரச தேசாதிபதி பதவியை ஏற்றுக் கொண்டார்.

போர்த்துக்கேயர் யாழ்நகரைக் கைப்பற்றிக் கொண்ட காலத்தில் கடற்கரை நகரான பூநகரியில் ஒரு சிறிய கோட்டையைக் கட்டியிருந்தார்கள். யாழ்ப்பாணத்திலிருந்த தமது உடமைகளைக் காப்பாற்றிக் கொள்வதற்கு இந்தக் கோட்டை அவசியமாக இருந்தது. டச்சுக்காரர் போர்த்துக்கேயரிடமிருந்து யாழ் நகரைக் கைப்பற்றிய பின்னர் பூநகரிக் கோட்டையையும் கைப்பற்றி அங்கே தமது போர்வீரர்களை நிறுத்தியிருந்தார்கள்.

பூநகரி நகரின் புற எல்லையில், கடற்கரையில், சங்குப்பிட்டிக்கு மேற்கேயிருந்த கச்சாய் கிராமம் மீன்பிடிகாரர்களையும், விவசாயிகளையும் கொண்ட சிறிய கிராமம். அக்கிராமத்தில் போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட ஒரு மாதா கோவிலைத்தவிர எல்லாமே குடிசை வீடுகள் தாம். கிராமத்தின் தெற்கு எல்லையில் வயல்களும், அப்பால் அடர்ந்த காடுகள் செழித்துப் படர்ந்திருந்த குன்றும் காணப்பட்டன.

மாலை வேளைகளில் மாதா கோவிலின் முன் படிக்கட்டுகளில் அமர்ந்து அவ்வூர் இளைஞர்கள் வம்பளப்பது வழக்கம். வார இறுதியில் நகருக்குப் போய்விட்டு வந்த வரையனைப் பார்த்து

"நகரத்தில் என்ன செய்தாய்?"என்று கேட்டான் எல்லன்.

"செய்யக் கூடாதது எல்லாம் செய்தேன்" என்றான் வரையன்.

"அங்கே இளம் பெண்கள் அதிகம் பேர் இருக்கிறார்களா?"

"பொடியங்களை விடப் பெண்கள் தான் அங்கே அதிகம்"

"ஏதாவது பட்சியைப் பிடித்தாயா?"

"உஸ்ஸ், பாதிரியார் வருகிறார், பேசாதே"

அவர்களைப் பார்த்து தனது வலது கையை உயர்த்தி ஆசீர்வாதம் செய்த பிதா யோசேப்பு அப்பால் சென்றதும்

"குழப்படி ஏதும் செய்யாதே, அப்பச்சி அறிந்தால் சவுக்கடிதான் கிடைக்கும்" என்றான் எல்லன்.

அவனது அப்பச்சி ஒரு மீன் வியாபாரியாக வேலை செய்து வந்தார். அதிகாலையில் கடற்கரைக்குப் போய் மீன்பிடித்துத் திரும்பும் மீனவர்களிடமிருந்து மீன்களை வாங்கி தனது தள்ளுவண்டியில் ஏற்றிக் கொண்டு நகருக்குள் சென்று மக்களுக்கு விற்று அதில் கிடைக்கும் லாபத்தில் தனது மனைவியையும்

ஒரே மகனையும் காப்பாற்றி வந்தார்.

அவனது அப்பச்சியிடமிருந்து கடைசியாக அடிவாங்கி ஏழு ஆண்டுகளுக்கு மேலாகின்றன. அப்போது அவனுக்குப் பன்னிரண்டு வயதுதான் இருக்கும். நீண்ட சவுக்கு மரத் தண்டிலிருந்து ஓர் ஆளுயர வில்லைத் தயாரித்திருந்தான் வரையன். அதைக் கண்டதும் கோபமுற்ற அப்பச்சி அந்த வில்லினால் அவனது முதுகில் அடித்தார். "ஐயோ அம்மா" என அவன் போட்ட கூச்சலைக் கேட்டு குறுக்கே ஓடிவந்த அவனது தாயாரின் உடலில் கண்மண் தெரியாமல் அடித்த அப்பச்சியின் அடிகள்பட்டு அவள் மூர்ச்சையடைந்தாள். மூன்று நாட்களின் பின்னர் அவள் இறந்து போனாள். நோயுற்றிருந்த அவளது உடலால் அந்த அதிர்ச்சியை தாங்க முடியவில்லை. அவள் நோய்வாய்ப்பட்டு இறந்து போனாள் என்றே ஊரார் நம்பினார்கள். அதன் பின்னர் அப்பச்சி மகனைக் கண்டிப்பதை விட்டுவிட்டார்.

வரையனுக்கோ வில்லின் மேலிருந்த தீவிரமானஆசை விட்டுப் போவதாக இல்லை. அவனது தாய்வழித் தாத்தா பனங்காம அரச படையில் வில்லாளியாகப் பணியாற்றியவர். அந்த மரபு ரத்தம் அவனது நாடி நாளங்களிலும் ஓடிக் கொண்டிருந்தது. தினமும் அதிகாலை எழுந்து முதல் நாள் இரவு நீரூற்றி வைத்த பழைய கஞ்சியைக் குடித்துவிட்டு அப்பச்சி கடற்கரைக்குச் சென்று மீன் கொள்வனவு செய்து, தள்ளு வண்டியோடு மீன் விற்பனை செய்ய நகருக்குப் போய்விடுவார். வரையன் எழுந்து குடிசையில் சமையல் செய்து வைத்துவிட்டு வில்லும் கையுமாக காட்டுக்குள் போய்விடுவான். அப்பச்சி வியாபாரம் முடித்து பிற்பகல் வீடு திரும்பி மதிய உணவு உட்கொண்டபின் உறங்கப் போய்விடுவார். மாலையில் அவர் விழித்தெழுந்த பின்னரே வரையன் வீடு திரும்புவான்.

அவனது பதினெட்டாவது வயதில் தனது தாத்தாவைப் போல வில் வித்தையில் வல்லவனாக அவன் விளங்கினான். குரு எவருமின்றி தன்னிச்சையாக தினமும் கடுமையான பயிற்சியினால் கற்றுக் கொண்ட கலை அது. நீண்ட கம்பை வெட்டியெடுத்து எப்படி ஒரு சிறந்த வில்லாக்க முடியும் என்பதை அனுபவ ரீதியாக அவன் அறிந்து கொண்டான். வில்லின் நடுப்பாகம் கடினமான வெளித்தண்டைக் கொண்டதாகவும், நுனிப்பாகங்கள் வளைந்து கொடுத்து மீண்டும் நேராகத் தன் நிலை அடையக் கூடிய பித்துத் தண்டைக் கொண்டதாகவும் அமைக்கும் வித்தை அவனுக்குக் கைவந்திருந்தது.

பூநகரி நகரிலுள்ள ஒரு கொல்லனிடமிருந்து பெற்றுக் கொள்ளும் இரும்பு நுனிகளை மெல்லிய மூங்கில் கம்புகளில் பொருத்தி, அவற்றின் அடியில் வால் நீண்ட கரிக்குருவியின் இறகுகளை சிறு சிறு துவாரமிட்டுச் செருகி, அவற்றை வச்சிரப் பிசின் போட்டு ஒட்டிக் காய வைத்தபின் அந்தஅம்புகள் அற்புதமாக வேலை செய்யும்.

அடிகுறியின் தூரத்தையும், காற்றடிக்கும் திசையையும், காற்றின் வேகத்தையும் கொண்டு வில்லிலிருந்து அம்பை எய்யும் 'இரட்டைப் பரிமாணச் சாய்வு கோணம்' எப்படி அமைய வேண்டும் என்பது அவனுக்குக் கைவந்த கலையாயிற்று. மிகக் கடினமான பச்சைத் தேக்குமரக் கம்புகளில் அவன் உருவாக்கிய வில்லிருந்து புறப்படும் அம்பினால் நானூறு காலடித் தொலைவிலுள்ள ஒருகுறியை ஒவ்வொரு தடவையும் அவனால் சொல்லிச் சொல்லி அடிக்க முடியும்.


அந்தச் சமயத்தில்தான் பனங்காமத்திலிருந்து குமாரவன்னியனின் படையைச் சேர்ந்த இரு உப தலைவர்கள் அந்தக் கிராமத்திற்கு வந்திருந்தார்கள். டச்சுக்கார அரசின் பூநகரிக் கோட்டையை முற்றுகையிட குமார வன்னியன் தீர்மானித்திருப்பதால் கிராமம் கிராமமாகச் சென்று இளைஞர்களைப் படையில் சேர்க்கும் பணியில் அவர்கள் ஈடுபட்டிருந்தார்கள். வரையனின் விற்திறமையைக் கேள்வியுற்ற அவர்கள் அவனை அணுகி அவனைத் தங்கள் தரைப்படையில் வில்லாளியாகச் சேர்ந்து கொள்ளும்படி கேட்டுக் கொண்டார்கள்.

'தான் நிரந்தரமாக அரச படையில் பணியாற்ற முடியாது என்றும், பூநகரிக் கோட்டை முற்றுகை முடிவடைந்ததும் படையிலிருந்து தன்னை விடுவிப்பதாக இருந்தால் தான் படையில் சேருவதாகவும்' வரையன் முன்வைத்த கோரிக்கையை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். வரையன் தன் தந்தையின் அனுமதி பெற்று பனங்காம அரச படையில் சேர்ந்து கொண்டான்.

வடக்கே கடற்கரையோரமாக அமைந்திருந்த பூநகரி நகருக்கும், வன்னிப் பரப்பின் நடுப்பகுதியிலிருந்த பனங்காமத்திற்கும் இடையே இருந்த கிராமம் கிளிநொச்சி. அங்கிருந்த மக்கள் நெடுங்காலமாக விவசாயத்தில் ஈடுபட்டிருந்தார்கள். அக்கிராமத்தில் பரந்து விரிந்து கிடந்தது கிளிநொச்சிக்குளம். அந்த ஏரியின் தென்கரையில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை விளை நிலங்கள் பச்சைப் பசேலென வியாபித்திருந்தன. அதன் வடகரையிலோ கற்பூமியான நிலங்கள் தரிசு நிலங்களாகக் காய்ந்திருந்தன. அந்த நிலத்தில் பரவலாகப் பலவர்ணக் கூடாரங்கள் போடப்பட்டிருந்தன. அவற்றில் நடு நாயகமாக நின்ற பெரிய கூடாரத்தில், தரையிலிருந்து கிளம்பி கூடாரத்தின் தலையை ஊடுருவிக் கிளம்பி நின்ற பெரிய நடுக்கம்பத்தின் உச்சியில் பனங்காம அரசின் இரட்டை வாள் சின்னமும் அக்கினிக் குண்டமும் பதித்த மஞ்சள் நிறக் கொடி காற்றில் படபடத்துக் கொண்டிருந்தது.

இரவு நேரம்

அந்தக் கூடாரங்களில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் நிம்மதியான நித்திரையில் ஆழ்ந்திருந்தார்கள். சில போர்வீரர்கள் ஆயுத பாணிகளாய், உறங்காமல் கண்விழித்து அக்கூடாரங்களைக் காவல் காத்துக் கொண்டிருந்தார்கள். ஆங்காங்கே கூட்டங் கூட்டமாகக் கட்டிப் போட்டிருந்த குதிரைகள் கனைத்துக் கொண்டிருந்தன. அசையும் குன்றுகள் போல ஆடிக் கொண்டிருந்த யானைக் கூட்டங்கள் அவ்வப்போது தமது மத்தகத்தை மேலுயர்த்திக் கொண்டு பிளிறிக் கொண்டன.



அதிகாலையில் முரசொலியும் சங்கநாதமும் அவர்களைத் துயிலெழுப்பின. ஏரிக்கரையில் முகம் கழுவி காலைக் கடன்களை முடித்துக் கொண்டு உணவருந்திய பின் அன்றைய பயிற்சிக்கு அந்த இளைஞர்கள் ஆயத்தமானார்கள்.

கூன்வாள், கொடுவாள், சிறுவாள், நெடுவாள், ஈர்வாள், உடைவாள், கூர்வாள், குத்துவாள் எனப் பல விதமான வாட்கள் ஒன்றோடொன்று உராய்ந்து மின்னல் பொறி கிளப்பின.

இருநூறு காலடித் தொலைவிற்கப்பால் நடப்பட்டிருந்த வைக்கோல் பொம்மை மனிதர்களை நோக்கி வேல், வளை கம்பு, ஈட்டி என்பன வீசி எறியப்பட்டன.

நானூறு காலடித் தூரத்திற்கப்பால் நடப்பட்டிருந்த மரப்பலகைகளில் வட்ட வடிவில் குறியிடப்பட்ட இலக்குகளை நோக்கி இரட்டை ஆள் உயரத்திற்கு உயர்ந்திருந்த விற்களிலிருந்து புறப்பட்ட அம்புகள் கசன வெளியைக் கிழித்துக் கொண்டு கடுகதியில் பறந்தன.

பாய்ந்து வந்த குதிரைகளில் அமர்ந்திருந்த இளைஞர்கள் கையில் பிடித்த நீண்ட வாட்கள் வரிசையாக நடப்பட்டிருந்த மரக்குற்றிகளின் மேல் வைக்கப்பட்டிருந்த பூசணிக்காய்களை இரு பாதிகளாகப் பிளந்து சென்றன.

இப்படியாக நாள் முழுவதும்- மாலைச் சூரியன் மறைந்து, சுற்றவரப் படர்ந்திருந்த அடர்ந்த காடுகளிலிருந்து இருள் வெளியே எட்டிப் பார்க்கும் வரை- அந்த இளைஞர்களின் போர்ப் பயிற்சி நடந்து கொண்டேயிருந்தது.

அந்தப் போர்ப் பயிற்சிகளிலெல்லாம் முன்னணியில் இருந்த இளைஞர்களில் முதல்வனாக இருந்தான் வரையன். நானூறு காலடித் தொலைவிற்கப்பால் நடப்பட்ட இலக்கை ஒவ்வொரு தடவையும் குறி தவறாமல் அம்பால் அடிக்கும் திறமை அவனுக்குக் கைவந்த கலை என்பது தளபதி பரதகம்பனின் கவனத்தை ஈர்க்கத் தவறவில்லை. வரையனை அழைத்து அவனது வில்வித்தை பற்றி வினாவினான் பரதகம்பன்.

"ஐயா, இதில் ரகசியம் எதுவுமில்லை. முதலில் வில்லின் வலிமையும், அம்பின் அமைப்பும் முக்கியமாகிறது. தடிப்பான நடுத்தண்டும் உறுதியாக வளைந்து நிமிரும் கரங்களும் கொண்ட நீண்ட வில்லிலிருந்து புறப்படும் அம்பு எண்பது காலடித் தூரம் வரை புவியீர்ப்பை எதிர்த்து நேராகப் பறக்கும் அதன்பின்னர் அதன் பறக்கும் பாதை கீழ்நோக்கி வளைந்து கொண்டே போகும். இலக்கின் தூரத்தைக் கணக்கிட்டு அதற்கேற்றாற்போல அம்பை உயர்த்தி எய்வதன் மூலமே இலக்கை அடைய முடியும். அடுத்து நாம் கவனிக்க வேண்டியது காற்றின் வேகம். காற்றின் வேகத்தைக் கணித்து, அது வீசும் திசைக்கெதிராக ஒரு கோணத்தில் அடித்தால் தான் இலக்கை அடைய முடியும். எல்லாவற்றிற்கும் மேலாக பயற்சி- பயிற்சி- பயிற்சி. இடைவிடாத பயிற்சியினால்தான் இந்தக் கலையை நாம் கைவரப் பெற முடியும்.

வரையனின் திறமையைக் கண்ட பரதகம்பன் அவனை பனங்காமப் படையின் உபதலைவர்களில் ஒருவனாக்கி, வில்லாளிகளின் படைப்பிரிவைப் பழக்கி நடாத்தும் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்தார்.

பூநகரிக் கோட்டையில் ஜோதிநாதனைப் பாதாளச் சிறையில் அடைத்து வைத்திருந்தார்கள். மூன்று பக்கமும் கற்களினால் கட்டப்பட்ட சுவர்கள். உச்சியில் இரும்புக் கம்பிகளால் சட்டமிடப்பட்ட ஒரு துவாரம் காற்றுவர அமைக்கப்பட்டிருந்தது. மறுபக்கம் இரும்புக் கம்பிகளினாலான தடை. பன்னிரண்டு காலடி தூரமும் பத்துக் காலடி அகலமும் கொண்ட அச்சிறை அறையில் படுப்பதற்கு ஒரு கயிற்றுக் கட்டில்; மலசலம் கழிக்க ஒரு வாளி; கழுவுவதற்கு தினமும் ஒரு வாளி தண்ணீர்; உணவு கொள்ள ஒரு தகரக் கோப்பை; ஒரு தகரப் பேணி; உடமைகள் அவ்வளவுந்தான். பிறந்த நாள் முதல் பெரிய மனைகளிலும், மாளிகைகளிலும் வாழ்ந்த ஜோதிநாதனுக்கு இது பொறுக்க முடியாத அவமானமாக, அவலமாக இருந்தது.

தினமும் இருவேளை உணவும், குடிப்பதற்கு நீரும் கொடுத்தார்கள். இரவில் ஒரு மெழுகுவர்த்தி கொளுத்தி வைத்தார்கள். கதவைத் திறந்து அவனை வெளியே உலாவ விட்டதே இல்லை. தன்னை விசாரணைக்கு அழைப்பார்கள், அழைப்பார்கள் என எதிர்பார்த்து, எதிர்பார்த்து அவன் ஏமாந்து போயிருந்தான்.

இரவிலும் பகலிலும் ஒரு காவற்காரன் மட்டும் இரும்புக்கிராதிக்கு அப்பால் உட்கார்ந்திருப்பான். அவன்தான் ஒரே ஒரு பேச்சுத்துணை. காலகதியில் இரவுக் காவலாளி பீட்டர் சில்வாவுடன் அவன் பரிச்சயமாகிவிட்டிருந்தான்.

அன்று பீட்டர் சொன்ன செய்தி வயிற்றைக் கலக்கியது. "பூநகரிக் கோட்டையைப் பராமரிக்க பத்துப் பன்னிரண்டு போர்வீரர்களுக்கு மேல் இருப்பதில்லை. உன்னை இங்கே காவல் வைத்தபின் இங்கு ஒரு படைப்பிரிவையே தங்க வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இது டச்சுக்கார அரசுக்கு வேண்டாத செலவு. இச்செலவைக் குறைக்கும் பொருட்டு பூநகரிக் கோட்டை அதிகாரி உனக்கு விஷம் வைத்துக் கொன்றுவிட்டு, நீ இயற்கையாக இறந்துவிட்டாய் என மேலதிகாரிகளுக்குத் தெரிவிக்கும் எண்ணத்திலிருக்கிறார்" என்றான் பீட்டர் சில்வா.

**(தொடரும்)**

# கவிஞர் நா. முத்துக்குமார்
# திறக்காமல் சென்ற பாதிக் கதவு



என் வாழ்வில், கவிதை படிக்கும் போதும் பாடம் கேட்கும்போதும் மட்டுமே உள்ளம் உயிர் கொண்டது போலிருக்கும். திரைப்பாடல்கள் கேட்கும் பொழுது பாடலின் பொருளையும், புதுப்புது வார்த்தைக் கையாடல்களையும் எண்ணி வியப்புடன் பார்ப்பவர்களிடம் எல்லாம் சொல்லிச் சொல்லித் திரிந்த என்னை மயக்குறச் செய்த கற்பனை, வார்த்தைப் பயன்பாடு, எளிமை எனப் பல்வேறு வகையிலும் தனிப்பெரும் ஆளுமையாய் இருந்தவர் கவிஞர். நா. முத்துக்குமார்.

புகழின் உச்சத்தில் இருந்த கவிஞரின் அறிமுகமும். அருகாமையும் கிடைக்கச் செய்த டாலஸ் மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச்சங்கம், ஒன் இந்தியா சங்கர் இவர்களுக்கு மிகப்பெரும் நன்றி. அவரது கவிதைகளைப் போலவே எளிமையான, எதார்த்தமான மனிதர். இயல்பாக மட்டுமே வாழத் தெரிந்த, வாழ முடியாது போனவர். அவரைப் பார்க்கும்போது எழுந்த எண்ணங்கள் பழகியபின் மாறிப்பேனது.

உடல்நிலை சரியில்லாது வந்ததால் தோற்ற நிலை வேறுமாதிரியான விமர்சனங்களுக்கு அவரை உள்ளாக்கியது. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் என்று படித்திருந்தும் அதை மறந்ததால் நானும் குற்றவாளியாகிறேன்.

அமெரிக்காவில் மிகப்பெரிய விழாவாக அமைந்த சித்திரைத் திருவிழாவில் பேசிக் கொண்டிருந்த கவிஞரை நேரமின்மை காரணமாக விரைவில் முடித்துக் கொள்ளச் சொன்னதற்காக அதிகப்படியான திட்டுகள் வாங்கிய பெருமையும் எனக்குத்தான். மீண்டும் அவர் பேச வரமாட்டார் என்று தெரிந்திருந்தால் தடுக்காமல் இருந்திருப்பேனோ என்னவோ?

அவரது வெற்றிக்குக் காரணம் இன்றுவரை சிறந்த படிப்பாளி என்பதுதான். படித்த நூல்களைக் கூடப் புதிதாகப் படிப்பதுபோல் திரும்பத் திரும்பப் படிக்கும் பழக்கம் கண்டு வியந்தேன். தமிழ்ப் படைப்புலகம் பாரதி தொடங்கி இவரைப் போன்ற மகா கவிகளை இழந்து கொண்டே இருப்பது பெரும் சாபம்.

கவிதை உலகில் அவர் திறக்காமல் சென்ற பாதிக்கதவும், அவரது வார்த்தைகளுக்காகக் கவியுலக முன்றிலும் காத்துக்கிடக்கின்றன.

*முனைவர். சித்ரா மகேஷ், யு.எஸ்.ஏ.*
*(அமெரிக்கா டாலஸ் தமிழ் சங்கம்)*



## பிந்து மாதவிக்கும் ஓவியா பிரச்னை!

இப்போது உலக தமிழ் ரசிகர்களிடையே மிகப் பிரபலமாகிவிட்ட 'பிக்பாஸ்' TV நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ளதால், பட வாய்ப்பை இழந்துள்ளார் பிந்து மாதவி!

விஜய் டிவியின் 'பிக் பாஸ்' நிகழ்ச்சி தொடங்கிய சில நாட்கள் கழித்து வந்தவர் இவர். 'பிக்பாஸ்' வீட்டுக்கு வந்த வேகத்தில், காயத்ரியிடம் அதிரடியாக கேள்விகள் எல்லாம் கேட்டார்.

பிந்துவுக்கு விமல் படத்தில் நடிக்கும் வாய்ப்பு பறிபோயுள்ளது. பூபதி பாண்டியன் 'மன்னர் வகையறா' படத்தில் நடிக்க பிந்துவை ஒப்பந்தம் செய்திருந்தார். இதன் விளம்பரமும் வந்தது. படத்தை தீபாவளிக்கு முடிக்க உள்ளோம். பிந்து திடீரென 'பிக்பாஸ்' வீட்டுக்கு போனதால், வேறு வழி இல்லாமல் அவரை நீக்கிவிட்டு, வேறு நாயகியை ஒப்பந்தம் செய்து விட்டதாக இயக்குனர் தெரிவித்தார்.

இதே போன்று ஓவியாவும் விஜய்சேதுபதியுடன் நடிக்க இருந்த 'சீதக்காதி' பட வாய்ப்பை இழந்தார். பரவாயில்லை, 'பிக்பாஸ்' நிகழ்ச்சிக்குப் போனதால் தமிழ் சினிமா உலகில் ஓவியாவுக்கு ஏகப்பட்ட மவுசு.

## நடிகருடன் 2 நாட்கள் பேசாமலிருந்த மனைவி!




'படுக்கையறைக் காட்சிகளில் நடித்த பிறகு என் மனைவி என்னிடம் இரண்டு நாட்களாக பேசவில்லை.' என்று பாலிவுட் நடிகர் நவாசுதீன் சித்திக்கி தெரிவித்தார்.

இவர் நடித்த இந்த இந்தி படம் பாபுமோஷாய் பந்தூக்பாஸ். பிரபலமான குஷன் நந்தி இப்படத்தை இயக்கினார். இம்மாதம் முதல் வாரத்தில் வெளியாகிற இப்படத்தில் ஆங்கிலப் படங்களையே தூக்கி அடிக்கக் கூடிய செக்ஸ் காட்சிகளை வைத்துள்ளனர். 48 இடங்களில் சென்சார் போர்டு கத்திரிக்கோல் போட்டுள்ளது.

சில காட்சிகளைப் பார்க்கவே கூச்சமாக உள்ளதாம். தமிழ் படங்களில் இப்போது 'அரைகுறையாக' இப்படிக் காட்சிகள் வந்தபோதிலும், இப்படி இல்லை.

'உங்கள் மனைவி ஒன்றும் சொல்லவில்லையா?' என்று கேட்டதற்கு நடிகர் நவாஸ் சொன்ன பதில் இரண்டு நாள் பேசாமல் இருந்தார். எப்படியோ சமாளித்துக் கொண்டேன்!

## நடிக்க வந்து 20 ஆண்டுகளானாலும் இளமை குன்றாத ஐஸ்வர்யா!



உலக அழகி ஐஸ்வர்யாராய் நடிக்க வந்து 20 வருடங்கள் ஆகின்றன. 1994ஆம் ஆண்டு உலக அழகியாகத் தேர்வாகி, மணிரத்தினத்தின் 'இருவர்' படம் மூலம் நடிகையானார். தமிழ், இந்தி, ஆங்கிலம், பெங்காலி படங்களில் நடித்து வருகிறார்.

பாலிவூட்டில் கவனம் செலுத்தத் தொடங்கினார். ஐஸ்வர்யாராய் ஹொலிவூட் பக்கமும் சென்று வெற்றி கண்டார். சர்வதேச Brands ஐஸ்வர்யாவை தங்கள் பிராண்ட் அம்பாசிடராக ஒப்பந்தம் செய்தன. இவர் நடிக்க வந்து 20 ஆண்டுகளானாலும், இன்னும் அதே இளமை, அழகுடன் உள்ளார். அவருக்கான மவுசு இன்னும் குறையவில்லை.

பாலிவூட்டில் மிகப்பிரபலமான அமிதாப்பச்சன் குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டு, ஆராத்யா என்ற மகளுக்குத் தாயாரானார் சமீபத்தில் தந்தையை இழந்து மீளாத் துயரத்தில் ஆழ்ந்தார். மகள் ஆராத்யா என்றால் இவருக்கு உயிர். எங்கு சென்றாலும், ஆராத்யாவை உடன் அழைத்துச் செல்வார். மகளைப் பார்த்துப் பார்த்துப் பத்திரமாக வளர்த்து வருகிறார் ஐஸ்வர்யா.

## உலகத்திலேயே அதிகம் சம்பாதிக்கும் நடிகை!



உலகிலேயே அதிகம் சம்பாதிக்கும் நடிகையாக ஹாலிவுட் நடிகை Emma Stone இடம் பிடித்துள்ளார்.

இவர் கடந்த ஒரு வருடம் மட்டும் 26 மில்லியன் டொலர் சம்பாதித்துள்ளார். தனது 15 வயதில் திரைப் பயணத்தை தொடங்கிய இவர், வருடத்திற்கு வருடம் திரைத்துறையில் சாதனை படைத்து வருகிறார்.

நடிப்பு மட்டுமின்றி இசை ஆல்பங்களையும் இடையிடையே வெளியிட்டு, தனது வருமானத்தை அதிகரித்துக் கொள்கிறார்.

கடந்த ஆண்டு LA LA LAND திரைப்படத்தில் நடித்த இவருக்கு சிறந்த நடிகைக்கான ஒஸ்கார் விருது கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

## பிரச்சினைகளுடன் பயணித்த ராம் இயக்கிய 'தரமணி' வெற்றி!

தரமான படங்கள் தாமாக தோற்பதில்லை. முயற்சித்தால் பலமானவர்களுடன் கூட மோதி ஜெயிக்கலாம் என்பதை உறுதிப்படுத்தி இருக்கிறது. 'தரமணி' படத்தின் வெற்றி.

தயாரிப்பு தொடங்கிய நாள் முதல் பிரச்சினைகளுடன் பயணித்த 'தரமணி' திரையில் விரியும் வரை சந்தித்த சங்கடங்கள் ஏராளம் என்பதை பத்திரிகையாளர்கள் சந்திப்பில் விவரித்தார் இயக்குநர் ராம். தனுஷ், உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் நடித்த படங்கள் தமிழ் நாட்டில் பெரும்பான்மையான தியேட்டர்களில் திரையிட்டப்பட்டன. எஞ்சிய, கழித்துக்கட்டப்பட்ட தியேட்டர்களே தரமணி படத்திற்கு கிடைத்தன. தினமும் 400 காட்சிகள் மட்டுமே தரமணிக்கு கிடைத்தது. தனுஷ், உதயநிதி ஸ்டாலின் படங்கள் தலா 1200, 1000 காட்சிகள் என ஓடி கல்லா கட்டின.



படிக்கிற புள்ள எங்க படிச்சாலும் சாதிக்கும் என்பதை தரமணி 400 காட்சிகள் மூலம் நிரூபித்து கல்லா கட்டியது. ரிலீஸ் அன்று தொடக்க காட்சியில் ஆட்களே வராமல் காத்தாடிய தியேட்டர்கள் மாலை காட்சியிலிருந்து இளைஞர் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது ஆச்சர்யம் இல்லை உண்மை.

தொலைக்காட்சிகளில் தரமணி விளம்பரம் இல்லை. பத்திரிகை விளம்பரம் மட்டுமே. இணையத் தளங்களும், பத்திரிகைகளும் படத்தின் தரத்தை உயர்த்திப் பிடித்து உரக்க கூவியதன் விளைவு, மாலைக் காட்சிக்கு தரமணி படம் பார்க்க இளைஞர்கள் வரக் காரணமானது. தரமான படங்களை ஊடகங்கள் எந்த எதிர்பார்ப்பும் இன்றி தோளில் தூக்கி சுமப்பார்கள் என்பதை மீண்டும் ஒருமுறை தமிழ் சினிமாவுக்கு உறுதிப்படுத்தியுள்ளன.

இளைஞர்கள் விரும்பும் படமாக தரமணி குறிப்பிடப்படுகிறது. மாற்று சினிமாவை முன்னெடுப்பவர்களுக்கு நம்பிக்கை தரும் படமாகியிருக்கிறது தரமணி. பலத்த போட்டிக்கிடையில் குறைவான காட்சிகள் மூலம் முதல் ஐந்து நாட்களில் தமிழகத்தில் சுமார் ரூ1.80 கோடி மொத்த வசூல் செய்திருக்கும் தரமணி அடுத்து வரும் நாட்களில் தியேட்டர்கள் அதிகரிக்கப்பட்டு, காட்சிகள் கூடுதலாக்கப்படலாம்.

- ஏகலைவன்

# 900 படங்களில் நடித்த 'அல்வா' வாசு மறைவு



சினிமாவில் சில காட்சிகள் மட்டுமே வந்து போனாலும், ரசிகர்களின் மனதில் இடம் பிடிக்கிற வாய்ப்பு சிலருக்கு மட்டுமே வாய்க்கும். அதிலும் அவர்களது நடிப்பை காலம் கடந்து பேசுவதெல்லாம் அரிதினும் அரிது.

சமீபத்தில் மறைந்த நகைச்சுவை நடிகர் 'அல்வா' வாசு சிறிய கதாபாத்திரங்களில் இதுவரை 900 படங்களுக்கு மேல் நடித்திருக்கிறார். தனது அலட்டல் இல்லாத நடிப்பால் பலரையும் கவர்ந்து இருக்கிறார். வாசுதேவன் அவர் முழுப்பெயர்.

இசை அமைப்பாளராவதற்குச் சென்னை சென்றார். உதவி இயக்குனராகி, கொமடி நடிகராகிப் போனார். கற்பனை வளம் கொண்டவர் வாசு. எப்படியாவது இயக்குனராகி விடலாம் என்று எண்ணியிருந்தார். கடைசிவரை இயக்குனராகும் ஆசை கைகூடாமலே காற்றோடு கலந்து விட்டது வாசுவின் ஆன்மா.

அமைதிப்படை படத்தில் சத்யராஜுக்கு அல்வா வாங்கிக் கொடுக்கும் கேரக்டரில் நடித்து, அதன்மூலம் 'அல்வா' வாசு எனப் பிரபலமானவர் நடிகர் வாசு. இவர், வடிவேலுவுடன் சேர்ந்து பல படங்களில் காமெடி செய்து நம்மைச் சிரிக்க வைத்தவர். இவர் இயக்குநர் மணிவண்ணனிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றி, 'வாழ்க்கை சக்கரம்' படம் மூலம் நடிகராகவும் அறிமுகமானார்.

தமிழில் நகைச்சுவை கதாபாத்திரங்களிலும் குணச்சித்திர வேடங்களிலும் நடித்து பிரபலமானவர். அமைதிப்படை, அருணாச்சலம், சிவாஜி மற்றும் நடிகர் சத்யராஜுடன் பல படங்களில் நடித்துள்ளார். நகைச்சுவை நடிகர் வடிவேலுவுடன் இவர் நடித்த காட்சிகள் மிகவும் பிரபலமானவை.

கல்லீரல் பாதிப்பால் கடந்த ஆறு மாதங்களாக, மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வந்தார். அல்வா வாசுவின் மனைவி அமுதாவிடம், அவருக்கு சிகிச்சை பலன் அளிக்கவில்லை, விரைவில் உயிர் பிரிந்துவிடும். அதனால் அவரை வீட்டுக்கு அழைத்துச் செல்லலாம்' என்று மருத்துவர்கள் கூறியுள்ளனர். இவர்களுக்கு, கிருஷ்ண ஜெயந்திக்கா என்ற மகள் உள்ளார்.

# ரஜினி 2.0: திட்டமிட்டபடி ஜனவரி 25இல்! லைகா அறிவிப்பு

ரஜினியின் '2.O' திரைப்படம் திட்டமிட்டபடி ஜனவரி 25இல் வெளியாகும் என்று அதனைப் பிரமாண்டமாகத் தயாரித்து வரும் லைகா நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது. 400 கோடி ரூபாய் செலவில் ஷங்கர் இயக்கத்தில் ரஜினி நடித்துள்ள இப்படத்தின் 'கிராபிக்ஸ்' பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. முழுக்க '3டி' தொழில்நுட்பத்தில் உருவாகும் படம் என்பதால், மிகச் சிரத்தையாக கிராபிக்ஸ் மேற்கொண்டு வருகிறது. "கிராபிக்ஸ் காட்சிகள் தாமதமாவதால்தான் தீபாவளி வெளியீட்டிலிருந்து ஜனவரி வெளியீட்டுக்கு மாற்றினோம். ஜனவரி 25க்குள் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு விடும்" என்று லைகா தெரிவித்துள்ளது. இறுதிப்பாடல் படப்பிடிப்புக்காக 12 நாட்கள் நடைபெறவுள்ள படப்பிடிப்புக்காக சென்னையில் பிரமாண்டமான அரங்குகள் அமைக்கும் பணி சென்னையில் முடிவடைந்து விட்டன. இந்தப் பாடலில் ரஜினியும், எமியும் பங்கேற்கிறார்கள்" என்று அறிவித்துள்ளனர். படத்தின் இசை வெளியீடு தீபாவளி அன்று நடைபெறுகிறது. ஏ.ஆர்.ரஹ்மான் படத்தின் இசை அமைப்பாளர்.



# 'உண்மை காதல் தோற்காது!'
## ஆரவ் பற்றி மனம் திறந்த ஓவியா



'பிக்பாஸ்' நிகழ்ச்சியிலிருந்து வெளியேறிய நடிகை ஓவியா எப்படி இருக்கிறார்? திரும்பவும் தான் அந்த வீட்டுக்குப் போகமாட்டேன் என்று உறுதியாகச் சொல்லிவிட்டார். ஓவியா 'பிக்பாஸ்' வீட்டிலிருந்து போன பின்னர், அந்த நிகழ்ச்சியைப் பார்ப்போர் தொகை குறைந்துள்ளதால், அவரை மீண்டும் அங்கு கொண்டு போக விஜய் டி.வி முயற்சி எடுத்தது. ஆனால், ஓவியா மறுத்து விட்டார்.

ஜூலி, சக்தி அங்கிருந்து வெளியே வந்து விட்டார்கள். அவர்களை எனக்காக ஏதாவது சொல்லி நோக வைக்காதீர்கள் என்று கேட்டுக் கொண்டுள்ள ஓவியாவிடம் இப்போது உங்கள் மனஅழுத்தம் எப்படி இருக்கிறது. என்று கேட்டதற்கு, அப்படி ஒன்றும் இப்போது இல்லை. ஆனால், என் மனதில் ஆரவுடனான காதல் இறுக்கமாக வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது. எனது காதல் உறுதியானது. உண்மையான காதல் தோற்காது. நீங்கள் என்னைப் பைத்தியம் என்று நினைக்கலாம். ஆனால், என் காதல் உண்மையானது. அதை நான் திரும்பப் பெறுவேன்" என்கிறார் ஓவியா.

# 'பிக்பாஸ்' இனி களைகட்டுமா, களை இழக்குமா?



'பிக்பாஸ்' வீட்டிலிருந்து ஓவியா வெளியேறியதுமே பல பார்வையாளர்கள் மீண்டும் சீரியல்கள் பக்கம் ரிமோட்டைத் தட்டி விட்டனர். 'ஓவியா நிச்சியம் திரும்ப வருவார்' என்ற எதிர்பார்ப்போடு கொஞ்சப் பேர் நிகழ்ச்சியைப் பார்த்து வந்தனர். ஆனால் ஓவியா மீண்டும் வரவில்லை. வரும் அறிகுறியும் இல்லை. மாறாக புதிய பங்கேற்பாளர்களாக சுஜா, ஹாரி, காஜல் போன்றோர் உள்ளே வந்தனர். இவர்களில் சுஜாவையாவது ஓரளவு பார்வையாளர்களுக்குத் தெரியும். ஹாரி காஜல் அவ்வளவாக பரிச்சியமில்லாதவர்கள். இந்த மூவரின் வருகைக்கு பிறகும் பெரிய வீட்டில் எந்த சுவாரஸ்யமும் இல்லை. சினேகநுன, வையாபுரி இந்த இருவர் மட்டும்தான் இப்போது அதிக வெறுப்பைச் சம்பாதிக்காதவர்களாக உள்ளனர். கிட்டத்தட்ட காயத்ரி ஒரு ஜூலி மாதிரி ஆகிவிட்டார் ஆரவ் காயத்ரியும் வெளியேறிவிடுவார். 'பிக்பாஸ்' டாஸ்குகளும் படு மோசம் கிட்டத்தட்ட 'பிக்பாஸ்' நிகழ்ச்சி படுத்தே விட்டது. ஏதோ கமல்ஹாசன் ஏதேஏதோ சொல்லி சமாளித்து, 'பிக்பாஸ்' நிகழ்ச்சியை இழுத்துக் கொண்டே போகிறார். பொறுத்திருந்து பார்க்க வேண்டும் மீண்டும் களைகட்டுமா? களை இழக்குமா? என்பது தெரியும்.



# பாரதிராஜா படத்தின் நாயகி ரகசிய திருமணம்



பாரதிராஜாவின் 'தாஜ்மஹால்' படத்தில் அவரது மகனுக்கு நாயகியாக நடித்த ரியாசென், மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்தவர் அவருக்கு சுத்தமாக மார்க்கெட் இப்போது இல்லை இவர் தனது காதலர் ஷிவம்திவாரியை ரகசியமாகத் திருமணம் செய்து கொண்டுள்ளார். இரு வீட்டார் மட்டுமே திருமண நிகழ்ச்சியில் பங்கு கொண்டனர். தமிழ்படவுலகுக்கு நன்கு அறிமுகமான இவரது அக்கா நடிகை ரைமாசென்னுக்கு இன்னும் திருமணமாகவில்லை.

# சமந்தா–நாகசைதன்யா காதல் சினிமாவாகும்!



சமந்தாவுடன் தன் காதல் அனுபவம் குறித்து நாகசைதன்யா பின்வருமாறு கூறுகிறார்:

சமந்தாவைவிட இந்த உலகில் அழகான பெண் யாரும் இல்லை. அவரை மனைவியாக அடைவது என் அதிர்ஷ்டம்.

எங்கள் காதல் வாழ்க்கையை யாராவது சினிமாவாக எடுக்க நினைத்தால் அதில் நானும் சமந்தாவும் இணைந்து நடிக்கத் தயார்!

# 'நான் திரும்ப வருவேன்!': தமிழில் பிரபாகரன் படம்

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் வாழ்க்கை வரலாறு தமிழில் திரைப்படமாக வெளியாக இருக்கிறது.

சிறிய இடைவேளைக்குப் பிறகு நடிகர் மோகன் பாபுவின் மகன் மனோஜ் மஞ்சு நடிக்கும் திரைப்படம் 'ஒக்கடு மிகிலடு'. இந்தப் படத்தில் அவர் ஒரு போராளியாக நடித்து வருகிறார். இந்தப் படத்தின் கதை இலங்கை விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் வாழ்க்கைக் கதை எனக் கூறப்படுகிறது. அதனால்தான் 'அன்டோல்டு ஸ்டோரி' எனக் கேப்சன் வைக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள்.

இந்தப் படத்தின் படப்பிடிப்பு இலங்கையில் நடந்தது. படத்தை அஜய் ஆண்ட்ரூஸ் இயக்க, பத்மஜா பிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. 'ஒக்கடு மிகிலடு' தமிழில், 'நான் திரும்ப வருவேன்' எனும் பெயரில் வெளியாக இருக்கிறது. தமிழில் வசனம் மற்றும் பாடல்களை சுரேஷ் ஜித்தன் எழுதியிருக்கிறார். இம்மாதம் தெலுங்கில் வெளியாகும்போதே தமிழிலும் வெளியிட முடிவு செய்திருக்கிறார்கள். தென்னிந்தியாவைப் பொறுத்தவரை மிக 'சென்சிட்டிவான' அரசியல் போராட்டங்களில் ஒன்று இலங்கை உள்நாட்டுப் போர். அதை மையப்படுத்தி தமிழில் சில படங்கள் வெளி வந்திருந்தாலும், தெலுங்கில் அந்த மாதிரியான படங்கள் வெளிவந்தது இல்லை.





இந்தப் படத்தின் போஸ்டரில் புலிகள் இயக்கத்தின் லச்சினை சாயல் இருக்கிறது. பிரபாகரனின் ஆரம்பகால வாழ்க்கையும், புலிகள் இயக்கத்தைப் பற்றியும் இப்படம் எடுக்கப்பட்டிருப்பதாக தெரிய வந்துள்ளது.

மசாலா படங்கள் வெளியாகும் தெலுங்கு சினிமாவில் இந்தப் படம் உணர்வு ரீதியாக எடுக்கப்பட்டிருக்கிறது. பிரபாகரனைச் சித்தரிப்பதாக இருக்கிறதால், தமிழில் வெளிவருவதில் சிக்கல் ஏற்படலாம் என்று கூறப்படுகிறது.

# இருக்கிறம்



மேற்குலகில் ஒருவரை ஒருவர் சந்திக்கிறபோது 'HOW ARE YOU?' என்று அன்புடன் பரஸ்பரம் விசாரித்துக் கொள்வதும், மற்றவர் கால நிலையைப் பொறுத்து, 'YE, I AM FINE' என்று பதில் சொல்வதும் எங்கும் காணக்கூடிய காட்சியாகும்.

தொடர்ந்தும் அவர்களின் உரையாடல் கால நிலையைப் (WEATHER CONDITION) பற்றியும், நாட்டு நிலைபற்றியும் தொடர்ந்து பேசிக் கொள்வார்கள். தனிநபர் பற்றிய ஆராய்ச்சியோ, விமர்சன அனேகமாக இருக்கமாட்டாது.

ஊரிலும், வெளிநாட்டிலும் தமிழர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கிறபோது 'எப்படி இருக்கிறீங்கள்?' என்று கேட்பதும், 'இருக்கிறம்' என்றும் நறுக்குத் தெறித்தாற்போல் பன்முக தன்மையுடைய வார்த்தைப் பிரயோகம் இயல்பாகவே நடைபெறும். 'இருக்கிறம்' என்பதை 'நன்றாக இருக்கிறேன்' என்றோ, அல்லது ஏதோ காலம் போய்க் கொண்டிருக்கிறது என்றோ ஆளுக்குத் தக்கபடி அர்த்தங்கள் மாறுபடும். பொதுவாக பரஸ்பரம் நலம் விசாரித்ததற்குப் பிறகு, தமிழர்களின் உரையாடலில், குடும்பம், பிள்ளைகள், பொருளாதாரம் போன்ற விசாரிப்புகளே அடுத்தடுத்து வரும்.

உலகம் முழுவதும் விதம் விதமான மனிதர்களும், அவர்களின் பழக்க வழக்கங்களும் பல்வேறு வகையான கலையும், கலாச்சாரமும், வாழ்க்கை முறையும் வண்ணமயமாய் நிகழ்கின்றன. உலகின் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு மனிதன் பயணம் செய்வதற்கு பெரும் கால அவகாசம் தேவைப்பட்டது. மனிதனைப் போலவே தகவல்களும், தொழில்நுட்பங்களும் உலகின் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்தை அடைய பல வருடங்கள் தேவைப்பட்டது. அது ஓர் காலம்.

தற்கால நவீன யுகத்தில் ஒரு நிமிட நேரத்தில் எந்த விஷயத்தையும் உலகெங்கும் அறிவிக்க கூடிய தொழில் நுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டன.

முன்பெல்லாம் ஒரு தமிழ் திரைப்படம் தமிழ்நாட்டில் முக்கிய நகரங்களில் வெளியிடப்பட்டு, நூறு, இருநூறு நாட்கள் வெற்றிகரமாக ஓடிய பிறகே, கொழும்பு, கோலாலம்பூர் ஆகிய அயல்நாடுகளை எட்டிப்பார்க்கும். லண்டனுக்கும் அப்படியே கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வருவதற்கு மூன்று மாதங்கள் செல்லும். அதுவரை பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வானொலிகளிலும் ஊடாக மட்டுமே அச்செய்திகளைக் கேட்டு ரசிக்க முடியும். இதனால் ஏற்பட்ட பெரு நன்மையாதெனில், திரைக்கு வந்த படங்களின் மிகத் தரமான திரைப்படங்களை மட்டுமே உலகத் தமிழர்கள் அனைவரும் கண்டுகளிக்கக் கூடியதாக இருந்தது. தரமற்ற படங்கள் அனைத்தும், தலைநகரிலேயே (சென்னை) தடுத்தாற்கொள்ளப்பட்டுவிட்டன. தீமைகள் பரவாது தடை செய்யப்பட்டன. நல்லவைகள் மட்டுமே பல்கிப் பரவின. பாலையும் தண்ணீரையும் பிரிக்க வேண்டிய சிரமமின்றி, பாலை மட்டுமே பருகித் திரிந்த அன்னப்பறவைகளாக மக்கள் குழப்பமின்றி வாழ்ந்த காலம் அது.



இன்றைய தொழில்நுட்ப அசுர வளர்ச்சியின் காரணமாக தமிழ் திரைப்படங்கள், மற்றும் உலகத் திரைப்படங்களைக் கூட தயாரிப்பாளர்கள் முறையாக வெளியிட முன்பே (Official Realese) நம்முடைய கணனித் திரைகளில் கண்டு களிக்கக் கூடியது நவீன தலைமுறையின் 'வரப்பிரசாதம்'ஆகும். இதனை நாம் தொழில்நுட்ப வளர்ச்சியின் பெரும் சாதனையாகப் போற்றுவதா? வேதனையாக எண்ணிக் கவலைப்படுவதா? அல்லது நிதானமுடன் சரியான பாதையைத் தேர்ந்தெடுப்பதா? முச்சந்தியில் நிற்கும் ஒவ்வொரு மனிதனிடமும் இந்தக் கேள்வி எழவேண்டிய நேரம் இது. அடுத்து வரப்போவது என்ன? என்பதை நாம் அறிந்து கொண்டால், இன்று இந்தக் கேள்வி ஏன் மனதில் தோன்றியது என்பதற்கான விடையை அறிந்து கொள்ளலாம்.



தொழில்நுட்ப வளர்ச்சியின் அடுத்த தலைமுறை (Next Generation Technology) 'செயற்கை நுண்அறிவு' (AI-ARTIFICIAL INTELLIGENCE) எனப்படும் மனித அறிவுக்கு மாற்று சக்தியாக கணனி உலகம் கட்டியம் கூறுகிறது. பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்பு அதோ வரப்போகிறது. இதோ வரப்போகிறது என்று அறிவித்த விஷயங்கள் இது நடந்தால் நன்றாக இருக்கும் என்று நாம் கனவு விஷயங்கள், அனைத்தையுமே கடந்து வந்து விட்டோம் என்பதுதான் நிகழ்கால உண்மை. கணனி மூலம் இணைய வாயிலாக இன்று பெருவாரியான விஷயங்களை வீட்டில் இருந்தபடியே செயல்படுத்தக் கூடிய வசதிகளை நாம் அனைவரும் சுகமாக அனுபவித்து வருவதே இதற்கெல்லாம் சிறந்த உதாரணமாகும். நிகழ்காலத்தில் அலுவலகம் செல்லத் தேவையில்லை. வீட்டில் இருந்தபடியே வேலை செய்யலாம். வங்கிக்கு செல்லத் தேவையில்லை. வீட்டில் இருந்தபடியே பணப்பரிமாற்றம் செய்யலாம். கடைகளுக்குச் செல்லத் தேவையில்லை. வீட்டில் இருந்தபடியே சாமான்களை வாங்கிக் குவிக்கலாம். நொடிப் பொழுதில் எந்த நாட்டில் உள்ள நண்பர்கள், உறவினர்களுடன் தொடர்பு கொண்டு கதைக்கலாம். ஏன் அவர்களின் அழகினைக் கூட நாம் வீடியோவாகப் பார்த்துக் கொண்டே பேசலாம். இவற்றில் பெரும்பாலான விஷயங்களை இரண்டாயிரம் ஆவது ஆண்டு ஆரம்பத்தில் நாம் கற்பனை செய்து கூடப் பார்க்கவில்லை. இதுபோலவே, அடுத்து வரக்கூடிய செயற்கை நுண் அறிவும் (ARTIFICIAL INTELIGENCE) வெகு விரைவில் சாத்தியமே! இதற்கு எவ்வாறு நாம் முகம் கொடுக்கப் போகிறோம்?

செயற்கை நுண் அறிவு என்றால் என்ன?

கூகுள் Google தொழில்நுட்பத்தின் மூலம், ஓட்டுநர் இல்லாத வாகனங்கள் (DRIVERLESS - CAR) உலகின் பல இடங்களிலும் சோதனை ஓட்டத்தினை வெற்றிகரமாக முடித்து விட்டு, நம் பயன்பாட்டுக்குத் தயாராக இருக்கின்றன. அதில் நாம் சவாரி செய்யக் கூடிய காலம் விரைவில் வந்து விடும். இதுபோல், பல்வேறு துறைகளிலும் செயற்கை நுண் அறிவின் (Artificial Inteligence) அசுரக் கரங்களின் மானிட உலகம் விரைவில் தவழப்போகிறது. மருத்துவ உலகமும் இதற்கு விதி விலக்கு ஆகாது.

அடிப்படையில் உடலும், மனமும் ஒருங்கிணைந்த மனிதனையும், அவனுக்குத் தேவையான மருத்துவத்தையும் அனைவரும் சரியாக புரிந்து கொண்டு, இன்றைய சாதாரண விஞ்ஞான வளர்ச்சி அடைந்த கால கட்டத்திலே நடைமுறையில் ஏற்பட்டுள்ள தாக்கங்களை நாம் அனைவரும் அறிந்து கொள்வது அவசியம்.

மனித உடல் முற்றிலும் இயற்கையானது. (Human Body is 100 Percent Natural) ஒரு சதவீதம் கூடச் செயற்கைக் கலப்பில்லாதது. பஞ்ச பூத இயற்கையிலிருந்து உண்டானது மீண்டும் பஞ்ச பூதங்களுடன் (Natural, Elements) இரண்டறக் கலந்து மாயமாகி மறையக் கூடியது. இதுவே இயற்கையின் நியதி.

மனித மனமோ மிகவும் நுட்பமானது. அண்டமெங்கும் பரவியிருப்பது. கட்டுக்கும் கட்டளைக்கும் கட்டுப்படாதது. பிறந்த நொடி முதல், மரண தருணம் வரை நில்லாது ஓடக்கூடியது.

இத்தனை சிறப்புகள் பொருந்திய இயற்கையான உடல் அமைப்பும் எல்லையற்ற மனமும் ஒன்று சேர்ந்த மனித வாழ்வின் துள்ளாட்டமும், அல்லாடல்களும், இடையில் ஏற்படும் நோயாட்டமும் அனுபவிக்காதார் உலகில் உண்டோ? இவை அனைத்துமே தனி மனித அனுபவங்கள். அவரவர் வரலாறுகள். எவரும் மறுக்க இயலாத இயற்கையின் நியதி அது.

இயற்கையான மனிதனின் வாழ்வில் விஞ்ஞானமும், விஞ்ஞான வளர்ச்சியும் மருத்துவ அறிவியலும் மருந்துகளின் வளர்ச்சியும் ஆரோக்கியத்தை வளர்த்து விட்டதா? அல்லது நோய்களைப் பரப்பிவிட்டதா? சற்று சிந்திக்க வேண்டிய முகூர்த்த நேரம் இது.

இன்றைய மனிதனின் வீரியத்தையும், செயல்பாட்டினையும் பெருமளவில் முடக்கி வைத்திருக்கும் டயபட்டிஸ் உயர் இரத்த அழுத்தம் (BP), கொலஸ்ரோல் Cholesterol போன்ற நவீன நோய்களுக்கு யார் காரணம்? அனைவரும் சிந்திக்க வேண்டியது அவசியம். ஒரு பக்கம் அசுர விஞ்ஞான வளர்ச்சியினைப் பின் தொடர்ந்து ஓட்டமாய் ஓடும் மனிதர்கள் விரைவில் களைப்புற்று, நோயுற்று முடங்கிப் போகிறார்கள். மறுபக்கம், விஞ்ஞான வளர்ச்சியினை தனக்குத் தேவையான அளவு பயன்படுத்தி, அறிவியலுடன் தொழில்நுட்பங்களுடன் கைகோர்த்து நிதானமாக நடந்து செல்லும் மனிதன் ஆரோக்கியமாக வாழ்கின்றான்.

நாம் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கும் செயற்கை நுண் அறிவு தொழில்நுட்பத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்டு? சரியான கோணத்தில் நம் வாழ்கைப் பாதையை அமைத்துக் கொள்ள வேண்டும். ஓட்டுநர் இல்லாத காரில் பயணிக்கப் போகும் தொழில்நுட்பம், மனிதர்கள் இல்லாத வீட்டில் வாழப்போகும் மனிதன். இதுவே எதிர்கால செயற்கை நுண் அறிவு எமக்குத் தரப்போகும் வரம். கற்பனை செய்து பாருங்கள். சந்தோஷமா? துயரமா? வரமா? சாபமா? ஆரோக்கியமா? அழிவா? எப்படிக் கட்டுக்குள் வைத்திருப்பது?

கடந்த இருநூறு வருடங்களாக உடலும், மனமும் ஒருங்கிணைந்த மனிதனுக்கும், மனித குலத்துக்கும் பக்க விளைவுகள் இன்றி பிணிதீர்க்கும் பணியினை இயற்கையோடு இணைந்து ஹோமியோபதி மருத்துவம் தொய்வின்றியும், நிறைவாகவும் செய்து கொண்டிருக்கிறது. எதிர்கால சவால்களுக்கும், ஹோமியோபதி மருத்துவமும், உயர் தொழில்நுட்ப வியூகங்களுடன் கூடிய ஹோமியோகெயரும் பணி புரியத் தயாராகவே இருக்கிறது. ★

**இலவச ஆலோசனைகளுக்கு**
**0208 1441553**

# டயபட்டிஸ் சலன்ஜ்

## ஹோமியோபதி மருத்துவம் + உங்கள் ஒத்துழைப்பு



## 100% கட்டுபடுத்தலாம்

### சிறப்பு சிகிச்சைகள்

- **உயர் இரத்த அழுத்தம்** (B.P/Hyper Tension)
- **கொலஸ்ட்ரால்** (Cholesterol)
- **சிறுநீரக கோளாறுகள்** (Kidney Diseases)
- **மூட்டு வலி** (Arthritis)
- **தோல் வியாதிகள்** (Skin Diseases)
- **ஹார்மோன் பிரச்சனைகள்** (Hormone Disorders)
- **மாதவிடாய் கோளாறுகள்** (Menses Disorders)
- **செக்ஸ் பிரச்சனைகள்** (Sex Disorders)
- **குழந்தையின்மை** (Infertility)
- **டயபட்டிஸ்** (Diabetes)

டயபட்டிஸ் குறித்த பயமும், அறியாமையும், பீதியுமே ஒரு டயபட்டிஸ் நோயாளியின் வாழ்க்கையில் ஏற்படும் முதல் முடிச்சாக அமைகின்றது. இந்த முடிச்சே மேலும் பல முடிச்சுகளை ஏற்படுத்தி, தீராத பிரச்சினைகளாக மாறிவிடுகிறது.

சவால்களைச் சமாளித்து, ஆரோக்கியமாக வாழ ஹோமியோபதி மருத்துவம் பக்க விளைவுகளின்றி உறுதுணையாக இருக்கும்.

எத்தனை வயதில் டயபட்டிஸ் வந்தாலும், மேலும் நாற்பது, ஐம்பது வருட காலம் தாராளமாக உயிர் வாழலாம்

உயர்தர மருத்துவம் → பாதுகாப்பான மருந்துகள் → விரைவான சேவை

**HOMOEO CARE**

30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்

**இலவச மருத்துவ ஆலோசனைக்கு**
**0208 144 1553**

Viber: 0044 7833341693 skype: homoeocare வெப்சைட்: www.homoeocare.com இமெயில்: homoeocare@rediffmail.com





# அர்ச்சகர்/பகுதி நேர நிர்வாக அலுவலர் வெற்றிடம்

## இலண்டன் உயர்வாசற்குன்று முருகன் ஆலயத்தில் முழு நேர அர்ச்சகர் பதவிக்கான வெற்றிடம்.

இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் அர்ச்சகர் முறையாக ஆகமம் பயின்று, விவாகம் செய்தவராகவும், குருக்கள் பட்டம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

கோயிற் பூசை, ஓமம், விவாகம் முதலியன செய்யக்கூடியவராகவும், தமிழில் அர்ச்சனை செய்யக்கூடியவராகவும், ஆலயத்திற் பதினைந்து ஆண்டுகளிற்குக் குறையாமல் பணியாற்றியவராகவும் தேகாரோக்கியம் உள்ளவராகவும், சுவாமிக்கு நைவேத்தியம், அலங்காரம் செய்யக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

ஆகக்கூடியது 12 மாதங்கள் பணி புரியலாம். அதன்பின் ஒரு மாத விடுமுறை உண்டு. சம்பளம் நேரில் முடிவு செய்யப்படும். தங்குவதற்கு ஆலயத்திலே தனியாக இருப்பிட வசதியும் செய்து கொடுக்கப்படும். இதனைத் தவிர வேறு



ஊதியங்களும் கிடைக்கும். குடும்பத்தை அழைக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

விண்ணப்பப் படிவத்துடன் ஆகமம் பயின்ற இடம், பணிபுரிந்த இடங்களில் இருந்து பெற்ற சான்றிதழ்களையும் சேர்த்து முழுப் புகைப்படத்தையும் இணைத்து கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு 20.09.2017ற்கு முன்பாக அனுப்புதல் வேண்டும்.

### பகுதி நேர நிர்வாக அலுவலர்

இப்பதவிக்கு விண்ணப்பிப்போர் சைவசீலராகவும் சைவ சமயத்தை முறையாகக் கடைபிடிப்பவராகவும் இருத்தல் வேண்டும். ஆங்கிலம் தெரிந்தவராகவும், கணினி பழகியவராகவும் இருப்போர்க்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

இப்பதவிக்கு விண்ணப்ப படிவத்துடன் பயின்ற இடம், பணிபுரிந்த இடங்களில் இருந்து பெற்ற சான்றிதழ்களையும் சேர்த்து முழுப் புகைப்படத்தையும் இணைத்து கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு 20.09.2017ற்கு முன்பாக அனுப்புதல் வேண்டும்.


Secreatary
Highgatehill Murugan Temple
200A Archway Road
London N6 5BA

# Sainica Travels ன்

## எதிர்வரும் சுற்றுலாக்கள்.

- தரமான தங்குமிட வசதிகள் **அனைத்து விமானசீட்டுக்கள்**, **மூன்று நேர உணவு** மற்றும் தொலைக்காட்சி பொருத்திய குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனம்.
- முதியவர்களுக்கும், பிரயாணத்தில் உதவி தேவைப் படுபவர்களுக்கும் உரிய வசதிகள் செய்து தரப்படும். (Wheelchair Access)
- உங்கள் தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்ய எமது நிறுவன முகவர் ஒருவர் UK இல் இருந்தே முழு சுற்றுலாவிலும் உங்களுடன் பயணிப்பார்.
- விசா பெற சிரமப்படுபவர்களுக்கு விசா வசதிககள் செய்து தரப்படும்.

### வட இந்திய சுற்றுலா

பயணத்திகதி: **25.09.2016** முதல் **11.10.2016** வரையயானா **16** நாள் சுற்றுலா.

**கட்டணம் £1700**

பயணிக்கும் இடங்கள்

- **மும்பை**
- **ஷீர்டி (சீரடி)**
- **காசி**
- **புத்த கயா**
- **மதுரா**
- **டில்லி**
- **தாஜ்மஹால்**



- **ஆக்ரா போர்ட்**
- **ஹரித்வார்**
- **ரிஷிகேசம்**
- **திரம்பகேஸ்வர்**



### சிதம்பரம் ஆருத்ரா தரிசனம்

பயணத்திகதி: **27.12.2017** முதல் **06.01.2018** வரையயானா **11** நாள் சுற்றுலா.

**கட்டணம் £1050**

பயணிக்கும் இடங்கள்

- **சிதம்பரம் - 5 நாட்க்கள் ஆருத்ரா தரிசனம்**



- **நவக்கிரக கோவில்கள்**
- **சுவாமி மலை**
- **தஞ்சை பெரும் கோவில்**
- **சீர்காழி**
- **பூம்புகார் - சிலப்பதிகார அருங்காட்சியகம்**



- **பூம்புகார் - கண்ணகி சிலை**

### வியட்நாம், தாய்லாந்து &கம்போடியாவிற்கான சுற்றுலா

பயணத்திகதி: **12.02.2018** முதல் **01.03.2018** வரையயானா **16** நாட்கள் சுற்றுலா.

**கட்டணம் £1890**

பயணிக்கும் இடங்கள்

**Vietnam / வியட்நாம்:**

- ஸ்ரீ மாரியம்மன் கோவில் - Ho chi minh city
- **Cu chi Tunnels**/ கு சி சுரங்க பாதைகள்
- **Ho chi minh city Sightseeing**
- Ho Chi Minh Mausoleum/ ஹோ சி மின் மொசோலியம்
- Ho chi minh Presidential palace/ ஹோ சி மின் ப்ரெசிடென்சியல் பலஸ்.
- **Hanoi Sightseeing**/ ஹனோய்
- Ha long Bay/ ஹா லோங் பே - **Day & Night Cruise with meals on board.**

**Cambodia / கம்போடியா:**

- **Angkor Wat** / அங்கோர் வற்.
- Bayon Temple / பயன் கோவில்
- Apsara Dance- Cambodian Cultural Dance Show.
- Floating Village - மிதக்கும் மீன்பிடி கிராமம்.

**Thailand / தாய்லாந்து:**

- **Bangkok Sightseeing**/ பாங்கொக்
- The Grand Palace/ தி கிராண்ட் பலஸ்
- Floating Market/ மிதக்கும் சந்தை
- Indra Square, Market/ இந்திரா மார்க்கெட்
- Wat Pho/ வற் போ
- **Pattaya Beach** / பட்டாயா கடற்கரை
- Wat Traimit/ வற் ட்ரைமிட்
- Siam Niramit/ சியாம் நிரமிட்.
- Nong Nooch Garden - World Famous Artificial Animals Garden.

### திருக்கைலாய யாத்திரை!!

பயணத் திகதி **22.05.2018** முதல் **08.06.2018** வரையயானா **18** நாள் யாத்திரை.

**வாழும் போதே திருக்கைலாயம் சென்று வர...... மானசொரூபர் ஏரியில் புனித நீராடி வர ஓர் அரிய வாய்ப்பு.**

பயணிக்கும் இடங்கள்

- **திருக்கைலாய மலை**



- பசுபதிநாத் ஆலயம்



- புத்தனாத் ஆலயம்
- அன்னபூர்ணா ஆலயம்
- **மற்றும் பல பிரசித்தி பெற்ற ஆலயங்கள்.**

**தொடர்புகளுக்கு: மதுரா: 07957597024**
**ஜெகன்: 07342150501**
**email: Sainicatravels@gmail.com / info@sainicatravels.com**
**www.sainicatravels.com**
**Facebook.com/SainicaTravels**

# தாயகம் சென்று மீண்ட உணர்வு
# கனடா கலைப் பயண அனுபவங்கள்

கனடா நாட்டிற்குப் பல தடவைகள் சென்றிருந்தும் இந்த வருடம் எனது பயணம் மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது. இது கனடாவுக்கு எட்டாவது பயணம். நான்கு தடவைகள் எமது நாடகக் குழுவினருடன் சென்று அங்கு நாடகங்களை மேடையேற்றினேன். இந்தத் தடவை நாடக மேடையேற்றங்கள் இல்லாவிட்டாலும், கனடாவின் 150 ஆண்டு நிகழ்வுகள், நாடக கலைஞர்களுடன் உரையாடல்கள், வானொலி, தொலைக்காட்சி பேட்டிகள், கலந்துரையாடல்கள், நாடகப் பயிற்சிப் பட்டறைகள், நூல் அறிமுக நிகழ்வு, கோடை ஒன்றுகூடல்கள் என்று கழிந்தபொழுதுகள் இனிமையானவை. ஒவ்வொரு முறையும் அங்கு செல்லும்போது தாயகம் சென்று மீண்ட உணர்வே உள்ளது.

பிரித்தானியாவில் பல தசாப்தங்களாக வாழும் முதல் தலைமுறைத் தமிழர் தம்மை பிரித்தானியர்களாக நினைப்பது குறைவு. கனடாவில் அப்படியல்ல. எம்மவர்கள் எல்லோருமே தம்மை கனடியர்கள் என்று நினைத்து தமக்கு வாழ்வு கொடுத்த நாட்டிற்கு நன்றியாக உள்ளதை அவதானித்தேன். குறிப்பாக கனடிய நாட்டின் 150 ஆண்டு நிறைவு நிகழ்வுகளை இதயபூர்வமாக எம்மவர் கொண்டாடியதை அவதானிக்க முடிந்தது. தமிழர் நிகழ்வுகளில் கனடிய தேசிய கீதம் முதலில் ஒலிக்கிறது.

நான் யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவன். ரொரன்ரோ பார்க்கில் யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர்கள் நடத்திய கோடை ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்து உரையாற்றினேன். அங்கும் கூட நிகழ்வின் ஆரம்பத்தில் கல்லூரி கீதத்துக்கு முதல் கனடிய தேசிய கீதம் ஒலிக்கப்பட்டது. இதுஒரு நல்ல நிகழ்வாக, எனது கல்லூரி பழைய மாணவர்கள் பலரையும் கண்டு அளவளாவ முடிந்தது. எமது கல்லூரி பழைய மாணவர்கள் பலர் அங்கு நல்ல நிலையில் உள்ளார்கள். தொழிலதிபர்களாகவும் வளர்ந்திருக்கிறார்கள் என்பதைக் காண முடிந்தது.

மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் என்னுடைய நாடகங்களில் பங்குகொண்டவர்களும், யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர்களும் இணைந்து என்னுடன் ஒரு கலந்துரையாடல் நிகழ்வினை ஸ்காபரோ மல்வேண் பமிலி ரிசோஸ் சென்ரரில் ஒழுங்கு செய்திருந்தார்கள். புலம்பெயர் சூழலில் அவர்கள் ஆற்றும் சேவைகள், கலை நிகழ்வுகள் குறித்த கனதியான கலந்துரையாடலாக அது அமைந்திருந்தது. இந்த சந்திப்பினை திரு. பிரேமச்சந்திரா ஒழுங்கு செய்திருந்தார். பல கலை இலக்கிய ஆர்வலர்களும் அவர்களுள் இருந்தனர்.

கனடாவில் இருந்து வெளிவரும் 'காலம்' என்ற காலாண்டு சஞ்சிகை சார்பில் எமது 'யுகதர்மம்' நாடகமும் பதிவுகளும் என்ற நூல் அறிமுகப்படுத்தப்பட்டது. 'வாழும் தமிழ்' புத்தகக் கண்காட்சியும் இடம் பெற்றது.



ஸ்காபரோ ரிக்கிறியேசன் சென்ரரில் நடந்த நிகழ்வில் கனடாவில்வாழும் பல நாடகர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் கலந்து சிறப்பித்தனர். விமர்சகர் ப. ஸ்ரீஸ்கந்தன் தலைமையில்நடைபெற்ற நிகழ்வில் என். கே. மகாலிங்கம், பி. விக்னேஸ்வரன், பா. ஜயகரன், கவிஞர் சேரன், 'காலம்' செல்வம் மற்றும் 'யுகதர்மம்' நாடகத்தில் பங்குகொண்ட லெ. ரவிச்சந்திரா, சி. சண்முகானந்தா, மானசி பாலேந்திரா ஆகியோர் உரையாற்றினர். நானும் எனது மனைவி ஆனந்தராணியும் எமது நாடக அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டோம். 'யுகதர்மம்' நாடகப் பாடல்களுடன் கனடாவில் வசிக்கும் ஈழத்துக் கவிஞரும் பாடகருமான ஆனந்தப்பிரசாத்தின் பாடலும் நிகழ்ச்சியில் இடம் பெற்றது. அங்கு வெளியாகும் தாய்வீடு, ஈழநாடு, விளம்பரம் ஆகிய பத்திரிகைகள் அரைப்பக்கத்திற்கு இந்த நிகழ்வு குறித்த அறிவிப்புகளைத் தாங்கி எம்மை ஆதரித்தமை தாயகத்திற்குப்போகும் உணர்வைக் கொடுத்தது.லண்டனை விட ஏராளமான ஊடகங்கள் ரொரன்ரோவில் பணியாற்றுவது மிக்க மகிழ்வாக இருந்தது. நிகழ்வின் பதிவினை 'தாய்வீடு'பத்திரிகையில் ஒரு முழுப் பக்கத்தில் ஈழத்து நாடகர் சோக்கல்லோ சண்முகநாதன் எழுதியிருந்தார்.

ஒன்ராறியோ தமிழ் பெற்றோர் சங்கம் நடத்திய கோடை விடுமுறை தமிழ் பண்பாட்டியல் வகுப்பில் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் சிறுவர்கள்இருந்தார்கள். அவர்களில் 8-14 வயதுள்ள சுமார் 35 சிறுவர்களுக்கு நானும் மனைவி ஆனந்தராணியும் ஒரு நாடகப் பட்டறையை இரண்டு நாட்கள் நடத்தினோம். சிறுவர்கள் மிக உற்சாகமாக கலந்து கொண்டனர். அங்கு எமது 'யுகதர்மம்' நாடகத்தில் 1980இல் பாடல் இசைத்த திருமதி.ஜஸ்மின் இசை பயிற்றுனராக, எமது நாடகப் பட்டறையிலும் கலந்து சிறப்பித்தமை ஒரு இனிமையான ஆச்சரியம்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் முற்றுப் பெற்றவுடன், ஸ்காபரோ பல்கலைக்கழகத்தில் தமிழ் பயிலும் மாணவர்களுடன் 'நாடகம்' குறித்த எமது உரை இடம்பெற்றது. எமது நாடகத் தெரிவுகளைக்கூறி நாடகங்களின் தற்காலத்தன்மை குறித்து விளங்கவைக்க எமது 'மரணத்துள் வாழ்வு'நாடகத்தின் சில பகுதிகளை நானும் ஆனந்தராணியும் நடித்துக் காட்டியபோது மாணவர்கள் மிகவும் ரசித்துப் பார்த்தார்கள். இந்த சந்திப்பை அங்கு தமிழ் பயிற்றுவிக்கும் நாடகாசிரியர் திரு. பொன்னையா விவேகானந்தன் ஒழுங்கு செய்திருந்தார்.

TET

வானொலி, தொலைக்காட்சி ஊடகங்கள் பலவும் எம்மை அழைத்து நேர்காணல்களை செய்தன. அங்கு பிரபலமாக விளங்கும் TVI - ரிவிஐ தொலைக்காட்சியில் இளைஞர் ராம் பிரசான் மிக நேர்த்தியான, குறிப்பாக இலங்கை அனுபவங்களை அடக்கிய ஒரு நேர்காணலை ஒளிபரப்பினார். அதனது ஒலி வடிவம் அவர்களது சகோதர 24 மணிநேர வானொலியான சிஎம்ஆர் வானொலியில் ஒலிபரப்பானது. என்னுடன் கொழும்பில் எழுபதுகளில் நடிகர் ஒன்றியத்தில் நடித்த நாடகர், பாடகர் திரு. திவ்யராஜன் TET தொலைக்காட்சிக்காக ஒரு நேர்காணலை பதிவுசெய்தார். நாடகம் குறித்த ஆழமான உரையாடலாக இது அமைந்தது.

'கீதவாணி' என்ற 24 மணிநேர கனடிய வானொலியில், நாடக நடிகர் திரு.கணபதி ரவீந்திரன் மிக உற்சாகமாக எமது நேர்காணலை நேரலையில் ஒலிபரப்பியதோடு, தனது முகநூல் மூலம் உலகெங்கும் வாழும் நேயர்களுக்காக ஒளிபரப்பியமை எமக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்தது. தொழில்நுட்பம் மிக சிறப்பாகக் கையாளப்படுகிறது.

கொழும்பில் வசிக்கும் மூத்த ஒலிபரப்பாளர் நண்பர் திரு. மயில்வாகனம் சர்வானந்தா அவர்களின் மகள் கனடாவில் ஒலிபரப்புத் துறையில் சிறந்து விளங்குவது எமக்கு மகிழ்ச்சி தந்தது. இளைய தலைமுறைத் தமிழ் ஒலிபரப்பாளரான அவர் 'வண்ணத்தமிழ்' என்ற 24 மணி நேர வானொலியில் கனடாவில் நிகழ்ந்த எமது நூல் அறிமுக நிகழ்வு குறித்தும், 'யுகதர்மம்' நாடகம் குறித்தும் நேரலையில் உரையாடினார்.

உலகெங்கும் பரந்து வாழும் எமது நாடகக் குடும்பத்தினர் பலரையும் பல வருடங்களுக்குப் பிறகு, சிலரை சுமார் 35 ஆண்டுகளுக்குப்; பின்னர் சந்தித்து மீள இணைந்து உறவாடியமை மிகவும் இனிமையான அனுபவம். அவர்களில் பலர் எம்மை நாடக உறவு காரணமாக பல இடங்களுக்கு அழைத்துச் சென்று காட்டிய பொழுதுகள், நாடகம், இலக்கியம், புகலிட வாழ்க்கை பற்றிய உரையாடல்கள் என்னை இளைஞனாக்கியது போல உணர வைத்தது. எனது உற்ற நண்பர்கள் நா. சாந்திநாதன், ப. ஸ்ரீஸ்கந்தன் இருவரும் பல நிகழ்வுகளையும் எமக்காக ஒருங்கிணைத்திருந்தார்கள். பல புதிய உறவுகளும் ஏற்படக் காரணமான இந்தக் கனடிய பயணம் எமது நாடக வாழ்வில் மறக்க முடியாதது.


























டாக்டர் ஸ்ரீதரன்

# விதைத்ததும் குப்பை விளைந்ததும்



"மனமென்னும் நாடு அடங்கில் தாண்டவக் கோனே- முத்தி வாய்த்ததென்று எண்ணேடா தாண்டவக்கோனே" பாடியவர் நவசித்தருள் ஒருவரால் ஞான உபதேசம் பெற்று சகல சித்திகளையும் இப்பிறவிலேயே பெற்று அதை மக்களின் நலனுக்காக முற்று முழுதாகப் பிரயோகித்த இடைக்காட்டுச் சித்தர்.

அது எப்படி- கோவிலுக்குப் போகாமல்- தட்சணை கொடுக்காமல் அர்ச்சனை பண்ணாமல் அபிசேகம் செய்யாமல் பிரசாதம் பெற்றுக் கொள்ளாமல் மனத்தை மட்டும் அடக்கி முத்தி பெற முடியும்?

பல பல பரிமாணங்களில் பரிணாமித்து நிற்கும் சர்ச்சைக்குரிய மனித மனத்தின் ஒரே ஒரு பரிமாணத்தை மட்டும் கடுகளவேயாகிய ஒரு பரிமாணத்தை மட்டும் காட்ட முயற்சிக்கிறது இந்தக் கட்டுரை. இந்தப் பரிமாணத்தைக் காட்டுவதற்கு எனக்கு இருக்கும் தகுதி- நானும் ஒரு மனிதர் என்பது மட்டுமே. அது போதுமே இதற்கு.

உயிர் - மனம் - உடல் - இவற்றின் சங்கமம் புவியில் வாழும் ஜீவராசிகள் மனிதர்கள் உட்பட இங்கிருக்கும் நம்மை இயக்கும் இந்த உயிரும் - அண்ட சராசரங்களை இயக்கி அணுவுக்குள் அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய் விளங்கும் அங்கிருக்கும் அந்த உயிரும் வேறல்ல என்பதை நமக்கு எடுத்துரைக்கத் தான் இங்கு யோகிகள் தோன்றினார்கள். மகாமுனிவர்கள் வாழ்ந்தார்கள். அவதாரங்கள் அவதரித்தார்கள். அந்தப் பூரணத்திலிருந்து தான் இந்தப் பூரணம் தோன்றியது அந்தப் பூரணத்திலிருந்து தோன்றிய இந்தப் பூரணமும் ஒரு பூரணமே - என்பதை அறிந்து - உணர்ந்து - அனுபவித்து - துன்பங்களிலிருந்து விடுபட்டு - நித்திய ஆனந்தத்தில் நிலை கொள்வதே மனித ஜனனத்தின் அத்திவாரம் என்று கூறாத வேதங்களில்லை - சொல்லாத சாத்திரங்களில்லை - விளக்காத புராணங்களில்லை. இதற்காகத் தான் இங்கு பரிணாமம் நடந்தது. இதற்காகத் தான் மனிதன் பரிணாமத்தின் கடைசி வார்ப்பாக வார்க்கப்பட்டான்.

இந்த உண்மையை இப்பிறப்பிலேயே உணராமல் இறக்கும் மனிதன் மீண்டும் பிறப்பான். இதை உணரும் வரையில் ஜனனம்-மரணம்-ஜனனம் என்னும் ஸம்ஸார ஸாகரம் அவனது தலைவிதி.

ஜனனத்திற்கும் மரணத்திற்கும் அப்பாற்பட்ட பூரணம் ஆதியும் அந்தமும் அற்ற பூரணம் - காலத்திற்கும் - நேரத்திற்கும் கட்டுப்படாத பூரணம் - நமக்குள்ளேயே இருக்கிறது என்பதை மனிதர்கள் உணர விடாது தடுப்பது மனித மனம்.

ஐம்புலன்களின் தொழிற்பாட்டால் உருவாகிய மனித மனம் தான். பார்ப்பதற்கு நிறம் கொடுக்கிறது - கேட்பதற்கு அர்த்தம் கற்பிக்கிறது. உண்பதற்கு சுவை கொடுக்கிறது. காற்றிற்கு மணம் கொடுக்கிறது. உரசுவதற்கு வடிவம் கொடுக்கிறது. இருப்பதை இல்லாதது போலவும். இல்லாததை இருப்பது போலவும் ஜாலம் காட்டுவது மனித மனம். தன்னைத் தானே தனக்குள் இருப்பதை வெளியே பிரதிபலித்து. அவையெல்லாம் வெளியிலேயே இருப்பது போல நம்பச் செய்வது மனித மனம். நாம் பார்க்கும் உலகம் நமது மனத்தின் பிரதிபலிப்பு.

"மருண்டவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பேய்" என்பது மட்டும் தான் உண்மை என்பதல்ல. இங்கு மனிதர்கள் எல்லோருமே மருண்டவர்கள் என்பதும் உண்மை தான்.

இதனால் தான் மனத்தை 'மாயப் பிசாசு' என்றார்கள் யோகிகள். இதனால் தான் - "மனத்தை அடக்க வழி ஒன்றும் அறிகிலேன்" என்று காலம் காலமாக ஓலமிட்டார்கள் சம்சார ஸாகரத்திலிருந்து விடுபட விரும்பியவர்கள். இதனால் தான் "யோகம் வேண்டில் சித்தத்தின் விருத்திகளை அடக்கு" என்று சொன்னார் பதஞ்சலி.

அன்றாடம் நாம் உண்ணும் உணவு நமது உடலை வளர்க்கிறது உணவு சீராக இல்லாத போது உடல் வளர்ச்சி சரியாக அமைவதில்லை. இது நமடக்குத் தெரியும். நாம் உண்ணும் உணவைப் பொறுத்துத் தான் நமது உடலமைப்பு உருவாகிறது உணவு குறைபாடாக இருக்கும் போது சரியான உடலமைப்பு உருவாகுவதில்லை. இது நமக்குத் தெரியும். நமது உணவின் தராதரத்தைப் பொறுத்துத் தான் உடலின் ஆரோக்கியம் நிர்ணயிக்கப்படுகிறது. உணவு தரக்குறைவாக இருக்கும் போது உடலில் கோளாறுகள் தோன்றுகின்றன. இதுவும் நமக்குத் தெரியும்.

இது போலவே - இப்படியே - அன்றாடம் நாம் கண்ணால் பார்ப்பவையும் காதால் கேட்பவையும் தான் பிரதானமாக - மிகப் பிரதானமாக - மனித மனத்தை வளர்க்கின்றன. இவை தான் நமது மனதிற்கு உணவு. உள்ளே போகும் விடயங்களைப் பொறுத்துத்தான் மனிதனின் மன அமைப்பு உருவாகிறது. உள்ளே செல்லும் விடயங்களின் தராதரம் தான் மனித மனத்தின் ஆரோக்கியத்தை நிர்ணயிக்கின்றன.

இன்று நாம் காணும் கந்தையாக்களும் கந்தசாமிகளும் நேற்று அவர்கள் பார்த்ததன் - பார்க்க நேர்ந்ததன் - கேட்டதன் - கேட்க நேர்ந்ததன் விளைவுகள் நாளை நாம் பார்க்க இருக்கும் கந்தையாக்களும் கந்தசாமிகளும் அவர்கள் இன்று பார்க்கும் - கேட்கும் - விடயங்களின் மொத்த விளைவுகள்.

இன்று இங்கு நாம் பெரும்பாலும் எதைப் பார்க்கிறோம் அன்றாடம்? எதைக் கேட்கிறோம் அன்றாடம்? பத்திரிகை படிக்கிறோம். தொலைக்காட்சி பார்க்கிறோம். கேட்கிறோம் சினிமா பார்க்கிறோம். வானொலி கேட்கிறோம்.

ஒரு சிறு கதை. ஒரு மாமனிதர் பத்திரிகை விற்கும் கடைக்கு மாதமொரு தடவை சென்று படிப்பதற்காக விற்காத பழைய பத்திரிகைகள் ஏதாவது இருக்கிறதா என்று கேட்டு வாங்கிச் செல்வார். இதை நீண்ட காலமாக அவதானித்த கடைக்காரன்- "எதற்காக பழைய பத்திரிகைகளை படிக்கிறீர்கள்?" என்று கேட்டான். அதற்கு மாமனிதர் பதிலளித்தார். "திகதிகளும் பெயர்களும் தான் பத்திரிகைகளில் நாளுக்கு நாள் மாறுகிறதே தவிர எழுதப்படும் குப்பைகள் என்றுமே ஒரே மாதிரியாகத் தானே இருக்கின்றன. இதில் பழையது எது? புதியது எது?"

ஊரில் உலகத்தில் நடப்பதை அறிகிறோம் அறிவை வளர்க்கிறோம் என்ற பெயரில் மிகவும் பெருமையாக பத்திரிகை வாங்கிப் படிக்கிறோம். எதை அறிந்தோம்? அறிந்து என்ன கண்டோம்? எது வளர்ந்தது? வளர்த்து என்ன கண்டோம்? ஒன்றே ஒன்று மட்டும் நிச்சயமாகக் கிடைத்தது. பேய் போன்ற ஒரு மனது.

பாடு பட்டு பணம் சம்பாதித்து - சம்பாதித்தது போதாது என்று கடன் வேறு பட்டு - 32 அங்குல தொலைக்காட்சிச் சாதனத்தை வீட்டிற்கு வாங்கி வந்து - அதற்கு மேல் அழகாக கொலு வைக்கிறோம் அந்த குரங்குப் பொம்மையை. 'தீயவற்றைப் பார்க்காதே. தீயவற்றைக் கேட்காதே. தீயவற்றைப் பேசாதே' என்பதை சைகையால் உணர்த்தும் அந்தப் பொம்மை. எவ்வளவு பொருத்தமான இடம்.

இரவு ஏழு மணி தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் களை கட்டுகின்றன. கலைத் தெய்வம் கலா வித்தகி நடிகை ஜிந்தாமணியுடன் ஒரு சிறப்புப் பேட்டி. அது என்ன இழவோ தெரியவில்லை. பேட்டி கொடுக்கும் நடிகைகளுக்கெல்லாம் ஒருவர் தவறாது தலை முடி அடிக்கொரு தடவை முகத்தில் விழுகிறது. அவர்களும் மோதிரம் அணிந்த விரல்களால் அலங்காரங்கள் செய்த விரல்களால் லாவகமாக அதைப் பின் தள்ளிவிடுகிறார்கள் மீண்டும் விழும்படியாக.

"எப்படி உங்களுக்கு நடிப்புத் துறையில் ஈடுபாடு ஏற்பட்டது?" சிறப்புப் பேட்டியில் கேட்கப்படும் முதல் கேள்வி. அவளது தொழிலே நடிப்பு- உண்மையான காரணத்தையா கூறப் போகிறாள்? தனக்கு ஐந்து வயதாக இருக்கும் போது கலைமகள் தனது கனவில் வந்து தன்னை நடிக்கும் படி ஆணையிட்டதாகவும் அந்தப் புனிதத் தொண்டுக்காக இன்று தன்னை அர்ப்பணித்து விட்டதாகவும் பதில் வரும். மெய் சிலிர்க்கிறது நமக்கு!


பொது அறிவுப் போட்டி தொடங்குகிறது - கணைகள் தொடுக்கப்படுகின்றன. பிரித்தானிய மகாராணி வளர்க்கும் நாய்க்குட்டியின் வாலின் நீளமென்ன? கடந்த வருடம் சிறந்த நடிகையாகத் தெரிவு செய்யப்பட்ட நடிகையின் வீட்டில் எத்தனை தென்னை மரங்கள் இருக்கின்றன? தமிழக முதலமைச்சரின் தலைமுடி எந்த ஆண்டில் நரைக்கத் தொடங்கியது? இந்தக் கேள்விகளுக்குப் பதிலளித்து சிறந்த அறிவாளி என்ற பரிசு வாங்குபவரின் அறிவுத் திறமையை மெச்சி- இது போல நாமும் அறிவாளியாக வேண்டும் என்ற விடாமுயற்சியில் கண்டதையும் கற்கிறோம் - பண்டிதனாவதற்காக. எவ்வளவு ஆரோக்கியமாக வளர்கிறது நமது மனது!

இந்த வருடத்தின் அதி சிறந்த படம்.

- தொடர்ச்சி 30ம் பக்கத்தில்



திருக்குறள் செம்மல் ந.மணிமொழியன்



# தீரா இடும்பை தரும் - எது?

**"சத்தியத்தைக் கூறச் சக்தி பெறுவதே சமத்துவத்தின் சாரம்"**

வாழ்க்கையில் நாம் பல காரியங்களை ஆராய்ந்து தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது. ஒரு ஆண் தன் மனைவியைத் தேர்ந்தெடுப்பதாயினும், ஒரு பெண் தனது கணவனைத் தேர்ந்தெடுப்பதாயினும் ஆய்ந்து பார்க்க வேண்டும்.

தொழிலில் பணியாட்களைத் தேர்ந்தெடுப்பதிலும், இயக்குநர்களை, நிர்வாகிகளைத் துணையாளர்களை, பாதுகாப்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதிலும், அரசு தன் அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதிலும், அரசை மக்கள் தேர்ந்தெடுப்பதிலும் இன்னபிறவற்றிலும் நாம் ஆராய்ந்து தேர்ந்து எடுக்க வேண்டும்.

தகுதியும் பொருத்தமும் இல்லாதவரை- அன்பு காரணமாக, உறவு காரணமாக, நட்புக் காரணமாக முகத் தாட்சண்யம் கருதித் தேர்ந்து எடுத்து விட்டால் வாழ்நாள் முழுதும் துயரம் அடைய நேரிடும்.

குடும்ப வாழ்க்கை தொட்டு, தொழில் வாழ்க்கை, சமுதாய வாழ்க்கை, நாட்டு வாழ்வு வரை, தகுதியான, பொறுப்பு மிகுந்தவர்களைத் தேர்ந்தெடுக்காவிட்டால் நாம் செய்யும் செயல்கள் எல்லாம் பயனற்றுப் போகும். உயர்ந்தவர், தாழ்ந்தவர், பெரியவர்- சிறியவர் பெருமை- சிறுமை என்ற குணங்கள் எல்லாம் பணத்தாலோ, பட்டத்தாலோ- பிறந்த குலத்தாலோ உருவாவதில்லை. பத்தரை மாற்றுத் தங்கமா என்று கண்டறியக் கல்லில் தங்கத்தை உரைத்துப் பார்த்துப்பொன்னின் மாற்றுக் காண்பது போல், ஒருவன் எண்ணும் எண்ணமும், சொல்லும் சொற்களும், அவன் உயர்ந்தவனா? தாழ்ந்தவனா? சிறியவனா? பெரியவனா? என்ற உண்மைகளை உரைகல்லாகக் காட்டிவிடும். செய்கின்ற செயலின் திறத்தால் 'தத்தம் கருமமே கட்டளைக்கல்' என்ற அடிப்படையில் அவரவர் தகுதியை அறியலாம்.

ஆதலால் ஒருவரை எத்துறைக்குத் தேர்ந்தெடுத்தாலும் அவரைப் பற்றி நன்றாக ஆராய்ந்து, எண்ணிப் பார்த்து தெளிவான முடிவுக்கு வர வேண்டும். பதற்றமில்லாமல், பரபரப்பு இல்லாமல், அன்பு, உறவு, நட்புப் பாராமல் பொறுப்புக்குத் தகுதியானவரா? திறமையானவரா? நற்குணங்கள் நிறைந்தவரா? பழிக்கு அஞ்சுபவரா? நேர்மையானவரா? என்று அவரை அளந்தறிய முற்பட வேண்டும்.

தீயநோக்கமுள்ளவர்கள், நல்லெண்ணம் இல்லாதவர்கள், சுயநலம் மிக்கவர்கள், குறுகிய கண்ணோட்டம் உள்ளவர்கள் சமுதாயத்தில் கொந்தளிப்பை ஏற்படுத்தும் கயவர்கள் ஆகியோர் பேச்சுக்களை எல்லாம் மக்கள் கேட்டு மயங்கிவிடக் கூடாது.

சொல் நயத்துடன், ஆற்றலுடன் நாவன்மையால் பேசும் நச்சுக் கருத்துக்கள் தீமையை விளைவித்துவிடலாம். வாழ்வாகிய வழுக்கு நிலத்தில் வழுக்கி விடாமல் சேற்று நிலத்தில் சிக்கிவிடாமல் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். இவ்வழுக்கல் நிலத்தில், சேற்றுப் பாதையில் சிக்கல் நீக்கிக் காப்பது வாழ்ந்து காட்டிய ஒழுக்கமுள்ள அறிஞர்களின் வாய்ச்சொற்கள் தாம். வாழ்ந்து காட்டாத நாநயம் மிகுந்தவர்கள் சொற்கள் ஒரு போதும் பயன் விளைவிப்பதில்லை.

தூய எண்ணங்களை எண்ணி,
எண்ணம் போலவே
சொல் தூய்மையுடையராய்,
செயல் தூய்மையுடையராய்
உள்ள வாய்மை மிகுந்த நல்லவரின் நயம் மிகுந்த சொற்களே நாட்டினரை நல்வழியில் அழைத்துச் செல்லும். நல்லவை நாடி இனிய சொல்பவரை நாம் நாடிச் சென்று கேட்க வேண்டும். எவ்வளவுக்கு இத்தகைய பெரியோர்களின், சான்றோர்களின் பேச்சுக்களை விரும்பிக் கேட்கின்றோமோ, அவ்வளவிற்கு அல்லவை தேயும், அறம் பெருகும்; தனி மனிதனும் நாட்டு மக்களும் பயன் பெறுவர். இத்தகைய நல்லோரின் நயம்மிகுந்த, நலம் மிகுந்த, அறிவோடு உறுதியும் மிக்க கருத்துக்களைக் கேட்டுப் பயன்பெற வேண்டும். இதனையே செந்நாப்புலவர் வள்ளுவனார், "கற்றிலனாயினும் கேட்க!" என்று கட்டளையிட்டு, கேட்பவையெல்லாம் நல்லவையாக இருக்க வேண்டும் என்றும், வலியுறுத்திக் கேட்ட அளவிற்குப் பெரும்பயன் தனி மனிதனுக்கும், சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் உண்டாகும் என்றும் உறுதிபடக் கூறுகிறார். அக்குறளைக் கேட்போம்.

**"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்."**

**எனைத்தானும் நல்லவை கேட்க!**

நாவிற்கு சுவை உணர்வு இருப்பது போலச் செவிக்கும் சுவை உணர்வு உண்டு. நல்ல உணவு உடலை வாழவைப்பது போல, நாம் பெறும் நல்லறிவும் நம் உள்ளத்தை வாழ வைக்கும். நல்லுணவு நாவிற்கு இனிமை தருவது போல், நற்கருத்துக்கள் செவிக்கு இனிமை தரும். அதனால்தான் பாரதி, 'செந்தமிழ் நாடெனும் போதினிலே, இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே' என்றார். தேனை நாவால் சுவைக்கும்போது என்ன இன்பம் கிடைக்குமோ அத்தகு இன்பம் செந்தமிழ்நாடு என்று சொல்லும் போது காதில் தேனாகப் பாய்ந்து இனிக்கிறது என்கின்றார் புரட்சிக்கவிஞர் பாரதி.

கேடில்லாத, அழியாத விழுச் செல்வம் கல்வியென்றால் நல்லவையாக அமைந்த கேள்விச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலைமையானது. ஒரு துறையில் கற்றவர்களுக்கும்- பல துறைகளில் அறிவு வழங்குவது கேள்விச் செல்வமாகும். கற்றவன் நுட்பமாக, இனிமையாக, கேட்பவரைப் பிணிக்கும் வகையில் நல்ல செய்திகளை ஆற்றலுடன் கூறும் போது, கல்வி கல்லாதவனும் கற்றதன் பயனைப் பெறுகின்றான். அறிஞர்கள் மிகச் சிறந்த கருத்துக்களை எடுத்துச் சொல்லும் போதும் அவற்றை விரித்துச் சொல்லும் போதும் தொகுத்துச் சொல்லும் போதும் கற்றறியா எளிய மக்களும் பயன் பெறுகின்றார்கள். பலகாலம் செலவழித்துப் பல நூல்களைப் படித்தவர்கள் நல்ல கருத்துக்களை, நயமுடன், எளிமையுடன் கூறும்போது அவற்றைக் கேட்டவர்கள் சில மணித்துளிகளிலே மிகப் பெரும் பயனைப் பெற்று விடுகிறார்கள்.

வேள்வியால் கிடைப்பது விண்ணில் வாழும்
அமரர் விரும்பும் அமரத் தன்மை
தரும் அவியுணவு.

கேள்வியால் கிடைப்பது மண்ணிலே வாழ்வோர் விரும்பும் இறவாச் சிறப்புடைய அமுத வாழ்வு.

வாழ்வு சிக்கல்கள் நிறைந்தது; உணர்ச்சி நிறைந்தது. ஆதலால் கேட்பதெல்லாம் கேள்வியாகிவிடாது. மனம் உணர்ச்சிவயப்படும் சமயத்தில் எல்லாம், தடுமாறுகின்ற நேரத்தில் எல்லாம், நல்லோர் சொன்ன கருத்துக்கள் தாம் நற்பயனை, நன்மைகளை அளிக்கும்.

அறம் செய விரும்பி, வாழ்வின் ஒரு பகுதியை மட்டும் அறம் செய்ய வேண்டும் என்று ஒதுக்காமல் வாழ்வு முழுவதுமே அறவாழ்வாகத் திகழ முற்பட வேண்டும். தனிமனித வாழ்வும், குடும்ப வாழ்வும் அறவாழ்வினை மேற்கொண்டு நடக்கும் போது நாடும் உலகமும் நலம் பல பெற்றுத் திகழும். வாழ்க்கைக்கு இவ்வறம் சிறப்பைத் தரும்; செல்வத்தைத் தரும். நிலையாத வாழ்க்கையில் நிலைத்த புகழைத் தரும். இவ்வாறு நிரந்தரமாக நிலை பெற்றுப் புகழ் பெற்று, வாழும் உயிர்கள் ஆக்கம் பெறும்.

உலகின் அற நியதிகளும் நியாயங்களும் மீறப்பட்டால் நிச்சயமாகத் தீய விளைவுகள் உருவாகிவிடும். நாம் விதைக்கும் விதைகளுக்கேற்பவே பின்னர் விளைவுப் பயனைப் பெற முடியும். நாம் செய்யும் நல்ல அறச் செயல்களே நல்ல பயன் தரும். தக்க விளைவுகளைத் தர முடியும்.

அறச் செயல்களைச் செய்யும் வகையால் எக்காரணம் கொண்டும் அவற்றை இடையே விட்டு விடாமல் இயன்ற வகையில் எல்லாம் தொடர்ந்து அந்த அறச் செயல்களைப் போற்றிச் செய்ய வேண்டும்.



நாளை நாளை என்று நாட்களைத் தள்ளிப் போட்டுத் தட்டிக் கழித்துவிடாமல், நிலையாத வாழ்க்கையில் நிலைத்த புகழோடு வாழத் தலைப்பட வேண்டும். இளமைக்காலத்தே மன நலம் மிகுந்தவராய் வளர வேண்டும். குறிப்பாக, இளைஞர்கள் நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்று சோம்பல் கொள்ளாமல் நற்செயல்களில் தீவிரமாக நாட்டமுற வேண்டும். அயராது அறப்பணிகள் செய்ய வேண்டும். அதுவே உடல் நலியும் காலத்தும் அழியாப் புகழ் தந்து துணை நிற்கும். உடல் அழிந்த காலத்தும் அழியாப் புகழ் தரும்.

ஆகவே தான் வள்ளுவர் கட்டளையிடுகின்றார்- என்ன கட்டளை, கேட்போம்.

**"அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது**

**பொன்றுங்கால் பொன்றாத் துணை".**



ஏ.ஜே.ஞானேந்திரன்



# பணத்தில் புரளும் அமெரிக்க கோடீஸ்வரர்கள்

உலக பணக்காரர்கள் பட்டியலை காலத்துக்கு காலம் வெளியிடும் *Forbes* சஞ்சிகை, 2017க்கான முதல் ஐந்து கொழுத்த பணக்காரர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

உலகப் புகழ் பெற்ற மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் ஸ்தாபகர் பில் கேட்ஸ், அமெரிக்காவின் கொழுத்த பணக்காரர் மட்டுமல்ல, உலகிலேயே முதலிடத்தில் நிற்கும் பணக்காரர் இவரென, இச் சஞ்சிகை கணித்துள்ளது. இவரது சொத்து மதிப்பை 81 பில்லியன் டாலர் என்று மதிப்பிட்டுள்ளர்கள்.

இரண்டாவது இடத்தைப் பிடிக்கும் அமெரிக்கரின் பெயர் *Jeff Bezos* . உலகின் மிகப் பெரிய இணைய விற்பனை நிறுவனமான அமேசனின் சொந்தக்காரர் இவர்தான் . வாஷிங்டன் போஸ்ட் என்ற தினசரியின் உரிமையாளராகவும் இவர் இருக்கிறார் . இவருடைய சொத்து மதிப்பு 67பில்லியன் டொலர்களாக கணக்கிடப்பட்டுள்ளது .

மூன்றவதாக வருபவர் *Warren Buffet* என்ற அமெரிக்கராவார் . இவர் ஒரு வர்த்தகப் பிரமுகர் . பல்நாட்டு நிறுவனமான *Berkshire Hathaway* யின் மிக அதிகமான பங்குகளை இவர் வைத்துள்ளார். உலக பணக்காரர்கள் வரிசையில் இவரையும் வைத்துள்ளார்கள். இவர் சொத்து மதிப்பு 65.5பில்லியன் டொலர்.

நமக்கு நன்கு பரிச்சயமான முகநூல் முதலாளி *Mark Zuckerberger*தான் நான்காவதாக வருகிறார் . ஹவார்ட் பல்கலைக்கழகப் பட்டதாரியான இவர் , தனது நான்கு கல்லூரி நண்பர்களுடன் ஆரம்பித்ததுதான் இந்த முகநூல் .உலகின் மிகச் செல்வாக்கானவர்களுள் ஒருவராகத் திகழும் இவர் சொத்து மதிப்பு 55.5 பில்லியன் டொலர்கள் .

இந்த சஞ்சிகை *Larry Ellison* என்ற அமெரிக்கரை , ஐந்தாவது இடத்தில் நிறுத்தி உள்ளது .49.3 பில்லியன் டொலரை இவரது சொத்து மதிப்பாக கணிப்பிடும் இந்தச் சஞ்சிகை , இரண்டு ஜெட் விமானங்களை சொந்தமாக வைத்திருக்கும் இவர் , அதன் விமான ஓட்டியாகவும் திகழ்கிறார் .

தாராள மனம் கொண்ட உலகப் பணக்காரர்களுள் ஒருவரான இவர் , புற்று நோய் சிகிச்சைக்காகவும் , இந்த நோய் பற்றிய ஆய்வுக்காகவும் , 200 மில்லியன் டொலர் தொகை அன்பளிப்பாக வழங்கி உள்ளமை இங்கே குறிப்பிடத் தக்கது ❖

# கையைக் கடித்துள்ள இரவல் குடை வியாபாரம்



ஒல்லாந்தில் மிதி வண்டிகளை வாடகைக்கு விடும் முறையை பின்பற்றி , குடைகளை வாடகைக்கு விடும் தொழிலில் இறங்கிய சீனர் ஒருவரின் முதலுக்கே மோசம் வந்துள்ளது . வாடகைக்கு இவர் விட்ட குடைகள் எல்லாமே களவாடப்பட்டு விட்டன என்பதுதான் அந்த சோகக்கதை.

மிதி வண்டிகளை வாடகைக்கு விட நகரின் பிரதான நிலையங்களில் நிறுத்தி வைப்பது போல இந்த நிறுவனமும் , குடைகளை விரும்பியவர் எடுத்துச்செல்ல தயாராக அடுக்கி வைத்திருந்தது. ஆனால், இந்தக் குடைகளை எடுத்துச் சென்றவர்கள், அவற்றைத் திரும்பவும் கொண்டுவரவில்லை .

இவர்கள் வைத்த 300,000 குடைகளில், அனேகமாக எல்லாமே மறைந்து விட்டன . இந்த நிறுவன இயக்குனர் இது விடயமாக கருத்து தெரிவிக்கையில் , தான் மக்களை தப்புக் கணக்கு போட்டு விட்டதாகவும் , மிதி வண்டி வாடகை போல இதையும் செய்ய முற்பட்டதாகவும் கூறி இருக்கின்றார் .

குடை தேவைப்படும் ஒருவருக்கு , கைத்தொலை பேசி மூலம் ஒரு கடவை இலக்கம் அனுப்பி வைக்கப்படும் . சீனப் பணத்தில் 50யுவான் செலுத்தி , பூட்டைத் திறந்து , குடையை எடுத்துச் செல்ல முடியும் .

மனம் தளராது இந்த வியாபாரத்தை தொடரப் போவதாக இந்த நிறுவனம் கூறி உள்ளமை இங்கே குறிப்பிடத்தக்கது.

# தாய்லாந்து மன்னரின் சொத்து மதிப்பு 30பில்லியன் டொலரைத் தாண்டும் .

தாய்லாந்தின் புதிய மன்னரின் முழுக் கட்டுப்பாட்டில் அவரது சொத்தை வைத்திருக்க, இராணுவ அரசு அனுமதி வழங்கி உள்ளது. பெருமளவு அரச முதலீடுகள், அரச சொத்துக்கள் போன்றவற்றை அடக்கிய முடிக்குரிய சொத்து அலுவலகத்தை நிர்வகிக்கும் முழுப் பொறுப்பும் மன்னர் வஜீரா லோங்கோர்ன் கையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2014 இல் இடம்பெற்ற இராணுவப் புரட்சிக்குப் பின்னர், தாய்லாந்து பாராளுமன்றம். இராணுவ நியமனம் பெற்றவர்களை உள்ளடக்கியே இயங்கி வருகின்றது. 69 வருடங்களில் முதல் தடவையாக, முடிக்குரிய சொத்து விவகாரத்தில் இயற்றப்பட்ட சட்டத்தில் மாற்றம் செய்யப்படுகின்றது.



மன்னரின் சொத்து மதிப்பை 30 பில்லியன் டொலர்கள் என்று மதிப்பிட்டாலும், சரியான சொத்தின் மதிப்பு வெளியிடப்படவில்லை என்றே கருதுகிறார்கள்.

9பில்லியன் டொலர்கள் பெறுமதியான தாய்லாந்தின் பெரிய வங்கியான சியாம் வர்த்தக வங்கி, சியாம் சீமெந்து உற்பத்தி நிறுவனம் ஆகியவற்றின் பங்குகள், இந்த அலுவலகத்தின் பெயரிலேயே உள்ளன.

ஒரு இயக்குநர் சபையை உருவாக்கி, முடிக்குரிய சொத்துக்களை நிர்வகிக்க, மன்னருக்கு இப்பொழுது முழு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது, இச்சொத்து தனிப்பட்ட ஒருவருக்கானது அல்ல என்பதையும், ஆட்சிக்கு ஆட்சி சொத்து கைமாறும் என்பதையும் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

தந்தையின் மரணத்தை அடுத்தே, சென்ற டிசம்பரில் 64 வயதான மன்னர் வஜீரா சிம்மாசனத்தில் ஏறினார்.

அரச குடும்பத்தினரின் சொத்து என்ற வகையில், தாய்லாந்து மன்னரின் சொத்து மதிப்பே , முதலிடத்தில் நிற்பது இங்கே குறிப்பிடத்தக்கது.



# வாசகர் கடிதம்

### உங்கள் பாணியில்

நீதிபதி இளஞ்செழியனின் பாதுகாப்பு உத்தியோகத்தர் மீதான துப்பாக்கிச் சூடு..... மற்றும் அரசியல் விவகாரம் உங்களுக்கே உரித்தான பாணியில், வாசிக்கத் தூண்டும்படி வெளியிட்டு இருக்கிறீர்கள். பாராட்டுக்கள் நிறைவாக!

- உடுவை தில்லை நடராஜா கொழும்பு

### 'றெயின்போ'வை தேடினேன்!

'புதினம்' ஆகஸ்ட் இதழ், பார்க்கப் பார்க்கப் படிக்கத் தூண்டுகிறது. தாங்கள் அயராது ஆற்றிடும் பத்திரிகைப் பணிக்கு நல்வாழ்த்துக்கள். 'கானக்குயில்' லண்டனில் ஆரம்பித்த வேளையில் அப்பொழுது இசை வழங்கியவர்கள் லண்டன் றெயின்போ இசைக் குழுவினர். 'கானக்குயில்-2017 பற்றிய செய்திக் கட்டுரையில் றெயின்போ பெயரைத் தேடினேன்.

எஸ்.கே. ராஜன் லண்டன், பாரிஸ்

### 'நல்லாட்சி புலுடா!'

நல்லாட்சி என்று பெயரை வைத்துக் கொண்டால் போதுமா? தோட்டா ஒன்றுதான்! நீங்கள் குறிப்பிட்டதுபோல, எல்லாமே ஒரே தோட்டாதான்! தமிழனைப் பதம் பார்ப்பதற்காக நடக்கிற 'நல்லாட்சி' எல்லாம் வெறும் புலுடா!

- சுந்தரம் ராஜேஸ்வரன் New Malden

### நாகரீகமாக நடக்கிறோமா?

இங்கிலாந்து மிகவும் நாகரீகமான நாடு. நம்மவர்களுக்குத் தஞ்சம் தந்து, வசதியாக வாழ்வதற்கு இடம் தந்து, நமது பிள்ளைகள் படித்துப் பட்டம் பெற்று உயர்வாக வாழ வழிவகுத்த இந்த மண்ணைத் தொட்டுக் கும்பிட வேண்டும். அப்படியான ஒரு நாட்டில் இடம் தந்த அவர்களுக்கு இடைஞ்சல் அளிக்காமல் இருக்கலாமல்லவா? அப்படி வாழ்கிறோமா? சிந்தித்துப் பாருங்கள், புரியும்.

-ஆர்.கே.ராமநாதன் Watford

### பயனுள்ள ஆலோசனை

இயற்கையிலிருந்து வெகுதூரம் விலகி, முற்றிலும் செயற்கையாக மனிதன் வாழ்க்கை மாறிவிட்டது என்று ஹோமியோபதி டாக்டர் தியாகராஜன் கடந்து இதழில் தனது கட்டுரையில் குறிப்பிட்டது உண்மைதான்! இயல்பாகவே, இலவசமாக அமையப்பெற்ற உடல் ஆரோக்கியத்தை கண்ட கண்ட மருந்துகளை உட்கொண்டு கெடுத்துக் கொள்கிறோமே! தொடர்ந்து அவர் ஆலோசனைகளைப் படித்து வருகிறேன். மிகப் பயனுள்ளதாக இருக்கிறது.

-ரா. சுந்தரேஸ்வரன் Southall

### தமிழக அரசியல்

தமிழக அரசியலைப்பற்றி அழகாக எழுதி வருகிறார் ப. திருமாவேலன் தவறாது படிக்கிறேன்.

என்.கே. இராமலிங்கம் Mitcham

# பொறாமை எனும்...

# போராடும் தமிழ் பெண்கள்!

மாலைக் கதிரவன் மெதுவாய் மறைந்து கொண்டு இருக்க, இரவும் பகலும் முத்தமிட்டுக் கொள்ளத் துடிக்கும் அந்த அழகான அந்திப் பொழுதை ரசித்தபடியே நடந்து சென்றேன். தேம்ஸ் நதி என் பக்கத்தில் சலனமில்லாமல் மௌனமாய் ஓடிக் கொண்டு இருக்க சற்றுத் தொலைவில் எனக்குத் தெரிந்த ஒரு பெண்மணி நடந்து செல்வதைக் கண்டேன். வாழ்க்கைச் சுமைகளை தன் தோள்களில் சுமக்க முடியாமல் சுமந்து செல்வதைப் போல் அவளின் நடையை வைத்து உணர்ந்தேன். கொஞ்சம் விரைந்து சென்று மெதுவாய் தோளில் தட்டவும் திடுக்கிட்டு சற்றே பயந்து போனவளாய் என்னைப் பார்த்தாள். வழமைபோல் சுகம் விசாரித்து பின்பு நேரடியாகவே பேச்சுக்கு வந்தோம். உற்கார்ந்துதான் பேசுவோமே என்று பக்கத்தில் நதியோரமாய் போடப்பட்டிருந்த பெஞ்சில் இருவரும் அமர்ந்தோம். நாங்கள்அப்படி என்னதான் பேசப் போகிறோம் என்று மரங்களும் செடிகளும் ஆவலாய் எங்களையே நோட்டம் விடுவது போல் தோன்றியது.




“எனக்கு வேலையில் ஒரே பிரச்சனையாய் இருக்குது” என்று ஆரம்பித்தாள் என் தோழி. இலங்கைத் தமிழர்களோடு வேலை செய்யும் இவளுக்கு அப்படி என்னதான் பிரச்சனை? சம்பளம் ஒழுங்காக கொடுப்பது இல்லையா? அல்லது லீவு தரமுடியாது என்கிறார்களா? வெளிநாட்டில் வாழ்ந்தாலும் தமிழ் பேசும் மக்களோடு வேலை செய்வதுக்கு கொடுத்து வைத்திருக்க வேண்டும் அல்லவா?

தான் வேலையில் சேர்ந்த கொஞ்ச நாட்களிலேயே நல்ல விதமாய் வேலை செய்து நல்ல பெயர் வாங்கியதோடு மட்டும் இல்லாமல் கம்பனியை முன்னுக்கு கொண்டு வருவதற்காய் நிறைய மாற்றங்களையும் ஏற்படுத்தி உள்ளாள். இவை எல்லாம் அங்கு அதிக காலமாய் வேலை செய்துகொண்டு இருக்கும் ஒருசிலருக்கு பிடிக்காமல் இவளுக்கு நிறைய கஷ்டங்களைக் கொடுக்கிறார்கள். நாடு விட்டு நாடு வந்தாலும் தமிழர்களுக்குள் அதுவும் வேலை செய்யும் இடத்தில் இப்படி வேறு பிரச்சனையோ என்று எண்ணத் தோன்றியது.

“நான் செய்யும் காரியத்தில் இல்லாத குறைகளைத் தேடித் தேடி கண்டு பிடித்து தேவையே இல்லாமல் பிரச்சனைகளை வளர்க்கிறார்கள். மானேஜரிடம் தினமும்போய் என்னைப் பற்றி குறை சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். அது மட்டும் இல்லை. என்னைப் பற்றி தவறாக புறம் கூறியபடி உள்ளார்கள்".அடுக்கிகொண்டே சென்றாள்.

இதற்கு எல்லாம் என்ன காரணம்? பொறாமை! . படித்து, அனுபவம், அறிவு அத்தோடு இளமை, அழகு எல்லாமே உள்ள ஒரு பெண் இவள். இப்படி ஒருத்தி வந்து சாதித்துக் காட்டுவதை அங்கு உள்ளவர்களால் பொறுக்க முடியவில்லை. தமிழ் மக்கள் மத்தியில் இந்தப் பொறாமை என்னும் ஒரு வியாதி உலாவியபடியே இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.



தொடர்ந்தாள் என் தோழி. "தினமும் போராடிப் போராடிக் களைத்துப் போய் விட்டேன். எனக்கு செய்யும் வேலை மிகவும் பிடித்துள்ளது. ஆனால், வேலைக்கு செல்வதற்குத்தான் மனமே இல்லை. நான் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் ஏதாவது ஒரு தடை. ஆங்கிலேயரோடு வேலை செய்வதை விட தமிழ் மக்களோடு வேலை செய்வது மிகவும் கஷ்டம் என்று என் உறவினர்கள் சொன்னார்கள் ஆனாலும் நான் நம் மக்கள்தானே அப்படி என்ன நடந்து விடப் போகிறது என்று அதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. இப்பொது அவர்கள் சொன்னதின் அர்த்தம் புரிகிறது." அடுக்கிகொண்டே சென்றாள்.

மீண்டும் தொடர்ந்தாள் என் தோழி. "இரண்டு பேருக்கு என்மேல் மிகவும் பொறாமை. நான் ஏதோ அவர்களின் வேலையைச் சூறையாட வந்தது போல் தவறாக நினைக்கிறார்கள். அதுமட்டும் இல்லாமல் கூட வேலை செய்பவர்களையும் எனக்கு எதிராய் திருப்புகிறார்கள். நானும் அமைதியாக எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு இருந்தேன். பெண் என்பதினாலோ என்னவோ கேவலமாய் வேறு நடத்துகிறார்கள். பேசாமல் வேலையைத் தூக்கி எறிந்து விட்டு வரலாமா என்று கூடதோன்றுகிறது." தொடர்ந்து அடுக்கிகொண்டே சென்றாள். மாலை மங்கிக் கொண்டு சென்றாலும் அவளின் கண்களின் ஓரமாய் கண்ணீர் துளிகள் சிந்துவதற்குத் தயாராய் இருந்தது தெளிவாகவே தெரிந்தது.

அவள் பேசப் பேச எனக்கு நினைவுக்கு வந்தது நண்டுக் கதை! ஒரு நண்டு மற்ற நண்டை ஏற விடாமல் தடுத்துக் கொண்டே இருக்கும் இந்த நண்டுக் கதைதான் என் நினைவுக்கு வந்தது.

நானும் அடிக்கடி நம் மக்கள் கூற கேட்டிருக்கிறேன் “எங்கட ஆக்களோட வேல செய்யிறது கஷ்டம்தான்”. அதின் அர்த்தம் புரிந்தது.

என் தோழிக்கு என்னவென்று ஆறுதல் கூறுவது? ஒன்றுக்குமே யோசிக்க வேண்டாம். எல்லாம் நல்லபடியாகவே நடக்கும் என்று எல்லோரும் சொல்லும் அர்த்தமில்லாத ஆறுதல் வார்த்தைகளை அள்ளி வீசட்டுமா? உலகப் பெண்கள் தினம் கொண்டாடி என்ன பயன்? பெண்களுக்கு இன்னும் உண்மையிலேயே சமஉரிமை கிடையாது என்று நானும் சேர்ந்து முழங்கட்டுமா?

தோளில் தட்டிக் கொடுத்து...எழுந்திரு பெண்ணே! வாழ்க்கை என்று வந்து விட்டாலே போராட்டம்தான். இதை எல்லாம் கண்டு மருளாதே..எழுந்திரு... போய்தொடர்ந்து போராடு என்று தைரியம் கூறட்டுமா?

பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய்.......அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பது இல்லையே துச்சமாக வெண்ணி நம்மைத் தூறு செய்த போதினும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே!

பொதிகளை எல்லாம் இறக்கி வைத்த நிம்மதியில் என் தோழி அவள் வழியில் செல்ல...அந்தப் பொதிகளை எல்லாம் என் மனதில் ஏற்றிக் கொண்டு பாரத்தோடுநான் என் வழியில் சென்றேன். தேம்ஸ் நதி மௌனமாய் என் பக்கத்தில் ஓடிக் கொண்டு இருந்தது. அது எங்களின் பேச்சைக் கேட்டதினாலோ என்னவோபெருமூச்சு விட்டுக் கொண்டே செல்வது போல் எனக்கு ஒரு உணர்வு.



பவானி ரவீந்திரன்

# ஈழத்தில் சிவபூமிகள்



**ஆராரமில்லாமல், அடக்கமாக சுயநலம் சிறிதுகூட இல்லாத அளப்பரிய பணிகளை ஈழத்தில் சிவபூமிகள் என்ற அறக்கட்டளை ஊடாக செய்து வரும் கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகனின், சலிக்காத கடின உழைப்பு சிலிர்க்க வைத்தது. பத்து ஆண்டுகளுக்கு மேலாக பதினொரு பேருடன் ஆரம்பிக்கப்பட்ட தொல்புரம் சிவபூமி இன்று எழுபத்தைந்து வயோதிபர்களை கடந்து பல பணியாளர்களுடன் வசதிகளைக் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கிறது. இதே போன்று, கோண்டாவிலில் சிவபூமி மனவிருத்திப்பாடசாலை, கீரிமலையில் சிவபூமி மடம், சிவபூமி யாத்திரிகர் விடுதி கோண்டாவிலில் சிவபூமி மருத்துவ நிதியம், கிளிநொச்சியில் சிவபூமி மருத்துவ பாடசாலை, திருகோணமலையில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை என இன்னும் பல சிவபூமிகள் அறக்கட்டளை பணி மனதுக்கு நிறைவாக இருக்கிறது.**

பாரதியார் புதுமைப் பெண்ணை கனவுகண்டார். கவிதையாகப் படைத்தார். ஆனால், ஈழமோ அந்தப் பெண்ணை பெற்றெடுத்தது. அவர்தான் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி. சிவபூமி மகளிர் இல்லத்திற்கு அன்போடு அத்திவாரம் போட்டவர். ஈழத்தின் யுத்தகாலத்தில் வாழ்வில் நம்பிக்கையைக் கொடுத்து கஷ்டப்பட்ட விதியிலிருந்து பல குழந்தைகளையும், பெண்களையும் காப்பாற்றினார். தெல்லிப்பழை துர்க்கை அம்மனுக்கு அயராது பணி செய்தவர். சிவத்தமிழ்செல்வி அரவணைத்து ஆன்மீகத்துறையிலும் அறநெறியிலும் வழிகாட்டி வளர்த்தெடுத்த அவரது செல்லப்பிள்ளை செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகனின் தலைமையில் சிவபூமிகள் பல தொண்டுகளைச் செய்வதைக் கண்டேன்.

நானும் எனது குடும்பமும் முதன்முறையாக 2003ம் ஆண்டு அம்மா ஆரம்பித்த சிவபூமி மகளிர் இல்லத்திற்கு போனோம். இரண்டாவது தடவையாக 2011ம் ஆண்டு மகளிர் இல்லத்திற்கும், தொல்புரத்தில் உள்ள சிவபூமி முதியோர் இல்லத்திற்கும் போயிருந்தோம். ஒவ்வொரு முறையும் ஈழத்திற்கு போகும்போதும் ஆறு. திருமுருகனின் பணிகளைப் பற்றி விபரித்து எல்லாவற்றையும் பார்த்துவா என்பார் அண்ணா சமீபத்தில் இம்முறை போகும்போதும் அதேதான் சொன்னார். நான் யாழ்ப்பாணம் போனவுடன் ஆறு. திருமுருகனுக்கு போன் பண்ணினேன். “செவ்வாய்க்கிழமை சிவத்தமிழ்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் குருபூசை, வந்து கலந்து கொள்ளுங்கள்” என்றார். குருபூசைக்கு போக முதல் தொல்புரத்தில் இருக்கும் சிவபூமி முதியோர் இல்லத்திற்கு போனோம். அப்போது வாசலில் நின்ற காவலாளி பணிவோடு வரவேற்றார். உள்ளே சென்றபோது அங்கு வேலை செய்யும் இனம்பெண், “செருப்பை கழட்டி விட்டு உள்ளே போங்கள்” என்றார். நிர்வாகி எங்களைப் பார்த்து “சாப்பிடுகிறீர்களா” என்று அன்போடு உபசரித்தார். சில காரியங்களை முடித்தபின்பு சுற்றிப்பார்க்கலாமா என்று கேட்டேன். ஒரு வித தயக்கமும் இல்லாமல் ஒரு உதவியாளரை அனுப்பி வைத்தார். விறாந்தையில் அம்மாக்களுடன் பேசினேன். தயக்கமின்றி பேசினார்கள். சுதந்திரமாக பேசினார்கள். பாடசாலை அதிபராக இருந்தவரோடு பேசினேன். மனைவியை இழந்தவர். முகத்தில் அமைதி தெரிந்தது. வாசித்துக் கொண்டிருந்தார். ஒரு சிலர் அறைகளுக்குள் இருந்து எழுதுவதையும், வாசிப்பதையும் யன்னல் ஊடாகப் பார்த்தேன். சில பெண்கள் பேசியபடி பனை ஓலையை சட்டமாக்கிக் (கிழித்து) கொண்டிருந்தார்கள் மாடுகளுக்கு தீனிபோடுவதற்காக! சில முதியவர்களின் பிள்ளைகள் வெளிநாட்டில் இருப்பதாக அறிந்தேன். வளாகத்தில் சிவபூமிக்குரிய *Mini Bus* நிறுத்தப்பட்டிருந்தது. கோயிலும் ஒன்று இருக்கிறது. வெவ்வேறு பள்ளிக்கூட மாணவர்கள் சிவபூமிக்கு வருகை தந்து நிகழ்ச்சிகள் செய்து மகிழ்விப்பார்கள். யாழ்ப்பாணத்தில் பல முதியவர்கள் தனிமையில் வாழ்வதைக் கண்டேன். இயலாத காலங்களில் யார் தம்மை பார்க்கப் போகிறார்கள்? என்ற பயம். ஏக்கத்தோடு வாழ்கிறார்கள். பலர் முதியோர் இல்லங்களில் சேருவதற்கு காத்திருக்கிறார்கள். யாழ்குடா நாட்டில் முதியோர் இல்லங்களுக்கு பெரிய அவசியம் உள்ளது. இங்கிலாந்தில் பல முதியோர் இல்லங்களுக்கு போயுள்ளேன். சிவபூமியின் தொண்டைப் பார்த்த போது, மனம் திருப்தியாக இருந்தது. நேர்மையும், நாணயமுமே சிவபூமியின் வெற்றியின் ரகசியம்.

சிவபூமியைப் பார்த்தபோது என் மனதில் சில நினைவுகள் வந்தன. எனது மூத்த மகனும் மருமகளும் 6 மாதம் இந்தியாவில் தங்கியிருந்து மனநலம் குன்றியவர்கட்கும் பெற்றோர்கள் இல்லாத குழந்தைகளுக்கும் சேவை செய்தார்கள். அப்போது ஈழத்தில் யுத்தத்தின் உச்சக்கட்டம். என் மகன் இந்தியா போகும்போது என்னிடம் கூறியது. இலங்கையில் யுத்தம் இல்லாவிட்டால் யாழ்ப்பாணத்திற்குத்தான் போயிருப்போம். இப்படியான சேவைகள் செய்யப்போகிறவர்கட்கு (*Volunteers*ற்கு) அனுமதி கிடைப்பது சுலபமான காரியமல்ல. தொண்டு நிறுவனங்களுக்கு முன்பணமாக சில ஆயிரம் (*Pounds*) பவுண்கள் கட்டினார்கள். பல விதிமுறைகளை ஏற்று நிர்வாகத்தை திருப்தி செய்தார்கள். இவ்வளவு செய்த பின்பும் விசா எடுப்பதில் சிக்கல் இருந்தது. இளம் தம்பதியினர் வேலைகளை ராஜினாமா செய்து விட்டு போகிறபடியால் சந்தேகம் ஏற்பட்டது, இந்திய விசா கொடுக்கும் அதிகாரிக்கு. அண்ணாவின் சிபாரிசால் சந்தேகம் நீக்கியது. எனது மகனும் மருமகளும் தொண்டு செய்ததின் மூலம் மனநிறைவைப் பெற்றது மட்டுமல்ல, இல்லத்து குழந்தைகளுடன் நல்லொரு உறவையும் ஏற்படுத்திக் கொண்டார்கள் *UK* திரும்பி வந்த பிறகும் அவர்களுக்கு தொடர்ந்து உதவி செய்கிறார்கள்.

செஞ்சொற்செல்வருக்கு ஒரு அன்பான கோரிக்கை:

இப்படியான தொண்டுகளைச் செய்ய விரும்பும் வெளிநாட்டில் வாழும் இளம் தலைமுறைக்கு சிவபூமியின் நிர்வாகம் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி கொடுத்தால் அது ஒரு உறவுப்பாலமாக அமையும் என்பது எனது கருத்தாகும். சில முதியோர்களை, வெளிநாட்டில் இருந்து சேவை செய்ய வரும் இளம்பிள்ளைகள் தங்கள் தாத்தா, பாட்டிகளாக தத்தெடுத்தும் வருவார்கள் என்று நம்புகிறேன்.

முதியோர் இல்லத்துக்குப் போன அடுத்தநாள் தெல்லிப்பழை அம்மன் கோவிலுக்கு சிவத்தமிழ்செல்வியின் குருபூசையில் கலந்துகொள்ள நானும் எனது கணவரும் போயிருந்தோம். இது எங்களுக்கு முதல் தடவை. நேரத்திற்கு போய் அம்மனை தரிசித்தோம். அம்மனின் வெளிவாசலில், இருபுறத்திலும் வரிசையாக இல்லத்துக் குழந்தைகளும், அங்கே வளர்ந்த இளம்பெண்களும் நின்றார்கள். குழந்தைகள் ஆரோக்கியமாக இருந்தார்கள். குழந்தைகளின் கண்களில் குழந்தைகளுக்குரிய குறும்புத்தனங்களை பார்த்தேன். குழந்தைகளும் இளம்பெண்களும், பாவாடை சட்டை, சேலைகளுடன் மிகவும் அழகாக இருந்தார்கள். சிவத்தமிழ்செல்வி விண்ணுலகத்திலிருந்து குழந்தைகளை பெருமையுடன் பார்த்துக் கொண்டிருப்பார் என்று நினைத்தேன். ஆறு. திருமுருகன் கோயிலுக்குள் இருந்து சிவாச்சாரியார்களை அழைத்துவர, குழந்தைகளும் பெரியவர்களும் தொடர மேளதாளத்துடன் சிவத்தமிழ்செல்வியின், சமாதியை அடைந்து மரியாதை செலுத்தப்பட்டது. கோயிலை வலம் செய்த பிறகு அம்மாவின் உருவச்சிலைக்கு மாலை சூட்டப்பட்டது. அதைத் தொடர்ந்து ஆறு. திருமுருகன் உட்பட சிலர் சிறிய உரையாற்றினார்கள். இல்லத்தில் வளர்ந்த மூன்று குழந்தைகள் சிவத்தமிழ்செல்வியின் அன்பையும், பணியையும் போற்றி உருக்கமாக பாடினார்கள். என் கண்ணில் பெருகிய நீரை என்னால் கட்டுப்படுத்தமுடியவில்லை. அதன்பின்பு மண்டபத்தில் சில நிகழ்ச்சிகள் நடந்தன. கிட்டத்தட்ட இருநூறுபேரளவில் கூடியிருந்தார்கள். திருமதி விமலாதேவி நாகேஸ்வரன் தனது கணீரென்ற குரலில் பெரியபுராணத் தேவராங்களை பாடினார்.

- தொடர்ச்சி 26ம் பக்கத்தில்















# ஆசைகள் ஓட்டை குடம்; எப்போதும் நிறைவு ஆகாது!

எல்லோருக்கும் எல்லாமும் அது அதற்கு உண்டான வயதில் கிடைப்பது அரிது.

ஒபாமா தனது 55 வது வயதில் அரசியலில் இருந்து ஓய்வு பெறுகிறார்

ஆனால், டொனால்ட் டிரம்ப் தனது 70 வது வயதில் தான் அதிபர் ஆகிறார்

பில்கேட்ஸ் தனது 30 களிலேயே உலகின் பெரிய செல்வந்தர் ஆனார்

ஆனால், *INDITEX SPAIN* நிறுவனத்தை தனது 50 ஆவது வயதில்தான் தொடங்கினார். அமான்சியோ ஓர்டேகா 80 வயதில்தான் உலகின் இரண்டாவது பெரிய செல்வந்தர் ஆனார்.

ஒருவருக்கு அவர் விரும்பிய வேலை வாய்ப்பு தானாகவே தேடி வருகிறது.

இன்னொருவருக்கோ எல்லா திறமைகள் இருந்தும் சரியான வேலையோ அல்லது தொழிலோ அமைவது இல்லை.

ஒருவர் 22 வயதில் தனது வியாபாரம் தொழிலில் கோடீஸ்வரரான ஒருவர் 45 வயதில் எல்லாம் இழந்து ஏழ்மை ஆகிறார்...

ஒருவர் 40 வயது வரை தன் தொழில் - வியாபாரத்தில் சகல கஷ்டநஷ்டங்களை அனுபவித்து 50 வது வயதில் கோடீஸ்வரர் ஆகிறார்.

எம்.ஜி.ஆயாருக்கு மொத்தம் 70 வயதுவரை வாழ்க்கை வரலாறு. அதில் *முதல் 40 வயது வரை வாழ்க்கையில் பயங்கர கஷ்டம். * கடைசி 30வருடங்கள் சாகும்வரை ராஜயோக வாழ்க்கை.

சர்ச்சில் தனது 82 வது வயதில் *History of English Speaking People* என்ற புத்தகத்தை எழுதினார்.

பெர்னாட்ஷா தனது 93 வது வயதில் *Pertouched Pepler* என்ற நாவலை எழுதினார்.

டால்ஸ்டாய் தனது 82 வது வயதில்

*I Cannot Be Silent* என்றார்.

வில்லியம் ஷேக்ஸ்பியர் தனது 50 வது வயதை தாண்டிய பிறகே 37 நாடகங்களை இயற்றினார்...

எல்லோருக்கும் எல்லாமும் அது அதற்கு உண்டான வயதில் கிடைப்பது அரிது.

எனவே உங்களுக்கு ஒன்று கிடைத்து விட்டால் அது கிடைக்காமல் போராடும் மற்றவரை ஏளனம் செய்யாதீர்கள்.

உங்களை மற்றவரோடு சதா ஒப்பிட்டு உங்களிடம் இல்லாததை நினைத்து புலம்பாதீர்கள்.

யார் கண்டது, அடுத்த நொடி நமக்கு என்ன நடக்கும் என்று, இந்த உலகமே ஒரு பெரிய விபத்தால் உருவானதுதான்.

எனவே எதிர்காலத்தில் நடக்க விருப்பதை எல்லாம் கட்டுப்படுத்த நினைப்பது முட்டாள்தனம்.

இங்கே இப்போது இந்த நொடியில் என்ன செய்து கொண்டு இருக்கிறீர்களோ அதை முழுமையாக விழிப்புணர்வுடன் செய்யுங்கள்.

அடுத்த நொடி நிச்சயம் அழகாய் மலரும்.

தேவைகளை நிச்சயம் பூர்த்தி செய்து கொள்ள முடியும்

ஆனால், ஆசைகள் ஓட்டை குடம் போல எப்போதும் நிறைவு செய்யமுடியாது.

இதுதான் வாழ்க்கை

இதைப் புரிந்து கொண்டவர்கள் மட்டுமே

மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள்.

தொகுப்பு : தமிழன்

# அழகான வரிகள்...

- வாழ்க்கை என்பது நீ சாகும் வரை அல்ல.. மற்றவர்களின் மனதில் நீ வாழும் வரை..
- நாம் தேவையில்லை என்று சிலர் நம்மை நினைக்க துவங்கும் முன்விலகி நிற்ககற்றுகொள்வதுசிறந்தது.
- ஆசை படுவதை மறந்துவிடு.. ஆனால்ஆசைப்பட்டதை மறந்துவிடாதே..!
- மன நிறைவு என்பது இயற்கையாக நம்மிடம் உள்ள செல்வம்..ஆடம்பரம் என்பது நாம் தேடி கொள்ளும் வறுமை..
- சில நேரங்களில் தனிமைகடினம்.. சில நேரங்களில் தனிமை தான் இனிமையான தருணம்!..
- மரணத்தை பற்றி கவலை படாதே.. நீ இருக்கும் வரை அது வரப்போவதில்லை.. அது வரும்போது நீ இருக்கப் போவதில்லை..
- புரியாததை புரிந்துகொள்ளுங்கள்..புரிந்ததை பகிர்ந்துகொள்ளுங்கள்.. வெற்றி நிச்சயம்!
- வாழ்க்கை உன்னை எதிர்பாராத இடங்களுக்கு கூட்டிக்கொண்டு செல்லும்..அன்புதான் உன்னை வீட்டுக்கு அழைத்துவரும்!
- அறிவுரை தேவைப்படும் போதுதான் ஆணவம் கண்ணை மறைக்கும்..!
- நீ சிரித்து பார்.. உன் முகம்உனக்கு பிடிக்கும்..!
- மற்றவர்களை சிரிக்கவைத்து பார்.. உன் முகம் எல்லோருக்கும் பிடிக்கும்..!
- நீ நேசிக்கும் இதயத்தில் பல ஆண்டு காலம் வாழ்வதை விட உன்னை நேசிக்கும் இதயத்தில் சில நொடிகன் வாழ்ந்து பார் இதயத்தில் சுகம் தெரியும்
- வளர்ந்த பின் வளைவது பெருமை.. வளைந்தே இருப்பது சிறுமை..
- விரும்புவதால் கருவறையில் மீண்டும் ஒரு முறை இடம் கிடைப்பதில்லை
- வெறுப்பதால் கல்லறையும் நம்மை விட்டுவிட போவதில்லை இருக்கும் வரை மகிழ்சியாக இருப்பபோம்.

தொகுப்பு: பரிமேலழகர்

# அன்பு

குருவின் உறக்கம்
கலையா வண்ணம்
தொடையில் வண்டு
துளையிட்ட போதும் -
வலிதாங்கி நின்றார்
கர்ண மகா ராசன்.
நபிகள் உறக்கம்
கலையா வண்ணம்
கொடிய நாகம்
தீண்டிய போதும் -
வலிதாங்கி நின்றார்
உயிர்நண்பர் அபுபக்கர்.
யேசுபிரான் சிலுவை
சுமக்கும் வண்ணம்
வழிபோக்கர்க்கு சேவகர்
ஆணைதர தன்தோளில்-
வலிதாங்கி சுமந்தார்
சிலுவையை சீமோன்.
மதங்கள் வெவ்வேறாயினும்
பதிக்கும் கருத்து ஒன்றே...
மனங்கள் வெவ்வேறாயினும்
பதிப்பது அன்பு ஒன்றே...
எனவே -
அன்பினை மட்டும் உணர்வோம்
அன்பினை மட்டும் உணர்த்துவோம்
அன்பினால் மட்டுமே வாழ்வோம்
அன்பினால் அனைத்தும் வாழும்
அன்பினால் வெற்றிகள் குவியும்
அன்பினால் உலகினை

வெல்வோம்
அன்பே உலகென அறிவோம்
அன்பே உலகென அறிவோம்...

சுசிலா அரவிந்தன்

# மணி விழா தம்பதி வாழ்க!

**சிவ ஸ்ரீ சங்கரக்குருக்கள் - சௌபாக்கியவதி உஷா**

ஈஸ்ற்ஹாம் லண்டன் ஸ்ரீ முருகன் கோயிலில் பணிபுரிந்து வரும் சிவஸ்ரீ பில்லூர் கே. சங்கரக் குருக்கள் அவர்களுக்கும், அவரது இல்லத் துணைவியார் சௌபாக்கியவதி எஸ். உஷா அவர்களுக்கும், எதிர்வரும் 3.9.2017 சஷ்டியப்த பூர்த்தி மணி விழா திருவண்ணாமலையில் (ஓயாமடம், தெற்கு மாடவீதி) நடைபெறவுள்ளது.



தங்கள் பெற்றோரின் மணிவிழாவுக்கான ஏற்பாடுகளை பிள்ளைகள் எஸ்.திவாகர் (அபர்ணா), எஸ்.சுதாகர் (ஸ்ரீவித்யா) வி.ஜெயஸ்ரீ (காசிவிஸ்வநாதன்) ஆகியோர் சிறப்பாகச் செய்து முடித்துள்ளனர். அறிஞர்கள், பெரியார்கள் வாழ்த்துச் செய்திகள் - கட்டுரைகள் கொண்ட மணி விழா மலரும் வெளியிடப்படுகின்றது.

பண்புகள் நிறையப் பெற்ற சங்கரக் குருக்கள் - உஷா தம்பதிகள் உறவுகளோடு பல்லாண்டு பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.



ப.வை. ஜெயபாலன்

# அழியாது தொடரும் வழிபாடு

தேர், தீர்த்தம் வரையான தொடர் திருவிழாக்களை கொடியேற்ற உற்சவத்துடன் ஆரம்பித்து கோயில்களில் பக்தர்கள் குவியும் கோடைப்பருவம் இது. நம் நிலத்திலும், புலம்பெயர் குடியேறியுள்ள. புலத்திலும் இது தொடர் நிகழ்வு. தமிழ்ப்பள்ளிகள் தாயக ஊர் சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள் என்று தமிழர் கூடும் களங்கள் புலம்பெயர் நாடுகளில் ஊரில் வாசத்தில் கொண்டுள்ள பாசத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. இங்கு பிறந்து வளரும் எம் சந்ததிகளின் சங்கதிகளைப் பார்க்கும் போது எதிர்காலத்தில் இவற்றில் எவை அற்றுப் போனாலும் கோயில், கடவுள் நம்பிக்கை, மதம் நிலைக்கும் என்பதை எம் இளைய தலைமுறைகளில் தளைத்துள்ள பக்தி மூலம் இந்த உற்சவங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

ஒரு உதாரணம். பாண்டிச்சேரி பிரான்ஸின் ஆளுமைக்கு உட்பட்ட காலம் 1615ம் ஆண்டு. அதே பிரான்ஸின் ஆளுமையில் இருந்த மொறிசியஸ் தீவுக்கு இராமசாமி என்பவர் பாண்டிச்சேரியில் இருந்து புலம்பெயர்ந்தவர். வறுமை அவரை விரட்டியதன் முடிவு அந்த புலம்பெயர்வு. அங்கு வேலை, வருமானம், வளம் என தன் நிறைவு கொண்டார். பாண்டிச்சேரி உறவினர்களையும் அழைத்து தன்னோடு இருத்திக் கொண்டார். இவ்வொருவரைப் பின்பற்றி ஊரே புலம்பெயர்ந்தது. முடிவு மொறிசியஸ் தீவு கணிசமான தமிழர் தொகையைக் கண்டது. வேலை படிப்பு என்பன பிரான்ஸ் மற்றும் மொறிசியஸ் மொழியை அவர்களுக்குள் தேவை கருதி திணித்தது. அங்கு பிறந்த தலைமுறைக்கு தமிழ் மறந்த மொழி ஆனது. ஆயினும் இன்றும், அவர்களின் சந்ததிகள் பரந்து வாழும் எங்கும் அவர்கள் தம் மதத்தை, பண்பாட்டை மறக்கவில்லை. தமிழரை ஒத்த நிறம் குணம் பழக்க வழக்க அடையாளங்கள். ஊர் நாய்களுக்கு நாங்கள் முன்புசூடி மகிழ்ந்த பெயர்களே எண் சாஸ்திரம், நாகரீகம் என்ற காரணங்களால் பெரும்பாலும் இன்று இங்கு எம் பிள்ளைகளை அலங்கரிக்கின்றன. ஆனால், இன்றும் தமிழ் தெரியாத அந்த மொறிசியஸ் தமிழ் சந்ததிக்கு அழகிய தமிழ்ப் பெயர்கள். வள்ளி ஜெயமணி, நிர்மலா, ஜெயலட்சுமி, பார்வதி, அரசன் இராமலிங்கம் சிதம்பரப்பிள்ளை, ஆறுமுகம், கந்தசாமி என்பன இங்கு எம் அயலில் வாழும் இவர்களின் பெயர்களில் சில. தம் பெயர்களின் சரியான தமிழ் உச்சரிப்பு அர்த்தம் இவர்களில் பலருக்கு தெரியாது. ஆனால், ஒழுங்கான ஆலய வழிபாடு, நேர்த்தி வைப்பு, தைப்பூச உற்சவத்தில் தீமிதிப்பு, அலகு குத்தி பாற்சொம்பு எடுப்பது வரையான ஆர்வம் என்பன அவர்களிடம் இன்றும் ஊறி இருந்து வீறுகின்றன. ஈழத்தமிழ் பெண்கள் கூட. பணிக்கு செல்லும்போது நெற்றிக் குங்குமம், தாலி என்பனவற்றை தவிர்க்கும் போது அவர்களில் பலர் இன்றும் எங்கும் அந்த சைவ தமிழ் அடையாளங்களைப் பேணுகின்றார்கள். சமய ஒழுக்கம், பயபக்தி, கடவுள் நம்பிக்கை தொடரும் என்ற உணர்வை உள்ளத்திற்கு ஊட்டும் ஒரு உதாரணம் இது.

சமயபாடம் என்பது கல்வித் திணைக்கள பாடத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளதே எம் தாயகம். இங்கு சமயபாடம் பள்ளிகளில் இல்லை. சைவ சமயபாட பொதுப்பரீட்சைகள் வருடா வருடம் தாயக சந்ததிகளிடம் சமய அறிவைப் பெருக்கி வர காரணமாகின்றன. இங்கு தமிழ்ப் பள்ளிகளிலும் சமய பாடக் கற்பித்தல் வெற்றியளிக்கவில்லை. சமய பாடத்தை இவ்வசமாக கற்பிக்க சட்டன் தமிழ்ப்பாடசாலை முன் எடுத்த முயற்சிகள் மாணவர் வரவின்மையால் முடங்கியமை எம் அனுபவ உண்மை. கூட்டு பூசை வழிபாடுகளிலும் பெற்றோர். பிள்ளைகளுக்கு நாட்டம் குறைவு.

அமைதியாக, அன்பானவர்களை கண்டு கதைக்கக்கூடிய, பூசைகள், வேண்டுதல்களை காண நிறைவேற்ற கூடிய, உணவும் உண்டு திரும்பக்கூடிய ஒரு களம் என்ற பல காரணங்கள் மத நம்பிக்கைகளையும் ஆலயவழிபாட்டையும் அழியாது தொடரச் செய்கின்றன.

எம் அயலில் புலம்பெயர்ந்த மண்ணில் அன்னியத் தெருக்களிலே எம் தேர்பவனி திருஉலா வரும் பொழுது நெஞ்சு பூரிக்கிறது. “எம் பிள்ளைகள் கிறிஸ்மஸ் ஆராதனைக்கூட தேவாலயத்துக்கு ஆண்டுக்கு ஒரு முறையேனும் வர மறுக்கிறார்களே! உங்கள் இளையவர்களிடம் இவ்வளவு கடவுள் பக்தியா?” என்று உள்ளூராளர்கள் கூறும்போது உள்ளத்தில் ஆறுதல் ஊறுகின்றது. அன்னியர்கள் எம் தாயகத்தை ஆக்கிரமித்து ஆலயங்களை தரைமட்டமாக்கி மதம் கொண்டு எம்மதத்தை எம்மவர்களிடையே திணித்ததும், மதத்தின் பெயரால் கல்லூரிகளை நிறுவியதும், இலவசங்களை மதமாற்றத்துக்கு பரிசாக குவித்ததும் ஒரு காலம். உலக நாடுகளின் ஜனநாயக மாற்றம், பல்லின கலாசார தோற்றம் எம் ஆலயங்கள் அதே நாடுகளில் வீற்றெழ காரணமாயின. கைவிடப்பட்ட தேவாலயங்கள் சிலவே இன்று எம்மவர் கை ஏற்று நடாத்தும் ஆலயங்கள். எம்மவர் சமய உணர்வை மதித்து ஆலயங்களை நடாத்த அனுமதியும் ஒத்துழைப்பும் தருவதும் இங்கு நாம் வாழும் நாடுகளின் அரசாங்கங்களுக்கு. நாம் நன்றி செலுத்திக் கொண்டே இருக்க வேண்டும்!

ஆலய வழிபாட்டையும், காலையில் பூசை அறையில் சாமிப்பட வழிபாட்டையும் நித்திய கடமையாக்கி தாயகத்தில் வளர்க்கப்பட்டவர்கள் நாங்கள். ஆலய உற்சவம் என்றால் ஊர் அயல் எங்கும் பக்திமயம்.








எம் அயல் ஊர் ஆலயம் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில். 25 நாட்கள் உற்சவம். சிறுவயது முதல் நாங்களும் விரதம். அதிகாலையிலேயே வீடு வாசல் கூட்டி முற்றத்தை சாணகம் தெளித்து புனிதமாக்கி அம்மா தோய்த்து தலைதுவட்டி ஈர துண்டை தலைமுடியோடு சேர்த்து குடும்பி முடிந்து ஆயத்தமாகி விடுவா. காலையில் பசியை தாங்கக்கூடிய பால்விட்ட கடும்கோப்பி. வீடெங்கும் சாம்பிராணி மணம். கொடியேற்றத்துக்கு முன்பே மச்ச சட்டிகள் கோடிக்குள் கவிழ்க்கப்பட்டபடி கண் உறங்கும். அடுக்களை புது சைவ பானைசட்டிகள் அலங்கரிக்கும். சைக்கிளில் பெட்டியை கட்டி மீன்களை நிறைத்துக் கொண்டு வீதியில் வந்து கோன் சத்தம் எழுப்பும் மீன்காரனின் வாடையே அந்த 25 நாட்களும் வீதியை நாடாது. நடையாகவும், மினிபஸ், தட்டி வான், பஸ், கார் என்றும் பயணித்து வந்து பக்தர் கூட்டம் கோவிலில் குவியும். தாடி மீசை, தலைமுடி என்று ஆண்களின் வேட்டி, சால்வை விரதக் கோலம். முழுப்பாவாடை, தாவணி, சேலை, தலைப்பூ என்று பெண்களின் பக்திக்கோலம். காவடி, அடி அழிப்பு தண்ணீர் பந்தல், ஒலி பெருக்கி பக்திப்பாடல் என்று வீதிகள் காணும் அழகு. ஆலய வெளி நாலு வீதிகளையும் அலங்கரிக்கும் கடவை தடைகள், மணிக்கடைகள், பாத்திரங்கடைகள். வேட்டைத் திருவிழா, சப்பறம், தேர், தீர்த்தம் கப்பல் திருவிழா, மாம்பழ திருவிழா என்று சனம் குவியும் கலகலப்பு, கோவில் உள்ளே கற்பூர ஆராத்தியை கண்டால் போதும் என நெரிசலுக்குள் தலைநீட்டும் பக்தர்கள் கீரிமலையை கடலுக்குள் தலை அலையாய் அழகூட்டும் அமாவாசை தீர்த்தம். எல்லாமே எமது உடலுக்கு ஊடாக ஊடுருவி, பக்தி உணர்வை உயிருக்குள் ஊட்டி வளர்த்தவை. இன்றும் நினைவில் இனிப்பவை. இங்கும் இவ்வாறு பயபக்தி, வழிபாடு தொடரட்டும். ●

# லண்டன் கோர விபத்தில் தமிழக ஏழு பேர் பலி!






லண்டனில் கன்டெய்னர் லாரிகளும், மினி பஸ்சும் மோதிக் கொண்ட கோர விபத்தில் தமிழ்நாட்டை சேர்ந்த 7 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இவர்களில் 3 பேர் காஞ்சீபுரத்தை சேர்ந்தவர்கள்.

இங்கிலாந்து நாட்டின் தலைநகர் லண்டன். அங்கு பக்கிங்ஹாம் ஷயர் என்ற இடத்தில் எம்-1 நெடுஞ்சாலையில் கடந்த 26ம் திகதி அதிகாலை 3.15 மணிக்கு 2 கன்டெய்னர் லாரிகள் அதிவேகமாக வந்து கொண்டிருந்தன.

அப்போது அந்த நெடுஞ்சாலையில் நாட்டிங்ஹாமில் இருந்து வெம்பிளிக்கு ஒரு மினி பஸ் சென்று கொண்டிருந்தது. அந்த மினி பஸ் மீது 2 கன்டெய்னர் லாரிகளும் பயங்கரமாக மோதின. மோதிய வேகத்தில் அந்த மினி பஸ் அப்பளம் போல நொறுங்கியது. அதில் பயணம் செய்தவர்கள் மரண ஓலமிட்டனர்.

இந்த விபத்தால் சாலையின் ஒரு பகுதியில் போக்குவரத்து முடங்கியது. உடனடியாக சம்பவ இடத்துக்கு போலீசாரும், நெருக்கடி கால பணியாளர்களும் விரைந்து வந்தனர்.

அதற்குள், மினி பஸ்சை ஓட்டிய டிரைவர் உள்ளிட்ட 8 பேர் சம்பவ இடத்திலேயே இரத்த வெள்ளத்தில் பிணமாகினர். அவர்களில் 6 பேர் ஆண்கள், 2 பேர் பெண்கள். 4 பேர் படுகாயம் அடைந்தனர்.

நெருக்கடி கால பணியாளர்களும், போலீசாரும் படுகாயம் அடைந்தவர்களை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் மில்டன் கேனஸ், கவண்ட்ரி மற்றும் பர்மிங்ஹாமில் உள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைத்தனர்.

அவர்களில் 5வயது சிறுமி ஒருவர், ஒரு பெண், ஒரு ஆண் என 3 பேரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

விபத்தை ஏற்படுத்திய 2 கன்டெய்னர் லாரிகளின் டிரைவர்கள் ரிஸ்சார்டு மேசிராக் (வயது 31), டேவிட் வேக்ஸ்டாப் (53) ஆகியோர் உடனடியாக கைது செய்யப்பட்டனர். இவர்களில் ரிஸ்சார்டு மேசிராக் அளவு கடந்த மதுபோதையில் இருந்தது தெரிய வந்துள்ளது.

இந்த விபத்தில் பலியானவர்கள் பற்றிய உருக்கமான தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்த விபத்தில் சிக்கிய மினி பஸ்சில் சென்றவர்கள் தமிழ்நாடு, கேரளாவை சேர்ந்தவர்கள். அவர்களில் 8 பேர் பலியாகி உள்ளனர். 7பேர் தமிழ்நாட்டையும், ஒருவர் கேரளாவையும் சேர்ந்தவர்கள்.

தமிழ்நாட்டை சேர்ந்த 7 பேரில் 3 பேர் காஞ்சீபுரம் மாவட்டம், பிள்ளையார் பாளையம் மண்டப தெருவை சேர்ந்த பன்னீர்செல்வம் (63), இவரது தங்கை தமிழ்மணி (50), தங்கை கணவர் அறச்செல்வம் (60) ஆகியோர் ஆவார்கள்.

பன்னீர்செல்வத்தின் மகன் மனோரஞ்சன், லண்டனில் பிரபல ஐ.டி.நிறுவனம் ஒன்றில் வேலை செய்து வருகிறார். இவரது மனைவி சங்கீதா. இவர்கள் லண்டனில் வசித்து வருகின்றனர்.

இவர்களை பார்த்துவிட்டு, அப்படியே ஐரோப்பாவில் சுற்றுலா மேற்கொள்வதற்காக பன்னீர்செல்வம், அவரது மனைவி வள்ளி, தங்கை தமிழ்மணி, தங்கை கணவர் அறச்செல்வம் ஆகியோர் இங்கிலாந்து சென்றிருந்தனர்.

அவர்களுடன், லண்டனில் உள்ள பன்னீர்செல்வத்தின் மகன் மனோரஞ்சன், மருமகள் சங்கீதா ஆகியோரும் மினி பஸ்சில் சுற்றுலா சென்றிருந்த போதுதான் விபத்தில் சிக்கியுள்ளனர்.

வள்ளி, மனோரஞ்சன், சங்கீதா ஆகியோருக்கு லண்டன் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இவர்கள் அனைவரும் காஞ்சீபுரத்தில் உள்ள பிரபல கண் மருத்துவர் டாக்டர் ஏ.சிவகுமாரின் உறவினர்கள்.

விபத்தில் மரணம் அடைந்த பன்னீர்செல்வம், தமிழ்மணி, அறச்செல்வம், ஆகிய மூன்று பேரின் உடல்களை சொந்த ஊரான பிள்ளையார்பாளையம் கொண்டு வர மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவட்ட கலெக்டரிடம் டாக்டர் சிவகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

4 பேர் தஞ்சை மாவட்டம், கும்பகோணத்தை சேர்ந்தவர்கள் என தகவல்கள் கூறுகின்றன. மினி பஸ்சை ஓட்டி பலியான டிரைவர் பென்னி என்ற சிரியாக் ஜோசப், கேரள மாநிலத்தை சேர்ந்தவர். 15 ஆண்டுகளுக்கு முன்னர் கேரளாவில் இருந்து இங்கிலாந்துக்கு குடிபெயர்ந்து, சொந்தமாக மினி பஸ் வாங்கி அதை ஓட்டி வந்தார். அவருக்கு மனைவி, ஒரு மகள், ஒரு மகன் உள்ளனர்.

இந்த விபத்தில் சிக்கி பாதித்துள்ள அனைவருக்கும் தேவையான எல்லா உதவிகளும் செய்யப்படுகிறது என லண்டனில் உள்ள இந்திய தூதரகம் அறிவித்துள்ளது.

---


## 23ம் பக்கத்தின் தொடர்ச்சி


மூத்த சிவாச்சாரியார்கட்கு விருது வழங்கி மரியாதை செலுத்தலும் பெரியபுராணம் பாடல்கள் அடங்கிய நூல் வெளியீடும் நடைபெற்றது. மண்டபத்தில் பூமியின் தலைவர் என்ற முறையில் ஆறு. திருமுருகன் உரையாற்றினார். கம்பீரமான உருவம், சாந்தமான குரல் - ஆனால், பேச்சில் கனிவும், ஆளுமையும் இருந்தது. "கோயில்களில் சின்னமேளம் வேண்டாம். சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியைப் பேசக் கூப்பிடுங்கள்" என்று ஈழத்துக் கவிஞர் கந்தவனம் ஒரு தடவை யாழ்ப்பாணம் 'ஈழநாடு' பத்திரிகையில் எழுதியிருந்ததை திருமுருகன் தனது பேச்சில் குறிப்பிட்டார். "வேடிக்கைகள் பார்ப்பதற்காக கோயில்களுக்குப் போவதில்லை. இன்று யாழ்ப்பாண மரண வீடுகள்கூட மாறிவருகிறது. உறவுகளைக் கட்டி அணைத்து ஆறுதல் கூறும் காலம் போய், 'சோடா' உடைப்பதில் கவனம் கொள்கிறார்கள்" என்று யதார்த்தத்தை சொன்ன அவரது பாணி எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

நானும் சில இளம்பெண்களோடு பேசினேன். குருபூசையில் கலந்து கொண்ட அந்தப் பெண்கள் நாங்கள் இங்குதான் வளர்ந்தோம் என்று பெருமையோடு சொன்னார்கள். விழாவின் இடையில் சிற்றுண்டிகளும் பானமும் வழங்கப்பட்டது. மதிய போசனத்துடன் குருபூசை முடிந்தது. நிகழ்ச்சிகள் எல்லாம் நேர்த்தியாகவும், நேரத்திற்கும் ஒழுங்காவும் நடந்தது.

சிவபூமியின் கீரிமலையில் உள்ள மடத்துக்கு போயிருந்தோம். அமைதியான சூழலில் அமைந்துள்ளது. பிரயாணிகள் தங்கிப் போவதற்கு குளியல் அறையுடன் கூடிய சுத்தமான அறைகள் உள்ளன. மடத்திற்கு மேலே பெரிய கூடம் ஒன்று உள்ளது. அதில் நிரந்தரமாக உள்ள கண்காட்சியில் நம்நாட்டு பாரம்பரிய படங்கள் வைக்கப்பட்டுள்ளன. எமது இனம் *Driver* வியப்புடன் படங்களை பார்த்தார். எமக்கு கோண்டாவிலில் நடத்தப்படும் மனம், உடல்நலம் குன்றிய சிவபூமி பள்ளிக்குப் போக முடியவில்லை. என்ற மனவருத்தம்.

சிவபூமியைப் போன்ற தொண்டு நிறுவனங்கள் இருக்கும் வரை, தொன்மையும் நாகரீகமும் கொண்ட தமிழும் சைவமும் கலாச்சாரமும் அழியாது. மனிதநேயம் பத்திரமாக இருக்கும்.

**ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும்**
**தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்- (குறள்)**

இந்த வருட முற்பகுதியில் விண்ணுலகுக்கு சென்ற ஆறு. திருமுருகனைப் பெற்றெடுத்த அந்தப் பெரும் தாய்க்கு என் எழுத்துக்கள் சமர்ப்பணம்.


**SAIVA HINDU PRIEST/ MINISTER OF HINDU RELIGION WITH NO PASTORAL ROLE**

*The Shree Ghanapathy Temple, Wimbledon, UK,*

**Requires a Saiva Hindu Priest**

**(application reference SGT004)**

Further details can be found at

**www.ghanapathy.co.uk.**

**Alternatively, please contact the Temple directly via email - enquiries@ghanapathy.com or via telephone on + 44 (0)20 8542 7482.**

# மாவீரர் லெனினைப்பற்றி எஸ்.அகஸ்தியர்

**1917** இல் மாபெரும் தலைவர் லெனின் தலைமையில் ரஷ்யாவில் நடைபெற்ற புரட்சிகர ஒக்டோபர் புரட்சியின் நூற்றாண்டுவிழா உலகமெங்கும் அனுசரிக்கப்பட்டு வருகிறது. மகத்தான ஒக்டோபர் புரட்சி பற்றியும் அதனை நெறிப்படுத்திய லெனின் சாதனைகள் குறித்தும் மீளாய்வுகள்; தொடர்ந்து நடைபெற்று வந்தவண்ணமுள்ளன.

இந்நிலையில் இலங்கையில் சுதந்திரத்திற்கு பிற்பட்ட ஐம்பது ஆண்டுகால முற்போக்கு இலக்கிய வரலாற்றில் தனிப்பெரும் ஆளுமையாகத் திகழ்ந்த எஸ். அகஸ்தியர் (1926 -1995) அவர்களின் சிந்தனையில் லெனின் ஏற்படுத்திய தாக்கம் எத்தகையது என்பதைப் பற்றி இக்கட்டுரை பேசுகிறது.

எஸ். அகஸ்தியரின் பிரிய நண்பரான கலாகீர்த்தி பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்கள் அகஸ்தியர் எழுதிய 'லெனின் பாதச் சுவடுகளில்..' என்ற நூலுக்கு வழங்கிய அணிந்துரையில் பின்வருமாறு எழுதுகின்றார்:

'விளதிமீர் இலியிச் லெனினுடைய ஆளுமையிலும் அரசியல் சித்தாந்தத்திலும் மானிட நேயத்திலும் அகஸ்தியருக்கு இருந்த ஈடுபாடும் மதிப்பும் இளவயது முதல் எல்லை மீறி வளர்ந்தன. அன்னாருடைய வாழ்வில் இடம்பெற்ற சம்பவங்கள் சிலவற்றைக் கதைகளாக அவர் வடித்தார். லெனினுடைய வாழ்வையும் பணிகளையும் அடிப்படையாக வைத்துப் பிரபல சோவியத் எழுத்தாளரான சேர்கெய் அன்ரொனொவ் எழுதிய கதைகள் அகஸ்தியருக்கு அருட்டுணர்வினை அளிப்பனவாக அமைந்திருக்கலாம்.

சோவியத் நாட்டில் லெனின் முன்னெடுத்த கோட்பாடும் அவரது சாதனைகளும் யாழ்ப்பாணத்து ஆனைக்கோட்டையைச் சேர்ந்த அகஸ்தியர் என்ற இளைஞரின் கவனத்தை ஈர்த்தனவென்றால் அதற்குக் காரணம் அகஸ்தியரது சமுதாயப் பிரக்ஞையும், மானிட நேயமும் என்றே கூறவேண்டும். தன்னைச் சுற்றிக் காணப்பட்ட ஏற்றத்தாழ்வுகளையும் சமூகக் கொடுமைகளையும் 'வலியோர் சிலர் எளியோர் தமை வதையே புரி' ( பாரதிதாசன்)யும் நிலையினையும் கண்டு அகஸ்தியர் மனங்கொதித்தார். 'அன்பீனும் ஆர்வமுடைமை' என்றார் வள்ளுவர். அன்பின் காரணமாக மக்கள் விமோசனத்தில் ஆர்வம் கொண்ட அகஸ்தியர், சமுதாயத்தை மாற்றியமைக்க முடியும் என்ற நம்பிக்கையை லெனினுடைய அனுபவத்திலிருந்து பெற்ற நிலையில்,






**'புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம் புனிதமோ டதை எங்கள் உயிரென்று காப்போம்' (பாரதிதாசன்)**

என்னும் வேட்கை மீதுரப் பெற்றார். அகஸ்தியரின் இறுதி மூச்சுவரை அந்த வேட்கை தணியவேயில்லை'

மார்க்சிய கோட்பாட்டினை சோவியத் ரஷ்யாவில் நடைமுறைப்படுத்திய மகத்தான தலைவர் லெனின்மீது என் தந்தை அகஸ்தியர் கொண்டிருந்த அன்பும் மதிப்பும் அளப்பரியதாகும். லெனின் நூற்றாண்டு விழாவையொட்டி 1970 களில் எழுதப்பட்ட'லெனின் பாதச் சுவடுகளில்...' என்ற விவரணச் சித்திரங்கள் என் தந்தையின் மறைவின் பின்னரேயே நூலாக்கம் பெற்றது. ரஷ்யாவில் இடம்பெற்ற ஒக்டோபர் புரட்சி அவருக்கு ஆதர்சமான தொழிலாள வர்க்கப் புரட்சியாகத் திகழ்ந்தது.

மனித வரலாற்றில் மார்க்சிய கோட்பாட்டின் அடிப்படையில் கருத்துருவாக்கம் பெற்று, அந்தத் திட்டத்தினை அடிநாதமாகக் கொண்டு எழுந்த முதல் புரட்சி ஒக்டோபர் புரட்சியே என்று அகஸ்தியர் கருதினார். இந்தப்புரட்சியின் அடிநாதமான கோட்பாட்டுப் புரிந்துணர்வுதான் அதனுடைய பேரெழுச்சிக்கும், அது உற்பவித்த பிரமாண்டமான உற்சாகத்திற்கும், உலகெங்கும் ஏற்பட்ட புரட்சிகளின் தாக்கத்திற்கும், முதலாளித்துவத்தின் இருப்பையே அச்சுறுத்திய வீச்சுக்கும் காரணமாகும் என்பதை அகஸ்தியர் அவர்கள் தனது 'லெனின் பாதச் சுவடுகளில்..' என்ற நூலில் நிறுவுகிறார்.

ஈழத்தின முற்போக்கு இலக்கிய பிதாமகரான எஸ். அகஸ்தியர் அவர்களே லெனின் வாழ்க்கை வரலாற்றை விவரணச் சித்திரங்களாக முதலில் எழுதிய சித்தாந்தவாதியாவார். லெனினுடைய கல்விச் சித்தாந்தம், லெனினினுடைய அரசியல் குறித்து ஈழத்து எழுத்தாளர்கள் எழுதி உள்ளார்கள். ஆயினும் லெனின் வரலாற்றை ஈழத்தில் வடித்தவர் எஸ் அகஸ்தியரே ஆவார். இந்த நூலில் லெனினுடைய இளமை வாழ்க்கை, அவரின் கூரிய மதிநுட்பம், திடசங்கற்பம், கண்டிப்பு என்பதனைத் தெளிவாக வெளிப்படுத்தும் அதேவேளையில், அவரிடம் குடியிருந்த உன்னத மனிதாபிமானம், தேசப்பற்று, மார்க்சிய நேசம், தியாக உணர்வு, எளிமை ஆகியவற்றை அகஸ்தியர் தனது தேர்ந்த நடையில் சித்தரித்துச் செல்கிறார்.

வறுமையில் வாழ்ந்த ரஷ்யத் தொழிலாளர்கள்மீது அவர் கொண்டிருந்த நேசம், அரசநிர்வாக கெடுபிடிகளுக்குள்ளும் அவர்களுக்கு உதவ முயன்ற அருங்குணம் ஆகியவற்றையெல்லாம் தெளிவுபடுத்துகிறார். மாக்ஸிம் கார்க்கி மீது அகஸ்தியருக்கு இருந்த ஆழ்ந்த ஈடுபாடு காரணமாக அவருக்கும் லெனினுக்கும் இடையில் ஒரு சந்திப்பை அகஸ்தியர் இந்த நூலிலே பதிவு செய்கிறார்.

தமிழில் மாக்ஸிம் கார்க்கி நூல்கள் முதலில் மொழியாக்கம் செய்யப்பட்டபோது, லெனின் நினைவுகள் பற்றிய அவரின் பிரசுரமே முதலில் வெளியானது. சிலர் கூறுவதுபோல, அக்டோபர் புரட்சி அதற்கு முன்னர் பிரான்சிலோ, இங்கிலாந்திலோநடைபெற்ற புரட்சிகள்போல திடீரெனத் தோன்றிவிடவில்லை. பிளெக்கனோவ், லெனின், ரொஸ்க்கி போன்ற பல்வேறு அறிஞர்களின் காரசாரமான விவாதங்களின்அடிப்படையிலேயே மகத்தான அக்டோபர் புரட்சியின் கருத்துருவாக்கம் உருவாகியது.

ரஷ்யாவின் சமூகப் புரட்சியின் சாத்தியம்பற்றி 1881 ஆம் ஆண்டிலேயே காரல்மார்க்ஸ்ஆரூடம் கூறியிருந்தார். 1905 ஆம் ஆண்டு ரஷ்யாவில் ஏற்பட்ட புரட்சிக்கு முன்னரேயே, புரட்சிகர வளர்ச்சியின் மையம் ரஷ்யாவை நோக்கி நகர்ந்துவிட்டது என்று லெனின் உணர்ந்திருந்தார். ரஷ்யப் புரட்சியை பின்பற்றிச் செல்வதற்கான எந்த முன்மாதிரியும் மேற்கு நாடுகளில் அப்போது இருக்கவில்லை. ஏகாதிபத்திய கண்ணியில் ரஷ்யா மிகவும்பலவீனமான கண்ணி என்றும் உலகளாவிய முதலாளித்துவ ஒழுங்கினை ஊடறுத்து இலகுவாகவும், சிறப்பாகவும் செயற்படுத்த இது உதவும் என்று லெனின் கருதினார்.

அக்காலத்தில் சோவியத் புரட்சி குறித்து தமிழில் வெளியான அனைத்து நூல்களும் ரஷ்ய எழுத்தாளர்களின் சிறந்த படைப்புகள் அனைத்தும் எங்கள் வீட்டில் குவிந்து கிடந்தகாட்சியை நான் நினைத்துப்பார்க்கிறேன். 1983 கலவரத்தின்போது அவர் சேகரித்துவைத்திருந்த பொக்கிஷம்போன்ற நூல்கள் அனைத்துமே தீக்கிரையானது துயரநினைவுகளாகின்றது. சிறுகதைகள், விமர்சனக் கட்டுரைகள், நாவல்கள், குறுநாவல்கள், விவரணச் சித்திரங்கள் என்ற அவரது படைப்புகள் அனைத்திலுமே மார்க்ஸிய நோக்கு இழையோடியது.

மாவீரர் லெனினை ஆத்மார்த்தமாக நேசித்த என் தந்தையின் லெனின் பற்றிய வரலாறு சோவியத் புரட்சிமீது அவர் கொண்டிருந்த பெரும் மரியாதையை வெளிப்படுத்துவதாகும்.

## இலங்கை கடற்படை புதிய தளபதி தமிழர்



இலங்கை கடற்படையின் 21வது புதிய தளபதியாக ரியல் அட்மிரல் ட்ரெவிஸ் சின்னையா நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவால் நியமிக்கப்பட்டார். இலங்கை கடற்படையின் கிழக்குப் பிராந்திய கட்டளைத் தளபதியாக கடமையாற்றியவர் சின்னையா. கண்டியை சொந்த இடமாகக் கொண்ட இவர், கண்டிறினிற்றி கல்லூரியில் கல்வி கற்றார்.



சறோஜினி சந்திரகோபால்

# அர்ப்பணிப்போடு 40ஆண்டு வரலாறு பதித்த
# பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கம்

அந்நிய மொழிகளின் ஆளுமையில். உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்கள் தம் மதம், மொழி கலாச்சார விழுமியங்களைப் பேணிப் பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பதன் எதிரொலியே தொடர்ச்சியாக வளர்ந்துகொண்டும்,புதிதாகத் தோன்றிக் கொண்டும், இருக்கும் ஆலயங்கள், சமயஸ்தாபனங்கள், பாடசாலைகள், சமூக நிலையங்கள்.

இந்த வழியில் சிவ நெறியும், செந்தமிழும் தளைத்தோங்க சளைக்காது உழைத்து நிலைத்து நிற்கும் பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கம்; அர்ப்பணிப்போடு ஆற்றும் சேவைக்கு அகவை 40. இளமை குன்றாது வளமாக வளர்ந்து வரும் இச்சங்கம், நாற்பதாவது ஆண்டினைச் சென்றடைய பதம் பதித்த பாதைகள், வளர்ச்சியை முன் தள்ளி பின் நிற்கும் வரலாறு எத்தகையது? அதன் பாதச் சுவடுகள் பட்ட இடங்கள் பண்படுத்தப்பட்டனவா? பயனடைந்தனவா?

இச்சங்கத்தின் பிறப்பு முதல் சங்கத்துடன் பயணிப்பவரும் இச்சங்க நிகழ்கால அறங்காவலர்களில் ஒருவருமான திரு. வ.இ.இராமநாதன் அவர்கள் கதைகதையாகச் சொன்ன வரலாறு மிகவும் பெறுமதியானது. நாற்பது ஆண்டினை எட்டிய இச்சங்கத்தின் தாய்ச்சங்கம் இலங்கையில் அறுபத்திநான்கு அகவையைத் தாண்டி வெற்றி நடை போடும் கொழும்பு கொம்பனித்தெருவில் இயங்கிவரும் கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கமே.

1964 ஆம் ஆண்டு முதல் கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தின் பொருளாளர் பதவியிலும் பின்னர் நால்வர் பாடசாலை ஆசிரியராகவும், நால்வர் நெறிமலர் இணையாசிரியராகவும், தொண்டரணித் தலைவராகவும் பல பதவிகளை ஏற்று தொடர்ந்து பத்து வருட காலங்களாக இச்சங்கத்துடன் இணைந்து பணியாற்றிய பெருமை திரு. வ.இ.இராமநாதன் அவர்களுக்கேயுரியது.

1975இல் தன் மூத்த சகோதரரின் அழைப்பின் பேரில் மேற்படிப்பிற்காக இலண்டன் வர திரு.இராமநாதன் அவர்கள் தயாரானபோது, அவர் பிரிவினைத் தாய்ச்சங்கம் மிக வேதனையுடனேயே ஏற்றுக்கொண்டது. அதே நேரத்தில் தமது சங்கத்தின் கிளைச்சங்கம் ஒன்றினை பிரித்தானியாவில் நிறுவவேண்டுமென்ற வேண்டுகோளையும் தாய்ச்சங்கம் விடுக்கத் தவறவில்லை. 14 வயதிலிருந்தே இறை பணியைத் தன் ஜீவ நாடியாகக் கொண்டு வாழ்ந்து வந்த திரு.இராமநாதன் அவர்களது மனதில் தாய்ச்சங்கத்தின் வேண்டுகோள் கல் மேல் எழுத்தாகப் பதிந்தது. தாய் மண்ணிலிருந்து இவரைச் சுமந்து வந்த விமானத்தின் வேகத்தை மிஞ்சியது, சமயத்தொண்டினை விட்டு வெளியேறிய வேதனை மிக்க அவரது ஆத்மாவின் அலறல்.

'மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்' எனும் கந்தபுராண அடிகளைத் தனது தாயகமந்திரமாகக் கொண்ட திரு.இராமநாதன் அவர்கள், 1977ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தற்போதைய பிரித்தானிய சைவமுன்னேற்றச் சங்கத் தலைவர் திரு.சதாசிவம் ஆனந்ததியாகர், மற்றும் தனது சகோதரரான இ.பத்மநாதன், ஆகியோருடன் இணைந்து இல.46,ஸ்டாவ் ஹவுசஸ் றோட், றண்வெல், விக்போட், எசெக்ஸ் எனும் தனது வீட்டு முகவரியிலேயே சமய வழிபாடுகளை சிறிய அளவில் செயற்படுத்தத் தொடங்கினார். அதே வேளையில் தனது ஒவ்வொரு செயற்பாடுகளையும் தாய்ச்சங்கத்தின் அனுமதியுடனேயே நெறிப்படுத்தினார். 'முயற்சி திருவினையாக்கும்' எனும் வரிகளுக்கமைய, 21.08.1977இல் தாய்ச்சங்கததின்; தலைவியான டாக்டர். (திருமதி) இந்திரா சிவயோகம் அவர்களையே தலைவியாகக் கொண்டு, கௌரவ பொதுச் செயலாளராக வ.இ.இராமநாதன் அவர்களும், கௌரவ பொதுப் பொருளாளராக திரு. ச.ஆனந்ததியாகர் அவர்களும் மற்றும் திரு.கு.சிவபாலன், திரு.இ.பத்மநாதன், செல்வி ஞானமணி; சிவஞானம் (திருமதி.






ஞா.யோகராஜா)ஆகிய ஆறு அங்கத்தவர்கள் கொண்ட முதற் செயற்குழு உருவாக்கப்பட்டு, பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கம் உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. சங்கத்தின் இரண்டாவது தலைவராகப் பதவி ஏற்றவர் டாக்டர்.சீ.நவரட்ணம் அவர்கள் ஆவார். 1978ம் ஆண்டு முதல் 1982ம் ஆண்டு வரையான இவரது பதவிக்காலத்தில், தாய்ச்சங்கத்தில் பணிபுரிந்த திரு.வ.இ. லோகநாதன் மற்றும் திரு. சு. லிங்கேஸ்வரன் ஆகிய இருவரும் நிர்வாக சபையில் இணைந்து சங்கத்தை மேலும் வலுப்பெறச் செய்தனர். ஆரம்ப காலத்தில் பூஜைகள், பஜனைகள், ஆண்டு விழாக்கள் அனைத்துமே டாக்டர் அவர்களது இல்லத்திலேயே இடம் பெற்று வந்ததோடு மட்டுமன்றி, சங்க ஆதரவாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவும் டாக்டர் அவர்களது ஒத்துழைப்பும், ஆதரவும் அதிக அளவில் வழிகோலியது. அதே நேரத்தில் சில மாணவர்கட்கு இங்கு தமிழ் மொழிக் கல்வியும் போதிக்கப்பட்டது. மாணவர் எண்ணிக்கை அதிகரிக்கவே இத் தமிழ்ப் பாடசாலை 'பிலரிக்கே' எனும் நகரிலுள்ள ஒரு பாடசாலைக்கு மாற்றப்பட்டு வாரந்தோறும் தமிழ் வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. ஆரம்ப காலங்களில் டாக்டர் சீ.நவரட்ணம் அவர்களது இல்லம் சங்க நிகழ்வுகளுக்கும், சங்க வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைந்ததை சங்கம் இன்றும் நன்றியுடன் நினைவு கூருகின்றது.

டாக்டர் நவரட்ணம் அவர்களைத் தொடர்ந்து 1982ம் ஆண்டு முதல் 1985ம் ஆண்டுவரை சங்கத்தின் மூன்றாவது தலைவராக டாக்டர் இ.தயாபரன் அவர்கள் நியமனமானார். தொடர்ச்சியான வளர்ச்சியும் நிறைவான அங்கத்தவர் எண்ணிக்கையும் சங்கத்தின் பெருமையை ஒரு படி மேலுயர்த்தியதின் சான்றாக இவரது பதவிக்காலத்தில், 26.06.1985ம் ஆண்டில், பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கம் ஒரு அங்கீகரிக்கப்பட்ட 'தர்ம ஸ்தாபனம்'ஆக பதிவு செய்யப்பட்டது. இக் காலகட்டத்தில் சட்டத்தரணி திரு.கு.சிதம்பரப்பிள்ளை, டாக்டர் வை.பாலசேகரம் ஆகியோர் சங்கத்துடன் இணைந்தனர்.சங்கத்தின் நான்காவது தலைவராக டாக்டர். வை.பாலசேகரம் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். 1985ம் ஆண்டு முதல் 1988ம் ஆண்டுக்கிடைப்பட்ட இவரது பதவிக் காலத்தில் சங்கத்தின சமூக சேவைத்துறையில் மெச்சத்தக்க முன்னேற்றங்கள் இடம் பெற்றன. தாய்மண்ணைப் பிரிந்து புலம் பெயர்ந்து வந்துள்ள மூத்தோர் மன நலன்தனைக் கருத்திற் கொண்டு 'மூத்தோர் அமைப்பு' ஒன்றினை உருவகிக்க முன் நின்ற பெருமை இவரைச்சாரும். 29வது வருடத்தில் இன்று ஏறு போல் பீறு நடை போடும் இந்த 'மூத்தோர் அமைப்பு', அமரர் டாக்டர் அவர்களை ஒரு கலங்கரை விளக்காக என்றும் நினைவு கூருவார்கள் என்பதில் எதுவித மாற்றுக் கருத்தும் இருக்கமுடியாது. டாக்டர் பாலசேகரம் அவர்களது தலைமைத்துவத்தின் கீழ்,சங்கத்தின் 10வது ஆண்டு விழாவில் ஆர்ச்வே, உயர் வாசற்குன்று முருகன் ஆலய ஸ்தாபகர் அமரர் திரு.சோ. சபாபதிப்பிள்ளை அவர்களுக்கு 'சைவ நெறிக்காவலர்' எனும் பட்டத்தை வழங்கியதன் மூலம், பிரித்தானியாவில் சைவ சமயத்திற்கு அரும்பெருந் தொண்டாற்றிய ஒரு புனித சீலருக்குச் சிறப்புப் பட்டம் அளித்த முதற்சங்கம் என்ற பெருமையை சைவ முன்னேற்றச் சங்கம் தட்டிக்கொண்டது. இவரது மறைவுக்குப் பின்னர் இவர் ஆற்றிய அந்திமக்; கிரியைகள் போன்ற சடங்குகளை, சங்க அன்பர்களில் ஒருவரான திரு. வி.செல்லத்துரை அவர்கள் பொறுப்பேற்றுச் சங்கத்துடன் இணைந்து செயலாற்றினார். திரு.இ.முருகானந்தன், திரு.வ.இ.இராமநாதன் இருவரும் இக்கிரியைகள் சைவர்களின் முறைப்படி செவ்வனே தொடரத் துணை நின்று செயலாற்றினர். இதன் பின்னர், இலங்கையிலிருந்து சிவ ஸ்ரீவைத்தியநாதக்குருக்கள் அவர்கள் வருவிக்கப்பட்டார். சங்கத்தின் முதற் சைவக் குருக்களான இவரது வருகைக்குப் பின்னர், இந்நாட்டில் மரண சடங்குகள் சைவ மரபுப்படி இவராலேயே கைக்கொள்ளப்பட்டன.அக்கால கட்டத்தில் மாதந்தோறும் தைப்பொங்கல், பஜனை, குருபூசைகள், நவராத்திரி விழா என சமய சம்பந்தப்பட்ட நிகழ்வுகள் அனைத்தும் அங்கத்தவர்களின் இல்லங்களிலேயே நடைமுறைப்படுத்தப்பட்டன. இவரது பதவிக் காலத்தில் 1988ம்

ஆண்டு விஜயதசமியன்று ‘பிலறிக்கே’ எனும் இடத்திலிருந்த தமிழ்ப் பாடசாலை, மனோர்பார்க் தமிழ் இல்லத்திற்கு இடம் பெயர்ந்தது. மாணவர் எண்ணிக்கை அதிகரிக்கவே, ஆசிரியை திருமதி. சொர்ணமலர் முருகையா அவர்களது விடா முயற்சியின் பலனாக, நால்வர் தமிழ்க் கலை நிலையம் இன்றைய லிட்டில் இல்பேர்ட் பாடசாலையில் நிரந்தரமாகக் குடிபுகுந்தது. சங்க வரலாற்றில் ஒரு அங்கமாக மிளிரும் நால்வர் தமிழ்க் கலை நிலையம் திருமதி முருகையா அவர்களை நெஞ்சம் நிறைந்த நன்றிகளுடன் வாழ்த்தி நிற்கின்றது.

சங்கத்தின் ஐந்தாவது தலைவராக 1988ம் ஆண்டு முதல் 1995ம் ஆண்டு வரை சட்டத்தரணி கு.சிதம்பரப்பிள்ளை அவர்கள் பதவியில் இருந்தார். இவரது பதவிக் காலத்தில், 02.07.1989ம் ஆண்டு சிறப்புக் கூட்டத்தில் சங்கத்துக்கெனச் சொந்தமாக ஒரு பணிமனை வாங்க முடிவெடுக்கப்பட்டது. 1995ம் ஆண்டில், இல.2, சலிஸ்பரி றோட், மனோர்பார்க்கில் உள்ள தற்போதைய மண்டபம் விற்பனைக்கு இருப்பதை சங்க அங்கத்தவர் திருமதி மாதினி சிறீஸ்கந்தராஜா அவர்கள் வாயிலாக அறிந்த சங்க நிர்வாகக் குழுவினர் விரைந்து செயல்பட்டதின் பலனாக, இன்றைய ஆலயம் அன்று மண்டபமாகச் சங்கத்தின் சொத்தானது. சைவ சமயத்தவர்கள் நிறைவாகவே வாழ்ந்தஇந்நாட்டில், ஒரு ஆன்மீகப் பத்திரிகை இல்லாப் பெருங்குறையைத் தீர்க்குமுகமாக 17.01.1993இல் ‘கலசம்’ ஆன்மீக இதழ் வெளியிடப்பட்டது. சம காலத்தில் 86வது காலாண்டு இதழாக உயிர்த்து நிற்கும் ‘கலசம்’ பிரித்தானியாவில் வெளியிடப்பட்ட முதலாவது ஆன்மீக இதழ் எனும் பெருமைக்குரியது. இந்தச் சஞ்சிகை சட்டத்தரணி திரு.கு.சிதம்பரப்பிள்ளை அவர்கள் பதவிக்காலத்தில் வெளியிடப்பட்டபோது அச்சஞ்சிகையின் முதல் இணை ஆசிரியர்களாக சங்க அங்கத்தவர் திரு.மு.நற்குணதயாளனும், இன்றைய சங்கத்தலைவர் திரு.ச.. ஆனந்ததியாகர் அவர்களும் பணியாற்றினர். 1994இல் நால்வர் தமிழ்க் கலை நிலையத்தின் முதல் கலை வகுப்பு வீணை ஆசிரியையாக திருமதி. செந்தில்செல்வி வாமானந்தன் அவர்கள் சங்கத்தில் இணைந்தார். சுழலும் காலச்சக்கரத்துடன் பிணைந்து புதுப்பொலிவுடன் நிமிர்ந்தது பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கம்.

1995ம் ஆண்டு முதல் 1998ம் ஆண்டுவரை சங்கத்தின் ஆறாவது தலைவராகப் பதவியேற்றார் சங்கத்தின் ஆரம்ப கால உறுப்பினர்களில் ஒருவரான திரு.இ.பத்மநாதன் அவர்கள். ஆலய மண்டபத்தில் சமயப்பணிகளை மேற்கொள்ளுவதற்கான அனுமதியை வழங்க நகர சபை அலுவலகம் தாமதித்ததினால், ஏறத்தாழ மூன்று வருடங்கள் மண்டபத்தில் சமயப்பணிகளை மேற்கொள்ள முடியாத நிலை இருந்தது. அவ்வாண்டில் கௌரவ கட்டடப் பொதுச் செயலாளராகப் பணியாற்றிய திரு.வி.நாகரட்ணம் அவர்களது விடா முயற்சியின் பயனாக, நகரசபை அனுமதி கிடைக்கப்பெற்று ஆலய மண்டபம் திருத்தி அமைக்கப்பட்டு, 28.06.1998இல் சங்க மண்டபம் திறந்து வைக்கப்பட்டது. 1997இல் திரு.பத்மநாதன் அவர்கள் தலைமைத்துவத்தின் கீழ் ஈஸ்ற்காம் நகர மண்டபத்தில் சங்கத்தின் 20ஆவது ஆண்டு விழா சங்க அங்கத்தவர்கள், குடும்பத்தினர், ஆதரவாளர்கள் அனைவருடனும் வெகு சிறப்பாக நடைபெற்றது. அதே காலப்பகுதியில், கலை வகுப்புக்களை நடத்துவதற்கான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும்,தமிழ்ப் பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கும் தேசீய நிதி உதவி கிடைக்கப்பெற்றது. தொடர்ந்து, 1998ம் ஆண்டு முதல் 2001ம் ஆண்டுவரையிலான காலப்பகுதியில் திரு. வி.நாகரட்ணம் அவர்கள் சங்கத்தின் ஏழாவது தலைவராகப் பதவியில் அமர்ந்தார். சங்கத்தின் வளர்ச்சிக்காக நிதி திரட்டும் முயற்சியில் இவர் மிக ஆர்வமுடன் செயற்பட்டார். பல கலை நிகழ்வுகளை நடத்தியது மட்டுமன்றி, ‘இசை இன்பம்’ எனும் பெயரில் விழா ஒன்றினை ஆரம்பித்து அதனை வருடந்தோறும் நடாத்தி நிதி திரட்டிய பெருமையும் இவரையே சாரும். ஆறு தலைவர்களின் ஆளுமையின் கீழ் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்த சங்கம், தனது கால் நூற்றாண்டை அமைதியாக அண்மித்துக் கொண்டிருந்தது.

கற்பனைக்கு அப்பாற்பட்ட கற்பகவிருட்சமாக வெள்ளி விழாவிற்குத் தயாரானது சங்கம். 2001ம் ஆண்டு முதல் 2003ம் ஆண்டுவரைக்கான எட்டாவது தலைமைத்துவம், இச்சங்கத்தின் பிதாமகன் எனும் தானத்திற்குத் தகுதிபெற்ற, சைவமுன்னேற்றச்சங்;கத்திற்கு வித்திட்ட சிறப்புக்குரியவர் திரு. வ.இ.இராமநாதன் அவர்களிடம் சேர்ந்தது. 31.08.2002 அன்று, மாலை 2 மணிக்கே, சங்க அங்கத்தவர்கள், குடும்பத்தினர், ஆதரவாளர்கள் என ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு மண்டபம் நிறைந்து ததும்பியது. சமய குரவர் நால்வர் திருவுருவங்கள் மற்றும் பன்னிருதிருமுறைகளும் திருமுறை பாராயணத்துடன் பவனியாக வோல்த்தம்ஸ்ரோ அசெம்ப்ளி ஹோலிற்கு எடுத்துச் செல்லப்பட்டுக்; கோலாகலமாக நடந்தேறியது சங்கத்தின் வெள்ளிவிழா. சிறப்பு நிகழ்ச்சியாக நான்கு பிரிவாக நடத்தப்பட்ட மாணவர்களது பேச்சுப்போட்டியில், ஒவ்வொரு பிரிவிலும்வெற்றிபெற்றமுதல் மூன்று மாணவர்களுக்குப் பரிசாக தங்கப்பதக்கங்கள்; வெள்ளிவிழாவன்று வழங்கப்பட்டன. வெள்ளி விழா ஆண்டில் ‘தங்கத்திட்டம்’ எனும் பெயருடன் சிறப்புத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு, தாயகப் போர்ச் சூழலில் சிக்கி இருள் சூழ்ந்த எதிர்காலத்துடன் போராடிக்கொண்டு, தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லம், மட்டக்களப்பு மங்கையர்க்கரசியார் இல்லம், திருகோணமலை அன்பு இல்லம் ஆகிய இல்லங்களில் வாழ்ந்துவந்த 25 இளம் பெண்களுக்குத் தலா ஐந்து தங்கப் பவுண் நகைகள் நன்கொடையாக வழங்கப்பட்டன. அது மட்டுமன்றி, மானிப்பாய் விழிப்புல வலுவிழந்தோர் இல்லத்திலும் முல்லைத்தீவு இனிய வாழ்வு இல்லத்திலும் வாழ்ந்த கண் பார்வை இழந்தோருக்கு 25 பிறெயில் மெசின்களை வாங்கி உதவிய





**சங்கத்தின் 40 ஆண்டு கால வரலாற்றில், வருடாந்தப் பொதுக் கூட்டங்களில் 25 ஆட்சிக் குழு உறுப்பினர்களும் போட்டி இன்றி, தேர்தல் இன்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர். இந்நாட்டில் வேறு எந்த ஒரு சங்கமும் கடைப்பிடிக்காத இந்த வழிமுறை ஏனைய சங்கங்களுக்கு ஒரு முன்மாதிரியாகவும், எடுத்துக்காட்டாகவும் அமைகின்றது.**

கருணை மிக்க செயலும் இந்த வெள்ளி விழா ஆண்டிலேயே இடம் பெற்றது.இதே 2001இல், பெரிய புராண தொடர் சொற்பொழிவு தொடங்கப்பட்டு, இன்று வரை நடைபெற்றுவருகிறது. வெள்ளி விழாவன்று வெளியிடப்பட்ட ‘நால்வர் நெறி’ எனும் மலரினை உருவாக்கிய பெருமை, கௌரவ ஆசிரியர் அமரர் மு.சிவராசா அவர்களையே சாரும். அவரது கடின உழைப்பினை பாராட்டுவதில் சங்கம் பெருமிதமடைகின்றது.

வெள்ளிவிழாவினைத் தொடர்ந்து, சங்கத்தின் ஒன்பதாவது தலைவராக 2003ம் ஆண்டு முதல் 2004ம் ஆண்டு வரை திரு. து. கனகசபை அவர்கள் பதவி ஏற்றார். இவர் சங்கத்தின் மூத்த உறுப்பினர்களில் ஒருவர் மட்டுமன்றி, சங்கத்தில் தொடர்ந்து பல பதவிகளை வகித்த பெருமைக்குமுரியவர். 2004ம் ஆண்டு மார்கழி மாதத்தில் நம் தாயகத்தில் கோரத்தாண்டவமாடிய சுனாமி அனர்த்தத்தின் போது, தாயக உறவுகளுக்கான நிவாரண நிதி திரட்டுவதில் முன்னின்று உழைத்த பெருந்தகை இவர். இவரது பதவிக்காலம் ஓராண்டேயாயினும் இவரது சேவை வரையறையற்றது.2004ம் ஆண்டு முதல் 2005ம் ஆண்டு வரை சங்கத்தின் ;பத்தாவது தலைவர் பதவியினை திரு.எஸ்.ஆர். பசுபதி ஐயா அவர்கள் பொறுப்பேற்றார். இவரது ஒரு வருடப் பதவிக் காலத்தில், என்றும் உதவிக் கரத்துடன் சமூக சேவையில் முன் நிற்கும் யோகா நிலையம் சங்க வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்டது. மட்டக்களப்பு கல்முனையில் ஆதரவற்ற குழந்தைகட்கு ‘நால்வர் கோட்டம்’ எனும் மண்டபம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. எங்கெல்லாம் அழு குரல் கேட்கின்றதோ அங்கெல்லாம் அனாதை இரட்சகர்களாக ஆஜராகிவரும் யோகா நிலையத்தினரின் சேவை போற்றுதற்குரியது. இந்நிலையத்தின் வளர்ச்சிக்குப் பின்னால் திரு.சிவ அசோகன் மற்றும் டாக்டர். ந. நவநீதராஜா இருவரினதும் அயரா உழைப்பு இலை மறை காயாக இருப்பது மறுக்க முடியாத உண்மை.

சங்கத்தின் 29 வருட கால வளர்ச்சியில் ;பதினொராவது தலைவராக 2005ம் ஆண்டு முதல் 2009ம் ஆண்டுவரை பதவி ஏற்றவர் திரு.சூரிப்பிள்ளை பாலசிங்கம் அவர்கள். யோகா நிலையத்தின் பயிற்சி பட்டறை வலுப்பெற வேண்டுமென்பதில் உற்சாகமாகச் செயல்பட்ட சிறப்புக்குரியவர். இவரது நான்கு வருட பதவிக் காலத்தில், இலண்டன் சைவ முன்னேற்றச் சங்க ஆட்சிக் குழுவினரினதும், பக்தகோடிகளினதும் நெஞ்சமெனும் பூங்காவில் நெடு நாட்களாக அரும்பாக இருந்த புனித மலர,; புத்தம் புது இதழ் விரித்து பூவாக மலர்ந்த நாள். ஆமாம, 2008ம் ஆண்டு ஆனித் திங்களில், ஆலய மண்டபத்தில் நடைமுறையிலிருந்த சுவாமிப்பட வழிபாட்டு முறை, ஆலய மேல் மாடியில் ஒரு புதிய ஆலயமாக உருப்பெற்றது. ஆலயத்தில் புனிதமான ஸ்ரீசிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரர் குடி புகுந்து அருள் பாலித்தார். அன்று முதல் நித்திய பூஜை மற்றும் அனைத்து விழாக்களும் ஆலயத்தில் இடம் பெற்றன. ஆலயத்தின் முதலாவது மஹாகும்பாபிசேகம் நடைபெற்ற காலத்தில் தலைவராக இருந்த பெருமை திரு.பாலசிங்கம் அவர்களையே சாரும்.

சங்கத்தின் 33வது வருடத்தின் பன்னிரண்டாவது தலைவர் என்ற பெருமையுடன் ;2009ம் ஆண்டு முதல் 2013ம் ஆண்டு வரை பதவியில் இருந்தவர் திரு.வி.செ.வாமானந்தன் அவர்கள். மூத்தோர் ஆரோக்கிய வாழ்வில் மிகவும் அக்கறையுடன் செயல்பட்ட இவர், வாரந்தோறும் ஒரு மருத்துவர் அல்லது உடல் நலம் சம்பந்தப்பட்ட துறைகளில் பயிற்சி பெற்ற ஒருவரை அழைப்பித்து அவர்கள் மூலம் மூத்தோருக்கு ஆரோக்கிய வாழ்வின் இன்றியமையாமை பற்றி அறிவுறுத்தி அவர்கள் மன மகிழ்ச்சியுடன் வாழ வழி வகுத்துக் கொடுத்தவர். இவரது காலத்தில்; மாணவர்களுக்கான சைவ சமய, தேவாரப் பரீட்சைகள் நடாத்தப்பட்டு சிறார்கள் ஊக்கப்படுத்தப்பட்டனர். இவர் தற்பொழுது சங்கத்தின் வெளிநாட்டுத் துறையுடன் இணைந்து செயலாற்றி வருகின்றார். ‘அரங்கேறிய அற்புதங்கள்’ என்ற கலை நிகழ்ச்சி மூலம் அரங்கேற்றம் செய்த இளம் கலைஞர்களை மீண்டும் மேடையேற்றி சங்கம் உற்சாகப் படுத்திய காலத்தில் தலைவராக இருந்த பெருமைக்குரியவர்.

சங்கத்தின் 37வது ஆண்டில் பதின்மூன்றாவது தலைவர் பதவியை ஏற்று, 2013ம் ஆண்டு முதல் இன்று வரை சீரோடும் சிறப்போடும் சங்கத்தை வழி நடத்தி வரும் சிறப்புக்குரியவர் திரு.சதாசிவம் ஆனந்ததியாகர் அவர்கள். சைவ சமயம், தமிழ் மொழி இரண்டிலும் நிறைவான அறிவும் பற்றும் கொண்ட இவர், சைவ முன்னேற்றச் சங்கம் பிரித்தானியாவில் துளிர்விட, வித்திட்ட ஆரம்பகாலக் காரணகர்த்தாக்களில்; ஒருவர். தாய் மண்ணில் சைவமும் தமிழும் தளைத்தோங்க பணிபுரியும் தாய்ச்சங்கத்தில் இணைந்து வளர்ந்து பணிபுரிந்தவர். 1988ம் ஆண்டு முதல் ‘நால்வர்தமிழ்க் கலை நிலையம்’ இவரது தலைமையின் கீழ் நடைபெற்று வருகின்றது. சம காலத்தில் ஆலயத்தில் தொடர்ச்சியாக ஆன்மீக சொற்பொழிவுகள், சைவசமய பாட வகுப்புக்கள், சைவ சித்தாந்தம், திருமந்திர வகுப்புக்கள் நடைபெற ஆதரவளித்து வருகின்றார். சிதம்பரேஸ்வரர் ஆலய விஸ்தரிப்பு வேலைகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவதுடன், தாய் மண்ணிலும், வேற்று மண்ணிலும் அல்லலுறும் மக்களுக்கு உதவுவதில் யோகா நிலையத்துக்கும் ஆதரவாகச் செயல்பட்டு வருகிறார்.

சங்கத்தின் நிழலில் வளரும் ‘மூத்தோர் அமைப்பு’ தாம் பிறந்து வளர்ந்த தாய் மண்ணின் துயர் களைவதில் மிகச் சுதந்திரமாகச் செயற்படுவது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் சங்க மண்டபத்தில் கூடி, ஆரோக்கிய வாழ்விற்குத் தேவையான உடல்,மன, மருத்துவ, பொருளாதார, சட்ட. ஆன்மீக கலந்துரையாடல்கள், மற்றும் கோடை காலச் சுற்றுலா, குருபூசைகள், பண்ணிசை, நாடக நடனப் பயிற்சிகள்,

- தொடர்ச்சி அடுத்த பக்கத்தில்

*- முந்தைய பக்கத்தின் தொடர்ச்சி*

சங்க ஆலய திருவிழாக்கள், மூத்தோர் வருடாந்தக் கலை நிகழ்ச்சி எனப் பல வழிகளிலும் உற்சாகமாக முன்னேற உடனிருந்து ஊக்குவிப்பதில் சங்கம் என்றுமே பின் நின்றதில்லை.தற்போதைய கௌரவ வெளியீட்டுத் துறைச் செயலாளர் திரு. வி.சிவனருட்செல்வர் மற்றும் கௌரவ பொருளாளர் சோ.நிரஞ்சன் இருவரதும் பெரு முயற்சியினால் வெளிவரும் 'தோரணம்' எனும் மாதாந்த மின்னஞ்சல் இதழ், சங்கம் சம்பந்தப்பட்ட செய்திகள், நிகழ்வுகளை அங்கத்தவர்களுக்கு எடுத்துச் செல்வதில் மிகச் சீராகச் செயறபட்டு; வருகின்றது.

40வது ஆண்டு விழாவினைக் குதூகலமாகக் கொண்டாட தயாராகிக் கொண்டிருக்கும் சங்க அங்கத்தினர்;, இவ்விழாவிற்கு முத்தாய்ப்பு வைத்தாற்போல '40இல் திருமணங்கள் 40' என்னும் பெரியதோர் திட்டத்தைச் செயல்படுத்துகின்றனர். தாய்மண்ணையும, தாய்ச்சங்கத்தையும்; இரு கண்களாகப் போற்றும் பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கம், தாய் மண்ணில் வறுமைக் கோட்டுக்கு அடியில் உழலும் 40 இளையோரைத் தம்பதிகளாக்கி மகிழ விழைகின்றனர்.;; இத்திட்டத்தின் ஆரம்பமாக 05.08.2017இல் சங்க ஆலயத்தில் இறைவனுக்குத் திருக்கல்யாணம் செய்யப்பட்டது. இத்திட்டத்திற்கு ஆதரவளித்த அன்பர்கள் அனைவரும் ஆலயத்திற்கு அழைக்கப்பட்டு அனைவருக்கும் சற்கற்பம் செய்;யப்பட்டு, அருகரிசி மூலம் அவர்களனைவரது ஆசீர்வாதமும் பெறப்பட்டது. அதே அருகரிசி இலங்கைக்கு அனுப்பப்பட்டு 40 திருமணங்களிலும் குருக்கள் மூலம் மணமக்கள் இவ்வரிசியால் ஆசீர்வதிக்கப்படவுள்ளனர். மணமக்களுக்கான தாலி,கூறை,பட்டுவேட்டி சால்வை, மோதிரங்கள், திருமணச் செலவு, அத்தியாவசிய வீட்டுப்பாவனைப் பொருட்கள் அத்தனையும் சங்கத்தின் அன்பளிப்பே என்பதும் குறிப்பிடத்தக்கது.எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15ம் நாளில் கொழும்பு பம்பலப்பிட்டிய மாணிக்க விநாயகர் ஆலயத்தில் தமது நெடுநாளைய கனவு வெகு விரைவில் நனவாகப் போவதில் சங்கம் பெருமிதமடைகின்றது.

மனித நேயத்துடன், வாழ் மண் சுகத்தில் தாய் மண்ணை மறவாது சிறப்பான செயற்திட்டங்கள் மூலம் உலகத் தமிழர்கள் மனதில் ஒளிவிளக்காக வாழும் பிரித்தானியா சைவ முன்னேற்றச்சங்க அங்கத்தவர்கள் தமக்குள் பெருமைப்பட்டுக் கொள்ளும் ஒரே விடயம், ஒன்றுண்டு. சங்கத்தின் 40 ஆண்டு கால வரலாற்றில், வருடாந்தப் பொதுக் கூட்டங்களில் 25 ஆட்சிக் குழு உறுப்பினர்களும் போட்டி இன்றி, தேர்தல் இன்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர். இந்நாட்டில் வேறு எந்த ஒரு சங்கமும் கடைப்பிடிக்காத இந்த வழிமுறை ஏனைய சங்கங்களுக்கு ஒரு முன்மாதிரியாகவும், எடுத்துக்காட்டாகவும் அமைகின்றது. பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்;கத்தின் சாதனைகளில் மிக முக்கியமான சாதனை இதுவெனச் சொல்லுதல் சாலவே பொருந்தும்.

40 ஆண்டுகளைப் பூர்த்தி செய்யும்புரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கம் வளர் பிறையென வளரவேண்டும். குன்றாத கொடைகள் செய்து, குறைவற்ற ஆயுளுடன் உலகத் தமிழர்களின் உறவு பேணி பல்லாண்டு காலம் வாழ்க, வளர்க என வாழ்த்துவோம். •

## நிர்வாணம் தொடர்ச்சி

அதி சிறந்த காதல் காவியம். விருதுகள் பல பெற்ற படம் நண்பர்கள் கூறுகிறார்கள். நாமும் சொல்கிறோம். காதல் காவியத்தின் கதைச் சுருக்கம் இது.

பதினெட்டு வயது நிரம்பிய சிந்திக்கவே ஆரம்பிக்காத வாழ்க்கை என்றால் என்னவென்றே விளங்காத ஒரு யுவனும் பருவமடைந்து ஒரு சில நாட்களேயான ஒரு யுவதியும் உடலில் சுரக்கும் ஹார்மோன்களின் இரசாயணம் விளங்காது அதன் இரகசியம் புரியாது ஒருவர் மீது ஒருவர் உந்தப்பட்டு வீட்டைப் பகைத்து நாட்டைப் பகைத்து இரவோடிரவாக ஓடிப் போகிறார்கள். அழுத்தமான காதல் காவியம் இது! பரவசப்படுகிறோம் நாம்!

மொத்தத்தில் நம்மைச் சுற்றிலும் எங்கும் குப்பை எதிலும் குப்பை எல்லாமே குப்பை பெரும்பாலான சமயங்களில். இதன் விளைவாக நாம் பார்ப்பது குப்பை கேட்பது குப்பை சிந்திப்பது குப்பை. பெரும்பாலான சமயங்களில்.

நமது இத்தனை சீர்கேடுகளையும் பார்த்துவிட்டு ஒரு தாய் சேயின் பசியறிந்து பாலூட்டுவது போல நம்மைப் பார்த்து பரிதாபப்பட்டு இரக்கப்பட்டு "நீ புறத்தே பார்த்தது கேட்டது போதும் அது உனக்குத் தேவையில்லை. நன்மை விளைவிக்காது. உனது பார்வையை அகத்தே செலுத்தி உன்னை அறிந்து அதன் மூலம் என்னை அறிந்து ஆன்ம ஈடேற்றம் அடைவாயாக" என்று பரமன் ஐம்பது வயதில் நமது கண்பார்வையைக் குறைக்கிறான். கேட்கும் சக்தியைக் குறைக்கிறான்.

புரிந்து கொண்டோமா நாம்? விட்டு விடுவோமா நாம்? கண்பார்வை குறைந்ததும் கண்ணாடி அணிந்து கொண்டு 'ஸன்' பத்திரிகையின் மூன்றாம் பக்கத்து அழகியின் அங்கங்களை முன்னை விட அதி மும்மரமாக ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறோம். கேட்கும் சக்தி குன்றியதும். கேட்பதற்கு துணை செய்யும் கருவியை காதில் மாட்டிக் கொண்டு அடுத்த வீட்டுச் சண்டையை மிக உன்னிப்பாகக் கேட்கிறோம்.

இப்படி நாம் வளர்த்த வளர்ந்த மனம் நமக்குள் இருக்கும் போது எப்படிக் கிடைக்கும் நமது வாழ்வில் மகிழ்ச்சி? எப்படிக் கிடைக்கும் நமக்கு முத்தி? எப்படி முடியும் நமது சம்சார சாகரம்? இதன் விளைவு- மீண்டும் மீண்டும் தாயின் கருப்பை மீண்டும் மீண்டும் பிறப்பு. மீண்டும் மீண்டும் துன்பம். பரமனால் கூட காப்பாற்ற முடியாது நம்மை.

அதே சமயம் ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது அறைக்கதவைத் தாளிட்டு சுகாசனத்தில் அமர்ந்து கண்களை மூடி உள்ளே செல்லும் மூச்சையும் வெளியே வரும் மூச்சையும் நிதானமாக அவதானித்து அந்த அவதானிப்பிலேயே மனத்தை மறந்து ஒரு நிமிடம் மறந்து ஒரு மணித்தியாலம் மறந்து இருபத்தி நாலு மணி நேரமும் மறந்திருக்கத் தெரியும் போது அந்த மறப்பில் நம்மை நாம் தரிசிக்கும் போது அந்த ஆனந்தத்தில் திளைக்கும் போது பரமனால் கூட தடுக்க முடியாது நமது முத்தியை.

காரணம்- அப்பொழுது நாம் பூரணம்.

போர்வைகளற்ற நிர்வாணம் இந்த அவதானம்.

அகத்தே மாசில்லாதவனுக்கு நிர்வாணம் ஒரு புனிதம்.

அது ஒரு சத்தியம்.




# LycaFly

**CALL 0207 132 32 32**
lines open **24x7**

# NO.1 Agent to **COLOMBO**

fr **£391**

**LIMITED** availability

## FLIGHT OFFERS

| | |
|---|---|
| CHENNAI | fr £396 |
| TRICHY | fr £509 |
| KOCHI | fr £395 |
| MUMBAI | fr £368 |
| DELHI | fr £375 |
| MELBOURNE | fr £596 |
| NEW YORK | fr £369 |
| TORONTO | fr £355 |
| BANGKOK | fr £465 |
| DUBAI | fr £243 |

The fares above include taxes and are subject to availability.

## HOLIDAY OFFERS




The prices above are from & include flights. Subject to availability.

# £20 FREE LYCAMOBILE
**CREDIT WHEN YOU BOOK WITH US**
*T&Cs Apply

Fly Now Pay Later

**FAST, FLEXIBLE, FINANCE FOR TRAVEL**
Easy instalments from 3 – 10 months to pay your travel cost.

**SAVE TIME & MONEY. COME TO THE BEST & GET THE BEST**

IATA

**WEMBLEY**
14 Ealing Road, Wembley,
London HA0 4TL · 0207 132 0055

**EAST HAM**
180 High Street North,
East Ham E6 2JA · 0207 132 0056

**CANARY WHARF**
Walbrook Building, 195 Marsh Wall
London E14 9SG · 020 7132 0100

All fares shown above are subject to availability. The Lycamobile top-up offer applies for fully paid adult return tickets and excludes Jet Airways and Emirates bookings. Top up must be redeemed within 30 days of booking. This offer is not valid for any of the bookings made online. Not to be used in conjunction with any other offer. Full terms are available on our website. LycaFly reserves the right to withdraw this offer before the expiry date, without notice.




** T&C's applies. Visit the web for more information.
Lycaremit is the trading name of Lycamoney Financial Services Limited, and is regulated and authorised by the Financial Conduct Authority. Registration number 900153. Registered office: Walbrook Building, 195 Marsh Wall, London. E14 9SG. Company Registration number 08662355 ***The collection method will vary depending on the destination country for the money transfer, visit lycaremit.com for more information.

LMFS Lycamoney Financial Services Ltd